ஸ்ரீமுக—கார்த்திகை-மார்கழி

1933—34.

பாரதி

மாலை 5. மணி 8 & 9.

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

OFFICE OF THE REGISTRA
21 FEB 193
MADRA

N33.5.8-9
197896

Cardamom Sale Company, Limited.

(ஏலக்காய் விற்பனைக்-கம்பெனி, லிமிடெட்,)

தேவாரம்.

1913-ம் வருத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டுலு செட்டியார்,

மானேஜிங் டைரக்டர்,

ஏலக் காய் முற்பனைக் கம்பெனி, லிமிடெட்

தேவாரம்,

மதுரை ஜில்லா.

இந்திய மூலதனம்!

தமிழ் நாடு அஷ்யூரன்ஸ் & பாங்கிங் கம்பெனி Ltd.,

போடிநாயக்கனூர்.

ER.
OFFICE OF THE REGISTRAR ...
21 FEB 193
MADRAS

அக்கிராசனதிபதி:

பெரியகுளம் தாலூகா போர்ட்
பிரஸிடெண்டும் போடிநாயக்கனூர் பிரபல லாண் லார்டுமான

1. மகா-ா-ாஸ்ரீ S. A. ரெங்கசாமி செட்டியா ரவர்கள்.

டைரக்டர்கள்:

2. ,, S. P. சுல்தான் அஹமெட் பதாதீன் ருவுத்தர் அவர்கள், லாண் லார்டு, போடி.
3. ,, V. புன்னைவனம் பிள்ளை, லாண் லார்டு & முனிசிபல் கவுன்சிலர், போடி.
4. ,, B. K. ஒன்னுராம் செட்டியார், லாண் லார்டு, போடி.
5. ,, S. S. M. பழனியப்பன் செட்டியார், வர்த்தகம், போடி.
6. ,, T. S. சாமிநாதன் அவர்கள், K. D. H. P. Co. Ltd., மூணார்.
7. ,, Dr. ஜான் ஜோசப், தந்த வைத்தியர், பெரியகுளம்.
8. ,, P. O. நயினன், கொட்டகுடி ரோட் ஓவர்சியர், போடி.

மானேஜிங் டைரக்டர்:

9. ,, T. S. கிருஷ்ணசாமி அய்யர், கொட்டகுடி ரோப்வே, போடி.
10. ,, செக்ரட்டரி: பாஸ்கரன்.

மேற்கண்ட கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த டைரக்டர்களால் இக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடந்து வருகிறது. அன்னிய நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் மூலமாக நமது திரவியம் அகலுவதை நிறுத்தி, இக் கம்பெனியில் சேர்ந்து பாலிசி எடுத்துக்கொண்டு பொருள் சேகரிக்க முயலுங்கள். எல்லா விவரங்களுக்கும் இக் கம்பெனி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசிய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்)

திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதியது.

"பாரதி" ஆசிரியர்

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் பதிப்பித்தது.

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம், தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறதா?

கிரௌன் 1/8 சைஸ் கிளேஸ் பதிப்பு.

240 பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ *1*.

தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

சன்மார்க்கன்.

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

நாவலாற்று சாமி சிவநேசம் அவர்களை ஆசிரியராகப் பெற்றுச் "சன்மார்க்கன்" பகுத்தறிவுக் கேற்றவாறு மக்கட் பிறப்பில் உயர்வு தாழ்வாகிய சாதி, சமய வேற்றுமைப் பிணக்குகளைக் களைந்து, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரத்துவமான உரிமைகளைப் பெறும் வழிகளும், உயரிய கட்டுரைகளும் நிரம்பப் பெற்று வெளிவருவது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 2 அணா.
அயல் நாடு ,, 1—8—0.

விலாசம்:

மானேஜர், "சன்மார்க்கன்."

திண்டுக்கல்.

ER.

"பாரதி"

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

ஸ்ரீமுக சித்திரை முதல் 5-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாலிகை

"பாரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ *2/=* அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு ,, ரூ *3/=* ,, **5** ,,

போஷக சந்தா குறைந்தது ரூ *100/=*

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.

இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. இந்தியா.

ஈழகேசரி.

வட இலங்கையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தோறும் 12 பக்கங்களுடன் வெளிவருவதோர் சிறந்த வாரப் பத்திரிகை.

(நான்காவதாண்டு)

இலங்கை, இந்தியா, பர்மா, மலாய்நாடு முதலிய விடங்களில் ஏராளமான சந்தாதாரர்களையுடையது.

சிறந்த பேரறிஞர்களால் எழுதப்பெறும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அரிய கட்டுரைகளும், வரலாற்று ஆராய்ச்சி, அரசியல், பொருளாதார நிலை, சமயம், கல்வி, மாதர் பகுதி, சிறுவர் பகுதி, சமூக முன்னேற்றம் முதலிய பொது விஷயங்களும், வர்த்தமானங்களும் சிறப்பாக வெளிவருகின்றன.

தமிழன்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம்.

ஆண்டுச் சந்தா:

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா **4.**

மலாய் நாட்டுக்கு வெள்ளி **4.**

மாதிரிப் பிரதி இனம்! உடனே எழுதுங்கள்!!

விலாசம்:

“ஈழ கேசரி” அதிபர்

சுன்னாகம், இலங்கை.

M. SULTAN ABDUL KADER.

SULTANIA MEDICAL HALL.

Portonovo P.O., S. A. District, India.

கனதனவான்களே! முக்கியம்!! கவனியுங்கள்!!!

ஒரே வேளையில் குணந் தெரியும்.

நாதங் கெட்ட தேகத்தைக் காக்கும்! நாள்பட்ட ரோகத்தைப் போக்கும்!!

மன்மத சிங்கம்போல் செய்திடும்!!!

மெடல் பெற்ற

சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

வெண்பா.

பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடிறக்கி பண்ணுங்காண்-பூவினையிற்
கட்டுற்ற மாதர்களை கைகுவித்துக் கொஞ்சுவிக்கச்
சிட்டுக் குருவித் திறம்.

இந்தச் சிட்டுக்குருவி சத்தின் லேகியத்தைப் போல் மற்ற வைத்தியர்கள் செய்து கொடுத்தால் **2,000 ரூபாய் இனாம்!**

இந்த சிட்டுக்குருவி சத்தின் லேகியத்தில் ஓர் அபூர்வ சக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதன் அருமை தெரியும். இதை காலை மாலையில் உபயோகித்து ஒரு மண்டலம் (40-நாள்) உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும், பலத்தையும் கொடுத்து இந்திரியத்தை மணிபோல் கட்டி இழந்து போன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படிச் செய்கிறது. இக் குணம் இதில் அமைந்திருப்பது மகா ஆச்சரியமாக இருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டா என்று பிரமிக்கச் செய்கின்றது. தாதை கட்டுவதில் அபார சக்தி வாய்ந்தது. இதன் ரகசிய பெருமை எழுத முடியாது. நல்ல ஜீரணசக்தி, பசி, ரத்த விருத்தி உண்டாகும். இந்திரிய விருத்தியும், இந்திரிய புஷ்டியும், இந்திரியக் கட்டும், தாதை மணியாக்கி ஆனந்தத்தையும், இன்பத்தையும் கொடுக்கும் அபாரசக்தி வாய்ந்தது. சங்கம காலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஓர் நூதன இன்பம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாக இருக்கிறது.

கனதனவான்களே! நீங்கள் இதுவரையில் எத்தனையோ வித லேகியங்கள் சாப்பிட்டு இருப்பீர்கள். ஆனால் இந்த லேகியத்தில் அமைந்திருக்கும் குணங்களைப்போலுள்ள லேகியத்தை இதுவரையில் சாப்பிட்டிருக்கமாட்டீர்கள். ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

40-நாள்	80-வேளை	16-பலம்	டப்பி 1-க்கு	ரூ. 12—0—0.
20-நாள்	40-வேளை	8-பலம்	டப்பி 1-க்கு	ரூ. 6—8—0.
12-நாள்	24-வேளை	5-பலம்	டப்பி 1-க்கு	ரூ. 3—8—0.
6-நாள்	12-வேளை	$2\frac{1}{2}$-பலம்	டப்பி 1-க்கு	ரூ. 2—0—0.

வி. பி. செலவு வேறு.

டஜன் கணக்கில் ஆடர் செய்பவர்கள் ரூ. 5—0—0 அட்வான்ஸ் அனுப்பி பாக்கித் தொகைக்கு வி. பி. யில் பணம் கட்டி பார்சலை பெற்றுக்கொள்ளவும்.

நெட்டால், பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிரதேச வாசிகள் மருந்தின் கிரயமும், தபால் சார்ஜ் ரூ. 2—8—0யும் முன் பணமனுப்பி மருந்து பெற வேண்டும். ஷை ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்களை அங்கீகரிக்கப் பட மாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும். கனவான்கள் ஒரு தடவை பரீட்சை செய்யவும். பல ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். ஆர்டர் செய்யும் போது இந்த பேப்பரில் கண்டதாக எழுதவும்.

☞ எமது விலாசம்:—எம். சுல்தான் அப்துல் காதிர்,
சுல்தானியா வைத்தியசாலை, பரங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா. (இந்தியா)

☞ சிலோனுக்கு சோல் ஏஜண்டு:—S. E. காதர் முகியதீன்,
நெ. 39, கிழக்கு கடைத் தெரு, கொழும்பு.

☞ எமது தைப்பிங் சோல் ஏஜண்டு:—U. S. பெரியசாமி சேர்வை,
நெ. 166, மெயின் ரோடு, தைப்பிங் P.O., பேராக் F.M.S.

☞ பினங்கு சோல் ஏஜண்டு:-ஹாஜி A.S. காதர் ராவுத்தர் கம்பெனி,
நெ. 80, சோலியா ஸ்டிரீட், பினங்கு, S. S.

☞ எமது ஈப்போ சோல் ஏஜண்டு:—R. கோவிந்தராஜலு,
நெ. 56, பெல்பீல்டு ஸ்டிரீட், ஈப்போ, F.M.S.

☞ எமது மலாக்கா சோல் ஏஜண்டு—S.A. அப்துர் ரஹிமான் சாஹிபு,
நெ. 2344, ஷாப்புக்கடை, மஸ்ஜிட்தான P.O., மலாக்கா, S. S.

"பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு	ரூ	10—0—0
,,	,,	$\frac{1}{2}$-க்கு	,,		5—8—0
,,	,,	$\frac{1}{4}$-க்கு	,,		3—0—0
கவர்	,,	2 & 3	,,		15—0—0
,,	,,	4	,,		20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

அழகான என்லார்ஜ்மெண்டுகள்! பேர் பெற்ற வேலைகள்!

வருஷாந்திர அறிக்கை.

சில நாட்களுக்கு மட்டும் கீழ் குறிப்பிட்டிருக்கும் போட்டோக்களும், ஆர்டிஸ்டிக் புரோமைட் என்லார்ஜ் மெண்டுகளும் குறைந்த சார்ஜுக்கு படங்கள் எடுத்துக் கொடுக்கப்படும். பழைய சிறிய போட்டோக்களை புதுப்பித்தும், பெரிதாகச் செய்தும் நவநாகரீகத்திற் கேற்றவாறு செய்து கொடுக்கிறோம். இவ்வரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள். வேலைப்பாட்டின் திறனை ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

மவுண்டின் அளவு.	படத்தின் அளவு.	காப்பிகள்.	சார்ஜ்.
12 × 10	$8\frac{1}{2} \times 6\frac{1}{2}$	1-க்கு	ரூ. 3–0–0.
14 × 10	10 × 8	1-க்கு	ரூ. 4–0–0.
15 × 12	12 × 10	1-க்கு	ரூ. 6–0–0.
20 × 16	15 × 12	1-க்கு	ரூ. 8–0–0.

இதற்கு மேற்பட்ட பெரிய சைஸ் தேவையுள்ளோர் கடிதங்களின் மூலமாகவும் நேரிலும் தெரிந்துகொள்ளலாம்.

(*Sd.*) ***K. M. B. S. Mani Brothers.***
Artists and Photographers,
BODINAYAKANUR P. O.,
Madura Dist., S. India.

நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

1.	நெப்போலியன் போனபார்ட்	0—4—0
2.	முத்தண்ணா (ஓர் துப்பறி கற்பிதம்)	1-12—0
3.	தென் இந்தியா விவசாய நூல்	1—4—0
4.	பனத சங்கரி (ஓர் துப்பறியும் நவீனம்)	1—0—0
5.	ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மீபாய் சரித்திரம்	0—2—0
6.	போலந்து நாட்டின் சுதந்திரம்	0—1—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

பொருள் அடக்கம்.

மாலை 5. ஸ்ரீமுகவரு கார்த்திகை-மார்கழிமீ மணி 8 & 9.

தொடர் எண்.		பக்கம்.
1.	அருட்சோதி—	569
2.	தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நிலை—ஆசிரியர், "பாரதி."	570
3.	பெண்ணுரிமை—திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள் ...	573
4.	மாற்றாந் தாய்—திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள், B. A., B. L.	579
5.	மதப் பித்தும் அதன் செய்கைகளும்— திரு. T. L. ரகுபதி சர்மா அவர்கள், M. A., L. T.	585
6.	ஸ்வாமி விவேகானந்தரின் கடிதங்கள்— திரு. K. வெங்கடராவ் அவர்கள்	592
7.	இந்திய இளைஞர்களே, இன்னும் உறக்கமா?— திரு. ஆறு நாகநாதன் அவர்கள்	596
8.	ஆத்திசூடியின் அருமை—திரு. ரகுநாதன் அவர்கள் ...	598
9.	எனது யாத்திரை—திரு. B. S. சங்கரன் அவர்கள் ...	602
10.	பொருளாதார நெருக்கடியும் ரூஸ்வெல்டும்— திரு. E. பரமசிவம் அவர்கள், B. A.	607
11.	சிறு கதை வளர்ச்சி—திரு. ப. சுருளிவேல் அவர்கள் ...	610
12.	தீண்டாமை விலக்கு—திரு. வெ. இராமச்சந்திரன் அவர்கள்	615
13.	சாஸ்திர ஆராய்ச்சி—திரு. என். வேங்கடரமணன் அவர்கள்	619
14.	க்ஷத்திரிய தாராபாய்— திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ...	623
15.	நம் நாடும் கத்தரும்—திரு. A. ராமசாமி அவர்கள் ...	630
16.	வாழ்க்கையின் மாயம் —"ஞான விநோதன்" ...	634
17.	எங்கள் தந்தையர் நாடு— திரு. ஸ்ரீவை. R. வெங்கடாசலம் அவர்கள்	646
18	ஆசிரியக் குறிப்புகள்— ...	648

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்திய மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர். ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை 5	ஸ்ரீமுக-கார்த்திகை 1933-வரு நவம்பர்-டிசம்பர்மீ	மணி 8

அருட்சோதி *

("பித்தா பிறைசூடி" என்னும் தேவார மெட்டு.)

1. நீயேயெனை ஏலாய், நெறி உதவாய், அருட்சோதீ!
ஓயாதிருள் வழியெங்கணும், வீடும் உயர்தூரம்;
போயின் வழி பொருந்தும் எதும் முன்காணியவேண்டேன்;
நாயேன் ஒருஅடி பேரவும் நயந்தாலுமே நன்றே!

2. மேனாள்களில் இவ்வாறிலை; வேண்டா துணைதருளை,
நானேவழி தெரிவேனென நயந்தேன் நலம் தீதே;
தானையுறும் பயமென்னினும், தளராதகங் காரம்;
போநாள்களை மறந்தே. அவை பொறுத்தின்றெனை ஆளாய்!

3. இது காறுமே அளித்தாய்; இனி அருள்வாயென நினைவேன்;
பொதியா விருளூடே, புனல், குழி, மேடுகள், புதராம்,
வதியாவுமே கடந்தே, இரவொழிந்தே, மனமகிழ்ந்தே,
கதியாயுனை அடையும் வரை, காவாயெனை நீயே!

---

*Adapted from Cardinal Newman's "*Lead, Kindly light.*"

தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நிலை.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

இந்தியர் முற் காலத்தில் பற்பல அயல் நாடுகளுக்கும் சென்று, வியாபாரம் செய்து, பொருள் தேடிவந்தனர். சிலர் மதப் பிரச்சாரம் செய்வதற்காகச் சென்றனர்; சில அரசர்கள் நாடுகளை வென்று, தங்கள் ஆதீனத்தை ஸ்தாபிக்கச் சென்றனர். இதற்குச் சாட்சிகளாக ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில் பல இந்தியச் சின்னங்கள் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தேச வளர்ச்சியிலும் இந்திய நாகரீகமோ அல்லது உழைப்போ கலந்திருக்கிறது. எகிப்திய நாட்டிலும் தமிழ் வாடை வீசியிருந்தது என்று பண்டிதர் திரு. ராகவய்யங்கார் கூறுகிறார். ஆப்பிரிக்காவின் அபிவிருத்திக்கும் இந்தியா அதிகமாய் உதவி யிருக்கிறது.

இந்தியாவில் பழக்கம் பெற்ற இந்தியர்களால் நைல் நதிக்கு அணைகட்டி எகிப்து தேசத்தில் நீர்ப்பாய்ச்சி விவசாயம் செய்கிறார்கள். பயிற்சி பெற்ற இந்திய உத்தியோகஸ்தர்கள் மூலமாகவே தென்னாப்பிரிக்காவிலும், மத்திய ஆப்பிரிக்காவிலும், மற்ற தேசங்களிலும் அநேக மூலப் பொருள்களை அடைந்திருக்கிறார்கள். உலகத்தின் மறைபட்ட இடங்களை இந்திய சர்வேயர்களாலேயே ஆங்கிலேயர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களுடைய புதிய பூமிகளைப் பாலும் தேனும் ஓடும்படியாகச் செய்தவர்கள் இந்தியர்களே. இன்று இங்கிலாந்து செல்வத்தில் சிறந்து விளங்குவதற்குக் காரணம் என்ன? இந்தியாவின் பணமே, இங்கிலாந்தைப் பணம் கொழிக்கும் நாடாகச் செய்திருக்கிறது. இப்பொழுது இங்கிலாந்து உலகின் வல்லரசுகளில் ஒன்றாய் விளங்குவதற்கு இந்தியச் சைன்யம் முன்னாலும் சென்ற ஐரோப்பியப் பெரும் போரிலும் உதவியதே முக்கிய காரணமாகும்.

எவ்வளவோ வசதிகள் செய்து கொடுப்பதாயும், பல உரிமைகள் கொடுப்பதாயும், இந்தியத் தொழிலாளர்களை இந்தியச் சர்க்கார்

நண்பனே! விழி! எழுந்திரு! உன் கடமையை மறவாதே. இன்னுமா

மூலம் தென்னாப்பிரிக்காச் சர்க்கார் அழைத்தது. காடுகளால் நிறைந்த பிரதேசங்களையும், கேவலமான பூமிகளையும் இந்தியர் தங்கள் அபார உழைப்பால் செழிப்பான தேசமாக மாற்றி யிருக்கிறார்கள். நல்ல நல்ல கனி வகைகளும், பற்பல காய்கறி வகைகளும், நானாவிதத் தானிய வகைகளும் உண்டாகும் பூமியாகத் தென்னாப்பிரிக்காவைச் செய்த பெருமைத் தமிழர்க்கே உரியது. இந்தியத் தொழிலாளர்களைப் பின்பற்றிச் சில இந்திய வியாபாரிகளும் சென்றார்கள். இந்தியர்களுடைய உழைப்பையும் முன்னேற்றத்தையும் கண்டு, பிழைக்க வந்த ஐரோப்பியர்கள் முக்கியமாய் ஆங்கிலேயர்கள் பொறாமை கொண்டார்கள். இந்தியர்களுடைய அபிவிருத்தியைத் தடுக்கும் பொருட்டு அநியாய அனாவசியச் சட்டங்கள் செய்தார்கள். இந்தியர்கள் ஆப்பிரிக்காவைச் சொந்த நாடாகக் கருதி வாழ்ந்த போதிலும் அநேகர் அத் தேசத்தில் பிறந்து வளர்ந்தவர்களா யிருந்த போதிலும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதா யிருந்தால், அச் சர்க்காருக்கு அதிகமான தொகை அபராதமாகச் செலுத்தப்பட வேண்டி யிருந்தது. வெள்ளை நாகரீகத்தை ஆப்பிரிக்காவில் காப்பாற்றி நிலை நிற்கச் செய்ய வேண்டியதே தங்களுடைய முதற் கடமை என்ற எண்ணம் வெள்ளையருக்கும் ஆழ்ந்து பதிந்து கிடக்கிறது. சுதேசிகளுக்கு ஆப்பிரிக்காவில் விதிக்கப்படும் கொடுமையான வரிகளையும், மற்ற அக்கிரமங்களையும் நீக்கும் பொருட்டு மகாத்மா காந்தி அவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார். இச் சங்கதியைப் பற்றி உலகமறியும்.

உண்மையாகக் கூறுமிடத்து வெள்ளையர் ஆப்பிரிக்காவில் குடியேறுவதற்கு முன்பே இந்தியர் அங்கு சென்றிருக்கிறார்கள். நிறச் செருக்கும் பொறாமையும் கொண்டு இந்தியர்களை அந் நாட்டை விட்டு அகற்றப் பார்க்கிறது அந்த அரசாங்கம். இப்பொழுது அங்குள்ள இந்திய சமூகத்தினருள் 100-க்கு 85 பேர் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர்கள். வெள்ளையர்களுக்குத் தென்னாப்பிரிக்காவில் எவ்வளவு உரிமைகள் உண்டோ அவ்வளவு இந்தியருக்குமுண்டு என்பதை தென்னாப்பிரிக்காச் சர்க்கார் மறக்கின்றது, மறுக்கின்றது, ஆச்சர்யமா யிருக்கிறது. தென்னாப்பிரிக்காத் தங்களுக்கே சொந்தமானதென்றும், இந்தியர் அன்னியர் என்றும், அவர்களை நாடு கடத்திவிட வேண்டுமென்றும் அச் சர்க்கார் செய்த—செய்கிற சூட்சிகளை இந்தியர் அனைவரும் வெறுத்துக்கொண்டு வருகிறார்கள். இவைகளையெல்லாம் விவரித்தால் பெரிய புஸ்தகமாய் முடியும்.

ஆசியாக்காரர் தடை மசோதா அங்கு தோன்றியது. அங்கிருக்கும் இந்தியரிடையில் மிக மிக உணர்ச்சியும் பரபரப்பும் தோன்றி

அதிகாரத்தால் அடக்கி அடையும் வெற்றி நீடித்து நிற்காது.

யது. தாய் நாட்டிலும் சுதந்திரமில்லை யாகையால் ஒன்றும் செய்வதற்கில்லை. இந்தியர்களுக்கு உதவி செய்ய இந்தியச் சர்க்கார் ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்பி வைத்தது. ஏதோ இம் மசோதா நிறுத்தப்பட்ட போதிலும், 1927-ம் ஆண்டில் கேப்டவுன் மகாநாட்டின் பயனாக இந்தியர்களுக்கு உதவி யளித்துத் தாயகத்திற்கு அனுப்பி வைக்கும் திட்டம் ஏற்பட்டது. இதன் பயனாக 13 ஆயிரம் இந்தியர் அங்கிருந்து இந்தியாவிற்கு வந்தனர். அதைத் தவிர்த்து இந்தியர்களுக்குப் புதிய நிர்ப்பந்தங்களும் அந்த கவர்ண்மெண்டார் உண்டாக்க ஆரம்பித்தனர். ஆசியாக்காரர் தடைச் சட்டம் டிரான்ஸ்வாலில் நிறைவேறியது. இச் சட்டம் இந்தியர்களுக்குப் பெருந் தீங்கை உண்டாக்கிக் கொண்டு வருகிறது.

அந் நாட்டிலிருந்து திரும்பிய இந்தியச் சோதரர்கள் இங்கு உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி பிட்சை கேட்க வழி யறியாது, தங்கத் தாழ்வாரமின்றி அவதிப்படுவதைச் சொல்லி முடியாது. அவர்களது சாரமெல்லாம் தென்னாப்பிரிக்காவில் பிழிந்தெடுத்துக் கொண்ட பிறகே அவர்களை இங்கே தள்ளியிருக்கிறது அந்த அரசாங்கம். தாயகத்தில் அவர்கள் படும்பாடுகளைச் சொன்னால் கல்லுங் கரையும். 1932-ம் ஆண்டு ஒரு இந்தியத் தூதுக்கூட்டத்தார் அங்கு சென்று எப்படியோ பேசி, இந்தியர்களை வேறு இடங்களுக்கு அனுப்பிக் குடியேற்றும் திட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள். இத் திட்டத்தின் நோக்கமென்ன? இந்தியப் பூண்டை அந் நாட்டிலிருந்து ஒழிப்பதற்காகவே, தென்னாப்பிரிக்காவிலுள்ள வேறு எந்த நாடுகளில் குடியேற்றலாம் என்பதை ஆராயும்பொருட்டு அங்கு சர்க்காரால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துத் தென்னாப்பிரிக்காவைச் செழிக்கச் செய்த இந்தியர்களுக்கு அங்கிருந்து தூரத்தப்படுவதுதான் வெகுமதிபோ லிருக்கிறது. கொக்கும் ஓநாயும் என்ற கதைபோலிருக்கிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் இதைப்பற்றி அதிகமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டும். எல்லாச் சட்ட சபைகளிலும் அதிகமாகப் பேசி அயல் நாட்டிலுள்ள இந்தியர்களுக்கு அனுகூலமாகத் தீர்மானங்கள் செய்ய வேண்டும். வாக்கு வன்மை பெற்ற உயரிய தேசாபிமானிகள் அங்கும் அயல் நாடுகளுக்கும் அனுப்பிப் பிரச்சாரம் செய்ய வேண்டும். பத்திரிகைகளெல்லாம் இந்த விஷயத்தைப் பற்றி அதிகமாய் அடிக்கடி எழுத வேண்டும். கவர்னர்கள், கவர்னர் ஜெனரல் முதலியோரிடம் தூதுக்கள் செல்ல வேண்டும். இதில் வெற்றி அடைவதற்கு எத்தனை வழிகள் உண்டோ அவைகள் அனைத்தையும் அனுசரிக்க வேண்டும்.

மங்கிப்போன—வெறுக்கப்பட்ட—ஒதுக்கப்பட்ட பெண்மையை உயர்த்து.

பெண்ணுரிமை.

திரு சாமி. சிதம்பரனுர் அவர்கள்.

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்ப
துறுதி யாச்சு. —பாரதியார்

எங்கும் உரிமை வேண்டும்! உரிமை வேண்டும்!! என்று முழங்கப்படுகின்றது. எங்கும் ஒன்றுபடல் வேண்டும்! ஒன்றுபடல் வேண்டும்!! என்று சொல்லப்படுகின்றது. இந் நிலைமையில் "பெண்ணுரிமை! பெண்ணுரிமை!!" என்று கேட்கும் முழக்கம் வியப்பை விளைப்பதாகாது. "பெண்ணுரிமை வேண்டும்" என்று கேட்கப்படுவதும் இயல்பே எனக் கருதிக் குறை கூறாது அமைவதே பழமையில் பற்றுடைய ஆன்றோர்க்கு அறிவுடைமையாகும்.

"பெண்ணுரிமை" என்னும் சொல் பண்டை நாளில் பெண் மக்களுக்குப் பேச்சுரிமையும், வெளியில் நடமாடும் உரிமையும், தம் நிலையைச் சிந்திக்கும் உரிமையும், கல்வி கற்கும் உரிமையும் இல்லாத காலத்தில் வழங்கியிருக்க முடியுமா? சிந்தித்து விடை யிறுத்தாலும் "இல்லை" என்றுதான் இயம்ப வேண்டி யிருக்கிறது. பெண்கள் சிறிது கல்வி யறிவு பெற்ற பின்னர்—தங்கள் உரிமையை உணரத் தொடங்கிய பின்னர்—தாமும் மற்ற ஆண் சமூகத்தைப் போல ஆறறிவு படைத்தவர்கள்தான் என்று அறிந்த பின்னர்—"பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல்" என்னும் வாய்ப் பூட்டுத் திறந்த பின்னர், தமது உரிமையைப் பற்றிப் பேச முன்வந்தார்கள். அதனைப் பெற விரும்பிப் போர் தொடுக்கவும், கிளர்ச்சி செய்யவும் முனைந்தனர்.

முன்னாளில் பெண்ணுரிமை பாழ்பட்டிருந்தமைக்குக் காரணம் யாதென்பதை முதலிற் சிறிது சிந்தித்தறிவோம். எக்காலும் வலி

உன் கடமையை மறக்காதே. உன் கடமை எப்பொழுதும் உன் எதிரில் நிற்கட்டும்.

யார் மெலியாரை அடிமைப்படுத்தி ஆள்வது உலக இயல்பு. மக்கள் மிருகப் பிராயத்தினின்றும், அறிவுடையரான காலந் தொட்டு இவ்வியல்பு உலகில் நிலவி வருகிறதென்று கூறலாம். இன்றும் அறிவு வன்மை வாய்ந்தவர்கள் அது வாய்க்கப் பெறாதவர்களை அடக்கியாளுகின்றனர்; செல்வ வலிமை பெற்றவர்கள் அது பெறாதவர்களை அடக்கி ஆளுகின்றனர்; மற்றும் இடம், பொருள், ஏவல் வலிமையுற்றவர்கள் அவை பெறாத மற்றவைகளை அடக்கியாளுகின்றனர். இவ்வாறு முன் காலத்தில் மற்றவர்களைத் தம் கீழ்ப்படுத்தி அவர்கள் மேல் ஆணை செலுத்தியவர்கள் ஆக்கியனவே சட்டம்—நீதி—ஒழுங்குகள் ஆயின. அடக்கப்பட்ட எளியவர்கள் செய்தனவெல்லாம் சட்டத்திற்குப் புறம்பானவை—அநீதி—ஒழுங்கின்மைகள் ஆயின. இதில் சிறிதும் ஐயமில்லை. இங்கே

“வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் பெரிய
வழக்கிற்கு இழுக்கும் உண்டோ?”

என்பது உண்மையுரை! உண்மையுரை!! என்று வியந்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

ஓரினத்தினரால் வகுக்கப்படும் சட்டம்—நீதி—ஒழுங்கு ஆகியவைகள் பிற இனத்தினரின் நன்மையைக் கருதி வகுக்கப்படுவனவல்ல; பெரும்பாலும் தம்மின நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டே வகுக்கப்படும். எவ்வினத்தினர் சட்டம் வகுக்கின்றனரோ அவ்வினத்தினரின் தந்நலமே அச் சட்டத்தின் அமைப்பு என்று கூறிவிடலாம். இவ்வுண்மையை இக்கால அரசியல் போக்கை உணர்ந்தவர்களுக்கு விரித்து விளம்ப வேண்டுவதில்லை.

மேற் கூறிய உலக இயல்பைக் கருத்திருத்தி, மனித சமூகத்திற்குப் பண்டை நாளில் சட்டம் ஏற்படுத்தியவர்களைப் பற்றிச் சிறிது நினைவு கூர்ந்தால் பெண்ணுரிமை பாழ்பட்டதன் உண்மை விளங்கும்; பெண் மக்கள் உரிமை பெறாதபடி அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளின் தன்மை தெரியும். மனித சமூகச் சட்டங்களை—அதாவது சாஸ்திரங்களை முதன் முதலில் வகுத்தவர்கள் பெண்மக்கள் குழுவை, ஆண் மக்கள் குழுவின் நலத்திற்காகவே என்றும் உழைத்து வரக்கூடிய கருவியாக அமைத்துச் சட்டம் வகுத்தனர் என்று முடிவு கட்டுவது தவறாகாதென்றே நாம் கருதுகின்றோம். இவ்வாறு நமது நாட்டில் மட்டிலும் ஏற்பட்டுவிடவில்லை. இக் காலத்தில் பெண்ணுரிமையில் தலைசிறந்து விளங்கும்

உன் முதுகில் ஏற்றியிருக்கும் அறப் பணியைச் சரிவரச் செய்து முடிக்க வேண்டுமென்பதை அறிவாயாக. ஆனந்த சுதந்திரத்தை யடைய ஆவல் கொள். சுத்த நிலையை அடைய முயலுக.

எல்லா நாடுகளிலும் பெண்ணுரிமை பற்றிய பண்டைக் காலச் சட்டம் இவ்வாறே அமைக்கப்பட்டிருந்தது.

“பெண்கள் இயற்கையிலேயே விபசார தோஷமுடையவர்கள் ஆகையால் அவர்கள் அடக்கி ஆளப்பட வேண்டியவர்கள்” என்பது மனு நூற் கருத்து. இது எவ்வளவு தூரம் உண்மையோ? எல்லா உரிமையும் பெற்றிருக்கும் இயல்பினால் இறுமாப்புக்கொண்ட ஆண் மக்களே உலகில் நடைபெறும் விபசாரத்திற்குக் காரணராயிருப்பது கண்கூடு. இதை மறைத்துப் பெண் மக்கள் மேல் பெரும் பழி சுமத்துதல் தகுமோ?

“ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குத் தீனி இரண்டு பங்கும், முற்போக்கான அறிவு நாலு பங்கும், சாமர்த்தியம் ஆறு பங்கும், காமம் எண் மடங்கும் மிகுதிப்பட்டுள்ளன” என்பதையும் சாத்திரங்களில் அமைத்துக் கொண்டனர். இது பெண்களைக் கல்வி கற்கவும், உலகப் போக்கை யறியவும், உரிமை பெறவும் விடக்கூடாது என்பதற்காக வகுக்கப்பட்ட கொள்கையன்றோ? மேற் கூறிய இயல்பை இயற்கையிலேயே பெற்றிருக்கும் பெண்கள், உரிமையும் பெற்றுவிட்டால் ஆண் மக்களின் ஆட்சியை அடக்கித் தாமே ஆளும் குழுவினராய் விடுவர் என்னும் கருத்தை வலியுறுத்தி, இதன் மூலம் பெண் மக்களை அடிமையாகவே வைத்திருக்க வேண்டும் என்று ஆண் மக்களுக்கு உணர்த்துகிறதில்லையா?

“அரசன், கொடி, பெண் மூவரும் தனித்து வாழ்ந்து சிறப்புறுவதற்குரியவரல்லர்; அரசன் அமைச்சர்களைச் சார்ந்து அவர் வழி நின்றும், கொடி படர்தற்குரிய கொம்பைச் சார்ந்து நின்றும், பெண் கணவனைச் சார்ந்து நின்றும் சிறப்புறுவர்” என்னும் பொருள் கொண்ட செய்யுள் வடமொழியிலும், தென் மொழியிலும், பெரு வழக்காகும். இதிலும் பெண்ணின் உரிமை தடுக்கப்பட்டுள்ளதை யறியலாம்.

இனி மத சம்பந்தமாக எடுத்துக்கொண்டாலும் பெண்ணுக்குத் தனியுரிமை இல்லை. கணவனை யன்றித் “தெய்வம்” என ஒன்றைக் கருதி வணங்கவோ, அவை கருதிப் பூசனை புரியவோ, நோன்பு மேற்கொள்ளவோ பெண்ணுக்கு உரிமை யில்லை. சந்நியாச நிலையும், பிரமச்சரிய நிலையும் பெண் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. இவை இந்து மதக் கொள்கை. இவ்வாறே பெண்களை அடிமைப்படுத்தும் நோக்கத்துடன் பண்டைச் சட்டங்களிற் அமைக்கப்பட்டுள்ள விதி

கடமையை அறிந்தும் சோம்பேறித்தனத்தாலோ, சிரமத்தாலோ, நேரமின்மையாலோ, கஷ்டங்களிருக்கின்றன என்ற எண்ணத்தாலோ அல்லது அச்சத்தாலோ உனது கடமையை நழுவவிடாதே.

களை யெல்லாம் திரட்டிக் காட்டுவதென்றால் அதுவே ஒரு பெருநூலாய்விடும் என்பதில் ஐயமில்லை. இனி ஆண்களின் தந்நலத்தை வெளிப்படையாகக் காட்டும் சில கொள்கைகளை மட்டிலும் கூறி மேலே செல்வோம்.

“அழகுள்ள பெண்களுக்குச் சாதி வித்தியாசமில்லை” என்பது ஒரு பண்டைச் சட்ட விதியாகும்.

கற்றவர்க்கும், நலன்நிறைந்த கன்னியர்க்கும், வண்மைகை
உற்றவர்க்கும், வீரர்என்று உயர்ந்தவர்க்கும், வாழ்வுடைக்
கொற்றவர்க்கும், உண்மையான கோதில்ஞான சரிதராம்
நற்றவர்க்கும் ஒன்று, சாதி, நன்மை, தீமை இல்லையால்.

என்பது வில்லி பாரதம். “நலன் நிறைந்த கன்னியர்” எக் குலத்தினரேனும் அவர்களைத் தமதாக்கிக் காம நுகரும் கருத்துடன் ஆண் மக்களால் அமைக்கப்பட்டதன்றோ இக் கொள்கை.

இன்னும் உலக வாழ்க்கை முறையில் பெண் மக்களுக்கு ஆண் மக்களால் இழைக்கப்பட்டிருக்கும் மறத்தை நுனித்து நோக்குங்கள்! தந்தையின் செல்வம் ஆண் பிள்ளைக்கே உரிமையுடையதாம்! பெண் மக்களுக்கு இல்லையாம்! ஆண் மக்கள்தாம் விரும்பியவரை மணந்து கொள்ளலாம்! பெண் மக்கள் தம் பெற்றோர் அல்லது தமது பாது காப்பாளர் விருப்பப்படிதான் மணக்க வேண்டுமாம்! ஆண் மக்கள் எத்தனை பெண் மக்களை வேண்டுமாயினும் மணம் புரிந்துகொள்ளலாமாம்! பெண் மக்கள் மட்டிலும் அவ்வாறு செய்துகொள்ளுதல் அநீதியாம்! ஆண் மக்கள் தமது மனைவி இறந்தால் மறு மணம் புரிந்து கொள்ளலாமாம்! பெண் மக்கள் அவ்வாறு புரிந்து கொள்ளல் ஒழுங்கல்லவாம்! ஆண் மக்கள் மணந்த மனைவியை அகற்றிவிட்டு வேறொரு மணம் செய்துகொள்ளலாமாம்! இவ்வாறு எத்தனை முறை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாமாம்! ஆனால் பெண் மக்கள் மட்டிலும் இவ்வாறு செய்துகொள்ளுதல் கற்பின்மையாம்! “கற்பு” என்னும் பெயரால் இவ்வாறு ஆண் மக்கள் தந்நல வேட்கையுடன் பெண் மக்களுக்குச் செய்யும் கொடுமையை என்னென்று கூறுவது!

கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.

நீ எதற்காக இவ் வுலகில் பிறந்தாய் என்று எண்ணுவாய். உண்பதற்கும், உடுப்பதற்கும், உறங்குவதற்கும், உடற் புணர்ச்சிக்கும், பணத்திற்கும், தற்புகழுக்கும், தன்னையும் பிறரையும் பிறருக்கு அடிமைப்படுத்துவதற்கும் நீ இவ் வுலகில் பிறக்கவில்லை யென்பதை நீ திட்டமாய் அறிக. அவைகளுக்காக நீ வாழ வரவில்லை.

என்பது தற்காலக் கவியின் கூற்று. இவ் வுண்மையை இரு சமூகமும் பின்பற்றினால் அடிமையும், தலைமையும் அகன்று, ஒன்றுபடல் ஆகிய “சமத்துவம்” தழைக்குமன்றோ!

பண்டைத் தமிழகத்தில் பெண் மக்கள் நிலை, அவ்வளவு கொடுமையானதாக இருக்கவில்லை யென்று கூறுதல் தவறாகாது. தமிழிலக்கணமாகிய “அகப்பொருளில்” வழங்கும் “கற்பு”, “களவு” என இரு பிரிவாக வழங்கப்படும் காதல் மணம் தமிழப் பெண்கள் பெற்றிருந்த உரிமையைச் சிறிது விளக்குவதாகும். “வற்புறுத்தி பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கம்” பண்டைத் தமிழகத்தில் இல்லை. இது இடைக்காலத்தில் ஏற்பட்டதாகும்.

“வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை” யான முன்னாளிலும், அவர்களில் பலர் தமது இயற்கைத் திறமையை வெளிப்படுத்துவோராகத் திகழ்ந்தனர். சுண்ணாம்புக் கட்டிடங்களிலும், கருங் கற் பாறைகளிலும் அகப்பட்ட ஆலம் விதைகளிற் பெரும்பாலானவை, அந்த இடங்களின் கடினத் தன்மையால் முளைத்து, வளர்ந்து, தழைக்கும் தமது இயல்பு அழிந்து மாய்வன வேனும், இரண்டொன்று அவைகளில் இடைவெளி கண்டவிடத்து நுழைந்து முளைத்து, வளர்ந்து, தழைத்து அவைகளைப் பிளக்கின்றதைப் பார்க்கின்றோம். இதனால் இயற்கையை மாற்றுதல்—அடக்குதல் எளிதல்ல என்பது புலனாகின்றதன்றோ? சிறிது வசதி கிடைத்தால் இயற்கை உரம் பெற்றுச் செழித்து வளரும் என்பது உண்மையென விளங்குகிறதன்றோ? இது போலவே பண்டை நாளில் பெண் மக்களிற் சிலர் தங்களுக்குக் கிடைத்த சிறு உரிமையைக் கொண்டு பெருஞ் செயல் புரியும் பேராற்றல் படைத்தவர்களாகத் திகழ்ந்தவர்களை ஒவ்வொரு நாட்டு வரலாறுகளிலும் காணுகின்றோம். அத்திபூத்தாற் போல் ஆங்காங்கே தோன்றிய அப் பெண்மணிகள், “பெண் மக்கள் எத்துறையிலும் ஆண் மக்களுக்கு இளைத்தவர்கள் அல்லர்” என்ற உண்மையை நிலை நிறுத்திச் சென்றனர் என்பதில் மாறுபாடில்லை.

பண்டைப் பெண் மக்களில், ஆண்களினும் சிறந்த புலமை படைத்துக் கவிகளாய் விளங்கினோர் சிலர்; பாரகாவியம் இயற்றும் பண்பு வாய்த்திருந்தவர் சிலர்; ஆண்களும் தலை கவிழ அறிவோடும், ஆற்றலோடும் அரசாட்சி புரிந்தவர் சிலர்; அறிவுத்துறை போகிய அமைச்சுத் தொழில் புரிந்தோர் சிலர்' ஒற்றர்களாகவும் தூதர்களாக

ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்கோ சமூகத்திற்கோ தியாகம் செய்வதை விட நாட்டிற்கும் பொதுஜனத்திற்கும் தியாகம் செய்வதே மேலானது.

வும் இருந்து நாட்டுக்கு உயர் பணி புரிந்தோர் சிலர்; வெந்திறல் ஆடவரும் வியந்து அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடுமாறு போர்முனை புகுந்து செருப்புரிந்த வீர வனிதையர் சிலர். ஒத்த உரிமையும், கல்வித் துறையிலும், மற்ற தொழிற் றுறைகளிலும் முன்னேறுதற்கான வசதிகளும் மறுக்கப்பட்ட பண்டை நாளிலும் இவ்வாறு பல வகையிலும் சிறந்த பெண்மணிகள் இருந்தார்களென்றால், பெண் சமூகத்தைச் செயலற்றது—ஆற்றலற்றது என்று யாரால் கூறவியலும்! இஞ்ஞான்றும், உரிமை பெற்ற நாடுகளில் பெண் சமூகம் எத் துறைகளிலும் ஆடவர்களைப் போலவே சம வுரிமை பெற்று முன்னேறுவதைக் காணுகின்றோம்; ஒத்த ஆற்றலுடன் விளங்குவதையும் காணுகின்றோம்.

ஆதலால் இனி பெண் சமூகத்தை அடக்கி வைப்பது என்பது இயலாத செயல். அவர்கள் தமது ஆற்றலையும்—உரிமையையும் உணர்ந்துவிட்டனர். தந்நலம் கொண்ட ஆண் மக்கள் என்னதான் அவர்கள் உரிமைக்கு இடையூறு புரிந்தாலும் அது தடைப்படப் போவதில்லை. ஆதலால் வருங் காலத்தில் "நமது முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த ஆண் சமூகத்தைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்னும் எண்ணம் பெண் சமூகத்திற்கு உண்டாகாதிருக்கும்படி செய்ய வேண்டியதே தற்காலத்திய ஆண் மக்கள் கடமையாகும்.

"எட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்று பகுத்தறிவுக் கவி பாரதியார் கூறியது உண்மை. இனி அவர்கள், தடையிலாது முன்னேறக்கூடும். ஆயினும் ஆண்களும் சிறிது துணை செய்க. இனிப் பெண்மக்களுக்கும்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி"

என்னும் பாரதி வாக்கை உறுதியாக உளம் பதித்து உயர்வடைய வேண்டுவதே உற்ற நெறியாகும்.

தியாகம் இன்றேல் எண்ணிய கருமம் வெற்றியுறாது. தியாகத்திற்குச் சோர்வும் அச்சமும் கூடாது.

மாற்றாந் தாய் *

திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள், B.A., B.L.

மனைவி இறந்த மூன்றே மாதங்களுக்குள் மறு விவாகஞ் செய்துகொள்வது, இறந்தவரது ஆத்மாவுக்குத் துரோகம் செய்வதுமல்லாமல், அந்த ஆத்மாவுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கக்கூடியதாயு மிருக்கிறது. ஆனால் இந்தக் காரியத்தை நியாயமானது என்று ருசுப்படுத்துவதற்காக என் மனைவி இறக்குந் தருவாயில் கட்டளையிட்டாளென்றாவது அல்லது எனது சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தாயின் இடத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஒருவள் மிகவும் அவசியமாயிருந்தாளென்றாவது நான் சமாதானம் சொல்ல வரவில்லை. ஆனால் இவ் விஷயத்தில் நான் குற்றமற்றவன். சுவர்க்க லோகத்திலும் எனது இக் காரியத்தைப் பற்றி ஆக்ஷேபிப்பவர்கள் ஒருவருமிரார் என்று நம்புகிறேன்.

நான் மறு விவாகஞ் செய்து கொண்டேன். புதிதாய்க் கலியாணம் செய்துகொண்ட சிறு பெண்ணினிடத்தில் தாயின் மகிமையைப் பற்றிய உபதேசம் வீண் என்று தெரிந்திருந்தும், நான் கலியாணம் செய்துகொண்ட அன்றே 'அம்பா'ளைக் கூப்பிட்டு "நான் உன்னை விவாகஞ் செய்துகொண்டது எதற்காக வென்றால், தாயற்ற இக் குழந்தைக்கு நீ தாயாவதுமன்றி, தன் தாய் இறந்த துக்கத்தை அவன் மனதினின்றும் அகற்ற வேண்டுமென்பதற்காகவே" என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன்.

2

இரண்டு மாதங்கள் கழிந்தன. நான் சாயங்காலத்தில் 'மணி'யை அழைத்துக்கொண்டு நல்ல காற்று வாங்குவதற்காக வெளியே செல்வது வழக்கம். திரும்பி வரும்பொழுது சில நண்பர்களின் வீடுகளிலும் நுழைந்து வருவது வழக்கம். தன் தாயைப் பற்றிய நினைவை மறக்கட்டும் என்பது மாத்திரம் என் கருத்தல்ல. ஆனால் அவனுடைய புத்தி நுட்பத்தை எனது நண்பர்களுக்குக் காட்ட வேண்டுமென்பதே என் முதல் உத்தேசம். என் நண்பர்கள் மணியின் கூர்

---

* ப்ரேம் சந்த் என்பவர் ஹிந்தியில் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு.

மையான புத்தியைப் புகழ்ந்தால் என் மனதிற்குக் கிளர்ச்சியும் சந்தோஷமும் உண்டாகும்.

நான் ஒரு நாள் என் நண்பன் ராமச்சந்திரன் வீட்டில் மணியோடு உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவர் மணியைக் கேட்டார் "ஏனப்பா! மணி! உன் புதிய அம்மா உன்னிடத்தில் மிகவும் பக்ஷமாயிருக்கிறாளல்லவா?" நான் முக மலர்ச்சியோடு மணியின் முகத்தைப் பார்த்தேன். அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை. ஏனெனில் அம்பாள் அவன் மேல் அத்யந்தப் பிரீதி வைத்திருக்கிறாள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் மணி அந்தக் கேள்விக்கு வாய் மூலமாகப் பதிலளிக்காமல் தன் கண்களால் விடை கொடுத்தான். எனக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அவன் கண்களினின்றும் இரண்டு துளிகள் இரண்டு கன்னங்களின் பேரிலும் வழிந்து நின்றன. நான் வெட்கித் தலைகுனிந்தேன். நான் இந்த இரண்டு மாதகாலமாக அம்பாளின் எவ்வுருவத்தை என் இருதயத்தில் வரைந்து வைத்துச் சந்தோஷித்தேனோ இவ்விரு நீர்த்துளிகளும் அவ்வழகிய சித்திரத்தை ஒரு நொடியில் நாசமாக்கின. அதற்குள் ராமச்சந்திரன் சிறிது சந்தேகத்தோடு மணியைப் பார்த்து "குழந்தாய் ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான். "நான் அழவில்லையே! கண்ணில் புகை பட்டது அதனால் கண்ணீர் வந்தது" என்றான். ராமச்சந்திரனுக்கு மாற்றாந் தாயின் அன்பைப் பற்றிய சந்தேகம் உண்டாவது சகஜந்தான். ஆனால் இதுவரையில் அம்பாளின் அன்பையும் தங்கலம் பாராட்டாமையும் புகழ்ந்துகொண்டிருந்த எனக்கே அவளது புத்திர வாஞ்சையில் சந்தேகம் உதித்தது.

3

நான் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். என் மனதில் பல விதமான எண்ணங்கள் உதித்தன. எனது கோபத்தை அவளுக்கு எவ்வாறு தெரிவிப்பது? ஆம்! நான் முகத்தைத் தலையணையில் மறைத்துக்கொண்டு தூங்குவேன். அம்பா வந்து ஏதாவது கேட்டால், சிடுசிடென்று பதில் சொல்லுவேன். தலை வலிக்கிறது. தொந்தரை

செய்யாதே! போ! இப்படிச் செய்வதனால் "அவர் விருப்பத்திற்கு மாறாக ஏதோ செய்திருக்கிறோம்" என்று அவள் மனதிற்கே புலப்படும். அப்பொழுது அவள் என் காலில் விழுந்தால், மறைபொருளால் அவளது இருதயத்தைத் துளைப்பேன். இறக்கும்வரை ஞாபகம் வைத்துக்கொள்ளும்படி அவளை அழ வைப்பேன். அதற்குள் என் மனதில் மற்றொரு பாகத்தில் ஒரு சத்தம் உண்டாயிற்று. "அடே பைத்தியக்காரா! அவளது மதி முகத்தைக் கண்ட உடனே உனது கோபமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிடாதா? அவளது அன்பு நிறைந்த ஒரு வார்த்தை, முக மலர்ந்த ஒரு பார்வை மட்டுமே உனது கோபமாகிய கற் சிலையை தூள் தூளாக்கிவிடாதா?" ஆனால் இருதயத்தின் இந்த பலவீனத்தைக் கண்டு என் மனதின் மற்ற பாகம் கோபங்கொண்டது. "ஒரு நொடிப் பொழுதில் இவ்வளவு மாறுபாடா? இனிமையான வார்த்தைகளாகிய புயல் காற்றிலும், இனிய பார்வை என்னும் பிரவாகத்திலும் திடமாய் நிற்கும் சக்தி உனக்கு இருக்கிறது என்று தெரிந்திருந்தும், இந் நிலைமையில் ஒரு சிறிய காற்றோட்டத்தையும் தாங்க முடியாதவன் போல் அவ்வளவு பலவீனனாய்ப் போய் விட்டாயோ?" இவ்வித நினைவுகளால் மனதிற்குக் கொஞ்சம் திடமுண்டாயிற்று. ஆனால் கோபக் குதிரையின் கடிவாளம் தளர்ந்து கொண்டே போயிற்று. கடைசியில் என் இருதயத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டு வெளிக்குக் கோபம் போல் காட்டிக் கொண்டேன். போனதும் போகாததும் அவள் மேல் கோப வர்ஷம் வர்ஷித்துவிட வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டே சென்றேன்.

காலதாமதம் என்னும் காற்று என் கோபமாகிய மேகக் கூட்டங்களை அடித்து ஓதுக்கிவிடுமோ என்று பயந்து கொண்டே அதிவேகமாக வீட்டை வந்து அடைந்ததுதான் தாமதம், அம்பாள் எதிரே ஓடி வந்து மணியைத் தன் இடுப்பில் எடுத்துக்கொண்டு அமுதமும் அன்பும் ததும்பும் இனிய வசனங்களில் "ஏன் இன்று இவ்வளவு நேரம் திரிந்துகொண்டிருந்தீர்கள்? நான் மணிக்காக நல்ல நல்ல தின்பண்டங்கள் செய்து வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறேனே!" என்றாள். நான் மிகுந்த பிரயாசையோடு சேர்த்து வைத்திருந்த கோபமெல்லாம் காற்றாய்ப் போய்விட்டது. இவ்வளவு அன்புள்ள பெண்மணியின் மேல் கோபங்கொண்டதும், அவளைப்பற்றித் தப்பான அபிப்பிராயம்

"ஹே! உலக அன்னையே! உன் அருட் சோதியில் யான் கலக்கும்படி எனக்கருள் செய்க! என்னையே உனக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். என்னை நீ என்ன செய்யினும் செய்க. ஆனால் உன்னை ஒன்றுமாத்திரம் கேட்கிறேன். நீ இட்ட பணியைச் செய்யும்பொழுது, சலிப்பின்மையும், உற்சாகமும், தைரியமும், நம்பிக்கையும் நீ எனக்கு அருளவேண்டும். சுத்தம், சுதந்திரம், சமத்துவம் ஆகிய மும்மணிகள் என்னுள் எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கட்டும். பராசக்தி! உன்னருளால் எங்கும் மங்களம் பொங்கட்டும்" என்று சதா துதித்துக்கொண்டிரு.

தமிழ் உலகில் சாதி, வருணாச்சிரமம், வைதீகம் இவைகள் வளர்ந்துவிட்டன. ஏக நாயகனான கடவுள் பலவாறாகப் பிரிக்கப்பட்டுவிட்டார். ஆஷாடபூதிகள் எங்கும் நிறைந்துவிட்டனர். நற்காரியங்களுக்கும் நாட்டு முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டை போடுவோர்கள் பிரபல்யமாக விளங்குகிறார்கள். ஆகையால் சாதி இரண்டொழிய வேறில்லை என்ற ஔவையின் உண்மை மொழியைக் கைக்கொண்டு, சாதிப் பிரிவினைகளை ஒழித்து, தமிழர்களை ஒன்றாக்கி, அன்பும் பரிசுத்தமும் எங்கும் பரவச் செய்.

கொண்டதும் என்ன அநியாயம் என்று என் மனதில் தோன்றிற்று. மணியோ அறியாச் சிறு குழந்தை. அவன் ஒரு சமயம் தன் இறந்துபோன தாயாரை நினைத்துக்கொண்டு அழுதிருக்கலாம். அதற்காக அம்பாளின் மேல் குற்றஞ் சுமத்துவது அநியாயம்.

நான் வெகு பாடுபட்டு எண்ணிக்கொண்டு வந்தவைகள் ஒன்றும் நடக்கவில்லை. அம்பாளைக் கண்டு கோபமான வார்த்தைகளும் பேசவில்லை; முகத்தை மூடிக்கொண்டு படுத்துத் தூங்கவுமில்லை. ''அம்பா! இன்று மணி என்னை மிகுந்த வெட்கமடையச் செய்துவிட்டான். ராமச்சந்திரன் அவனை 'உன் புதிய தாய் உன்னிடம் பிரியமாயிருக்கிறாளா' என்று கேட்டதற்கு அவன் அழத் தொடங்கிவிட்டான். நான் வெட்கித் தலை குனிந்தேன். ஆனால் நீ ஏதாவது சொல்லியிருப்பாயோ என்று உன் மேல் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் தாயில்லாக் குழந்தைகளின் இருதயம் மெல்லிய திரைச் சீலையால் மூடப்பட்ட சித்திரம் போன்றது. மிகவும் மெல்லிய காற்றும் அதை நீக்கி விடுகிறது'' என்று மிகவும் இனிய வசனங்களால் சொன்னேன். ஆனால் இதைக் கேட்டவுடனே அம்பாளின் மலர்ந்த முகம் வாடிவிட்டது. அவள் தன் கண்களில் நீர் ததும்ப ''இவ் விஷயங்களை நான் முதல் நாளே தீர்மானஞ் செய்து கொண்டேன். ஆனால் மணியின் மனதிலிருந்து தன் தாயின் நினைவை அப்புறப்படுத்துவது என்னால் சாத்தியமில்லாத காரியம். எனது சகலத்தையும் மணியின் பேரில் அர்ப்பித்து விட்டாலும் என் முகத்தில் மாற்றாந் தாய் என்னும் கரிய மை பூசப்பட்டிருக்கும் போது, நான் என்ன செய்தாலும் என்ன பயன்?'' என்று மிகவும் சலித்துக்கொண்டாள்.

இந்தச் சம்பாஷணை ஏதாவது விபரீதத்தில் முடிந்து விட்டால் என்ன செய்வது என்று எனக்கு மிகவும் பயமாயிருந்தது. ஆனால் மறுநாள் முதல் அம்பாளின் நடத்தையில் விசேஷ மாறுபாடு காணப்பட்டது. நாள் முழுதும் மணிக்கு சேவை சுஸ்ருஷை செய்வதிலேயே மனதைச் செலுத்த ஆரம்பித்தாள். என்னையும் கவனிப்பதை விட்டுவிட்டாள். ஆனால் எனது சௌகரியங்களையும் மணியின் பொருட்டு விட்டுவிடுவதற்கு நான் அவ்வளவு பெரிய தியாகமூர்த்தி அல்ல. அவள் என் மேல் இப்படி அலக்ஷியமாயிருப்பது எனக்குச் சில சமயங்களில் பிடிக்கவில்லை. ஆனால் அதைப்பற்றிய பேச்சை எடுப்பதையே விட்டுவிட்டேன்.

உயர்ந்த வகுப்போர் அனுபவிக்கும் நன்மைகளை—உரிமைகளை ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தாராளமாய்க் கொடு. கல்வி இன்மை, பொருளின்மை, துர்வழக்கங்கள், அருவருக்கத்தக்க அசுத்தம் ஆகிய இவைகள் அவர்களிடமிருந்து அகலட்டும். இவைகளுக்காக நீ அன்னியரைக் கட்டாயப்படுத்தாதே. உன்னாலான முயற்சியை நீயே செய்.

ஒரு நாள் நான் வழக்கத்திற்கு மாறாகக் கச்சேரியிலிருந்து சீக்கிரமே வீட்டுக்கு வந்து விட்டேன். மணி சுவற்றின் பக்கம் பார்த்து நின்றுகொண்டிருந்தான். கண்ணாம்பூச்சி விளையாடலாம் என்று என் மனதில் பட்டது. நான் சந்தடி செய்யாமல் நடந்து சென்று மணியின் பின்னால் அடைந்து என்னிரு கைகளால் அவன் கண்களை மூடினேன். ஆனால் ஐயோ! அவனது இரு கண்களும் கண்ணீரால் நனைந்து கிடந்தன. நான் உடனே என் கைகளை எடுத்துக்கொண்டேன். இடி விழுந்தாற்போலிருந்தது. என் துக்கத்தை என்னென்று சொல்வது. உடனே மணியை மடியில் உட்காரவைத்துக்கொண்டு "என் கண்ணே! ஏன் அழுகிறாய்?" என்று கேட்கக் கேட்க என் கண்ணிலும் நீர் ததும்பியது. மணி கண்களைத் துடைத்துக்கொண்டு "இல்லையே! நான் அழவில்லையே!" என்றான். நான் அவனை என் மார்போடு அணைத்துக்கொண்டு "அம்மாள் ஏதாவது சொன்னாளா?" என்று கேட்டேன். மணி விக்கிக்கொண்டே "அம்—ம்—மா—ஆ ஒன்றும் சொல்லவில்லை. அம்மாள் என்னிடத்தில் மிகவும் பிரியமாயிருக்கிறாளே!" என்று பதில் சொன்னான்.

"மணி! என்னிடம் ஏதோ ஒழிக்கிறாய். இன்று அம்மாள் உன் மேல் கோபங் கொண்டாளல்லவா?" அதைக் கேட்ட மணி, மறுபடியும் கண்களில் நீர் தாரை தாரையாய்ப் பெருக, துக்கம் நிறைந்த பார்வையோடு என்னைப் பார்த்து, "இல்லையப்பா! அவள் என் மேல் அத்யந்தப் பிரீதி வைத்திருக்கிறாள். அதனாலேதான் எனக்கு அடிக்கடி அழுகை வருகிறது. என் தாயார் என் மேல் மிகவும் பக்ஷமாயிருந்தாள். அவள் என்னைத் தனியே விட்டு எங்கோ சென்றுவிட்டாள். புதிய அம்மாள் இன்னும் அதிகமாக என்னை நேசிக்கிறாள். ஆகையால் இந்த அம்மாளும் என்னைத் தனியாக விட்டு எங்கேயாவது சென்றுவிட்டால் என்ன செய்வது என்று எனக்குப் பயமாயிருக்கிறது" என்று சொல்லி விம்மி விம்மி பிரமாதமாக அழ ஆரம்பித்தான். நானும் அழ ஆரம்பித்தேன். அம்பாளின் அன்பு குழந்தையின் மனதில் எப்படிப்பட்ட எண்ணங்களை உண்டாக்கி விட்டது என்று எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று. நல்லவர்களுக்குக் காலமில்லை என்னும் பழமொழி நினைவுக்கு வந்தது. தூய குணமுடையவர்கள் இவ்வுலகத்திலிருந்து சீக்கிரமே சென்று விடுவதையும் நாம் பார்க்கிறோம். கடவுளே ஒரு சமயம் இனி வரப்போவதை இச் சிறு குழந்தையின் மூலமாக வெளிப்படுத்துகிறாரோ என்ற எண்ணமுண்டாயிற்று. அப்படிப்பட்ட நிகழ்ச்சியை என் கண்கள் பார்க்கும் சமயம்

உன் பணியை ஜாக்கிரதையாகச் செய். அற வழியைக் கைவிடாதே. சுத்தமுறுவதை மறக்காதே. சந்தேகங் கொள்ளாதே. என்ன இடர் வரினும் மதிக்காமல் அகற்றி, உன் கடமையைச் செய்வதிலேயே கண்ணாயிரு. இது வெற்றியைக் கொடுக்கும். இது நிச்சயம்.

நேரிடாத வண்ணம் கடவுளைப் பிரார்த்தித்தேன். ஆனால் பலவித ஆக்ஷேபணை சமாதானங்களால் என்னுடைய இச் சந்தேகத்தை பலாத்காரமாக அப்புறப்படுத்தினேன். தாயின் பிரிவாற்றாமையினால் குழந்தை ஏதோ நினைத்துக் கொள்ளுகிறான் என்று நினைத்துக் கொண்டேன்.

பிறகு மணியை என் இடுப்பில் எடுத்துக்கொண்டு அம்பாளிடம் சென்றேன். பிறகு சிரித்துக்கொண்டே அம்பாளைப் பார்த்து, "மணியை ஏன் அழுகிறாய் என்று கேள்" என்றதும் அம்பாள் திடுக்கிட்டாள். திடீரென்று அவள் முகம் ஒளி விழுந்தது. "நீங்களே கேளுங்கள்" என்றாள்.

"நீ அவனை மிகவும் நேசிக்கிறாயாம்! நீயும் அவனுடைய தாயைப் போல் இவனை விட்டு எங்காவது சென்றுவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் அழுகிறானாம்" என்றேன். உடனே மாசுபடிந்த நிலைக் கண்ணாடியைத் துடைத்தாற்போல் அம்பாளின் முகத்தில் திவ்வியமான ஒளி வீசிற்று அப்பொழுதே மணியை என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டு உண்மையான தாயின் அன்போடு அவனது பாதங்களை முத்தமிட ஆரம்பித்தாள்.

4

ஆனால் ஐயோ கடவுளே! மணியின் அசுபமான வார்த்தைகள் இவ்வளவு சீக்கிரம் பலித்துவிடும் என்று கனவிலும் நான் நினைக்கவில்லையே! ஒரு வேளை அவனது குழந்தைக் கண்களுக்கு காலன் வரப் போவது தெரிந்துவிட்டதோ! அவன் சிறிய காதுகளுக்கு நமனது பாஷை பொருள்பட்டதோ!

ஆறு மாதங்கள் கூடக் கழியவில்லை. அதற்குள் அம்பாள் படுத்த படுக்கையாய் விட்டாள். அந்தக் கருணையற்ற 'இன்புளுயென்ஸா' வந்து என் அருமை அம்பாளைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டது. தளதளவென்றிருந்த எனது உத்தியானம் பாலைவனமாய்ப் போயிற்று. இலக்குமி விளையாடிக்கொண்டிருந்த 'என் வீடு பாழ் மனையாய்ப் போய்விட்டது. அம்பாள் தன்னை மணிக்கே அர்ப்பணம் செய்துவிட்டாள். புத்திர வாஞ்சை என்றால் இவளைக் காட்டிலும் செய்யக் கூடியவர் ஒருவருமே இரார். குளிர்காலமாயிருந்த போதிலும், பனி கொட்டிக்கொண்டிருந்தபோதிலும், விடியற்காலையில் எழுந்திருந்து மணியின் காலை உண்டிக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வாள். அம்பாளின் அன்பு அவனுடைய மனதில் பதிந்துவிட்டது. அம்பாள்

இந்த மோசமான—பாதகமான—குரூரமான—வெட்கக்கேடான தீண்டாமை என்னும் பெயர் நமது தூய தமிழ் மொழியிலிருந்தே அகலட்டும்.

மதப் பித்தும் அதன் செய்கைகளும்.

திரு. T. L. ரகுபதி சர்மா அவர்கள், M.A., L.T.

மத உணர்ச்சியின் தன்மை

வெகு ஜனங்களின் நோக்கங்களையும், மனப் போக்கையும், செய்கைகளையும் மாற்றவல்ல கருவிகளில் மிகச் சக்தி வாய்ந்தது அவரவர்கள் தழுவுகின்ற மதமென்பதாகும். வேறு எதற்கும் அசையாத, பிறவுயிர்களிடத்துச் சிறிதும் இரக்கமற்ற, தன் லாபத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் மனிதர்களுங்கூட மதம் என்ற இயந்

சாதம் ஊட்டாவிட்டால், அன்று மணிக்குச் சாப்பாடில்லை. அம்பாள் வந்து அவனைப் படுக்கையிலிட்டுத் தூங்க வைக்காவிட்டால், அன்று ரணகளந்தான். ஆனால் அம்பாள் அவனது பிடிவாதங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் சொந்தத் தாய் தன் குழந்தையைப் பாராட்டுவது போல் அவ்வளவு கடந்த சுகத்தை அனுபவித்து வந்தாள்.

காய்ச்சலின் வேகத்தால் தவித்துக்கொண்டிருந்தாள். இப்புறம் அப்புறம் அசையக்கூட அவளுக்குச் சக்தியில்லை. சரீரம் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் "மணியின் சாப்பாட்டு நேரம் ஆய்விட்டதே; ஒன்றும் செய்யவில்லையே" என்ற கவலை மாத்திரம் விடவில்லை. ஸ்வயநலம் பாராட்டாத இத்தகைய அன்னையின் அன்பு இப்பொழுது கனவுபோலாய் விட்டது. இப்பொழுது நினைத்தால் மனம் பதறுகிறது.

அம்பாளோடு கூடவே மணியின் துடுக்கும், விளையாட்டும், சிரிப்பும் சென்றுவிட்டன. துக்கமும் நிராசையுமே உருவெடுத்து வந்தாற்போல் காணப்படுகிறான். இப்பொழுது அவன் அழுவதே கிடையாது. எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த பொருளைப் பறிகொடுத்த பின் எதைக் குறித்து அழ வேண்டும்?

பெண்மையை உதாசீனப்படுத்தாதே. பெண்மையினாலேயே உலகம் செழிக்கின்றது. பெண்மைதான் உனக்குத் தாய்.

திரத்தால் சிறிது ஆட்டிவைக்கப்பட்டிருக்கிறார்கள். மதத்தின் பெயரால் தன்னலத்தை வெறுத்து அதன் முன்னேற்றத்துக்காகப் பல பெருந் தியாகங்களைச் சந்தோஷமாய்ச் செய்தவர்கள் உலக சரிதையில் கணக்கற்றவர்கள் உளர். அவர்கள் செய்கைகளால் மனித சுபாவத்துக்கு அடிப்படையான தெய்வத் தன்மை நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அவ்வாறின்றி அம் மத வெறியால் அதன் சார்பாகப் பிற உயிர்களுக்குச் சொல்ல முடியாத இன்னல்கள் இழைத்தவர்களே ஜனங்களிற் பெரும்பாலோர். அவ்விதச் செய்கைகள் நூறு இருநூறு வருஷங்களுக்கு முன்னர்ப்போல் அவ்வளவு குரூரமாய் இராதபோதிலும் அவை இந் நாளிலும் ஒழிக்கப்படவில்லை. சமயப்பூசல்கள் தற்காலத்திலுங்கூட நடைபெற்று வருகின்றன.

மதக் கொண்டாட்ட முறைகள்

ஜனங்கள் மனதை முழுவதும் கவர்ந்து தன் வசப்படுத்தி எவ்விதத் தியாகங்களையும் பொருட்படுத்தாது செய்விக்க வல்ல இந்த மதமென்பது யாதென்று சற்று வினவுவோம். அது இன்னது, இத் தன்மையது என்று சொல்லுவது எளிதல்ல. ஆனால் இன்னின்னவை யல்லவென்று சொல்லிவிடுவது மிகச் சுலபமானது. அது கோவில்களும், விக்கிரகங்களும், உற்சவாதிகளும், மற்றும் அதன் பெயரால் நடைபெறும் பூசைகள், வாகனங்கள், பலிகள் முதலிய ஆரவாரங்களும் மதமல்ல என்று தைரியமாய் உரைக்குங் காலம் வந்துகொண்டிருக்கிறது. தான் செய்வதும் சொல்லுவதும் இன்னதென்றே தெரியாமல் பழக்க முறையில் நடிக்கப்பெறும் ஜெபக் கோலங்களும் இத்தன்மைத்தே. இவை உலகத்திலுள்ள பல்வேறு நாட்டார்களால் அவரவர்கள் முற்போக்குக்குத் தக்கவாறு தங்கள் மதப் பற்றுக்கு அறிகுறியாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. சிறு கண்டம்போன்று கணக்கற்ற ஜாதி, வகுப்பினர் நிறைந்துள்ள நம் பாரத நாட்டில் இந்த மதாசாரங்களில் ஒவ்வொரு முறையையும் அனுஷ்டானத்தில் காணலாம். மதங்கள் எவ்வாறு தோன்றி வெகு ஜனங்களுக்குள் பரவினவென்று சரித்திர வாயிலாக நாம் தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால் அது சம்பந்தங்களின் மேலான கொள்கைகளாலாவது அல்லது அவற்றைத் தழுவியவர்களுடைய தெய்வத்

ஆத்ம சக்தி என்ற வேற்படை உன்னிடத்திலிருக்கும்பொழுது, நீ ஏன் அடிமைத்தனத்தையும் பொய்மையையும் கொல்ல அச்சமெய்த வேண்டும்? அந்த ஆத்ம சக்தி மனிதனால் உண்டாக்கப்பட்ட ஆயுதங்களைவிட பலமுள்ளது. நெருப்புக்கும், காற்றுக்கும், விஷப் புகைக்கும், நீருக்கும் அழியாதது. ஆகையால் அதை வளர்த்து உனது முயற்சியின் வெற்றிக்கு அனுகூலமாக உபயோகப்படுத்திக்கொள்.

தன்மையான செயல்களாலாவது நேர்ந்ததல்ல. முற்போக்கான எண்ணங்களும் ஏற்பாடுகளும் கையாளப்பட்டுவரும் இக் காலத்தில், அக் காலத்திய மதச் செருக்கும் மிருகத் தன்மையும் சிறிதும் பயன்படாதவை என்ற உணர்ச்சி விரைவில் பரவிக்கொண்டு வருகிறது. மேற் சொன்னவைகளன்னியில் மதத்தை ஒருவன் அனுஷ்டிப்பது கூடுமென்ற நம்பிக்கை அறிவாளிகளுக்குள் தோன்றியிருக்கிறது. அவ்வித நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட்டால் மட்டுமே சகோதரத்துவம் கைகூடுமென்பது திண்ணம். உலகத்துக்குத் திலகம் போன்ற கணக்கற்ற பெரியார்கள் இவற்றை அறவே ஒழிக்க முயன்று வருகின்றனர். அவர்களை நாஸ்திகர்கள் என்று அழைக்க எவரும் துணியமாட்டார்கள்.

மதமென்றாலென்ன?

ஆகவே மதமென்பது ஒவ்வொரு தனி மனிதனும் உலக வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து தனக்கும் அகில சிருஷ்டிக்குமுள்ள ஐக்கியத்தையும், தன் ஜீவியத்தில் சிருஷ்டியின் போக்குக்கு முரண்பாடுகளையும் நன்கறிந்து அதற்குத் தக்கவாறு வாழ்நாட்களைக் கழிக்க ஓர் துணைக் கருவியாயிருப்பது. பல்லாயிரக் கணக்கான சிருஷ்டி வர்க்கங்களுக்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தம் இருக்கிறது? தன் ஜீவியத்தின் முடிவு என்ன? என்பனபோன்ற பிரச்சினைகளுக்கு ஒருவன் கைக்கொண்ட மதக் கொள்கைகள் உத்தரம் கொடுப்பனவாகவிருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன் ஜீவிய காலத்தில் தன் உலக வாழ்க்கையின் கருத்தை உணர முயலுகிறான். இம் முயற்சிக்குத் தக்கவாறே அவன் வாழ்நாட்கள் அமையப் பெறுகின்றன. இதைச் சிறிதும் சிந்திக்காதவன் மிருகத்தையனையன். இப் பிரச்சினையும் இம் முயற்சியுமே மனிதனுடைய உயர்வை வெளிப்படுத்துகின்றன. இதுவே ஒருவனுடைய மதத்துக்கு அடிப்படையானது. எனவே மதமென்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் உலகில் தோன்றுவதற்குக் காரணமாய் நின்ற பரம்பொருளுக்குமுள்ள சம்பந்தத்தை விளக்கும் ஓர் கருவி. அதை அவன் தனக்குக் கொடுத்திருக்கும் பகுத்தறிவு மூலமாய் அதற்கெட்டிய அளவில் அறிந்துகொள்ளுவது மட்டும் கூடும்.

தீண்டாமை என்றும், தீண்டப்படாமை என்றும் வழங்கும் இப் பொய்ப் பிசாசை—நம் நாட்டின், சமுதாயத்தின் ஆணிவேரை அசைத்து ஆட்டிச் சீர்குலையச் செய்யும் சாத்தானை நீ உனது தைரியம், கல்வி, ஞானம், பிரச்சாரம் இவைகளினால் கொன்று, அது இனி வெளிவராதபடி அகன்ற கடலில் ஆழ்த்து.

சமூகச் சூழ்ச்சி

ஆயினும் ஒவ்வொரு மனிதனும் யாதாமொரு சமூகத்தின் பகுதியாயிருந்து வாழ்நாட்களைக் கழிக்கவேண்டியிருப்பதால், அவ்வச் சமூகம் சிறிது சிறிதாக வேறு விஷயங்களில் நுழைந்துகொண்டது போல், இந்த மத விஷயத்திலும் நுழையத் தலைப்பட்டது. மதக் கட்டுப்பாடு சமூக வாழ்க்கைக்கே இன்றியமையாதது என்ற ஓர் தப்பான கொள்கையைக் கைப்பற்றிக்கொண்டு, மக்களைச் சமூகங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் துன்புறுத்தி வந்திருக்கின்றன. சென்ற 50 வருஷ காலமாகத்தான் ஐரோப்பா அமெரிக்கா முதலிய இடங்களில் இக் கொள்கை மாறிக்கொண்டு வருகிறது என்று சொல்லலாம். நம் நாட்டிலோ இந் நிர்ப்பந்தம் 300, 400 வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவில் இருந்ததைப்போன்று தனி மனிதர்களை வருத்திக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவனும் சமூகம் ஏற்படுத்திய விதங்களில்தான் பரம்பொருளை வணங்கவேண்டும். தனக்கு இஷ்டமிருப்பினும் இராவிடினும் வந்தன வழிபாடுகள், விழாக்கள், பலிகொடுத்தல், இன்னும் அருத்தமும் பொருத்தமுமற்ற வேறு கூத்துக்களிலும் மதப் பெயரால் கலந்தே தீரவேண்டும். இல்லையேல் முரட்டுத்தனமாய்க் கட்டாயப்படுத்துவது, அதற்கு இணங்காதவர்களை அவர்களுடைய இதர உரிமைகளினின்றும் விலக்குவது போன்ற அடாச் செயல்களைச் சமூகங்கள் நினைப்பின்றிக் கையாடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வித முரட்டுத்தனமானதும், நாகரீகமற்றதும், மனிதத் தன்மைக்கு முரண்பட்டதுமான ஏற்பாடுகளால் சமூக மத வாழ்க்கை அமைக்கப் பெற்றிருக்கின்றது.

சமூக மதக் கொடுமைகளின் பயன்

எவ் வகுப்பினர்களுக்குள் இவ்வித மதக் கொள்கைகள் பரவியிருக்கின்றனவோ அங்கு ஜனங்களுக்குள் சச்சரவும், ஒற்றுமையின்மையும், முன்னேற்றமடைவதற்குப் பலப்பல தடைகளும் இருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். காலத்திற்கேற்பப் பழக்க வழக்கங்களை மாற்றிச் சமூக வாழ்க்கையைச் செழிப்புறச் செய்யத் தேவையான எந்த ஏற்பாடுகளையும் மதப் பித்துக்கொண்ட ஒரு சமூகம் நிராகரிக்கிறது. 'மதம்' என்ற மதப் பித்து உலக வாழ்க்கையில் ஒவ்வொரு தனி மனிதனும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதைத் தடுத்து மேலுலகத்துக்குத் தங்களைத் தகுதியுள்ளவர்

உன் அருகில் எங்கும் எப்பொழுதும் ஒரு பெருஞ் சோதி சுற்றிக்கொண்டிருக்கிறது. அதுதான் சைதன்யம். நீ நற்கருமம் செய்யச் செய்ய அது வளரும். துர்க்கருமம் செய்யச் செய்ய அது குறையும். அச் சுத்த சக்தி ஜோதி நீங்காதது.

களாகச் செய்துகொள்வதாய்ப் பிதற்றுகிறது. சாரதா ஆக்ட் சம்பந்தமாய் நடந்துவந்த அறிவீனக் கிளர்ச்சியே இதற்கு உதாரணமாய் நிற்கிறது. இந்தக் கிளர்ச்சியை எவர்கள் செய்தார்களோ அவர்கள், எல்லா வகுப்பினர்களும் பரம பிதாவின் வாசஸ்தலமாகிய கோவிலுக்குள் தடையின்றிச் சென்று வருவதற்கு முட்டுக்கட்டையாயிருப்பவர்கள். விதவை என்பது ஒரு ஸ்திரீக்குக் குறிப்பிட்ட ஒரு காலத்தில் உண்டான நிலைமையாய் மட்டும் இருந்து புருஷர்களுக்கு இருப்பதுபோல் அவள் இஷ்டப்படி மாற்றிக்கொள்ளக் கூடியதாயிருக்க வேண்டியிருக்க, அவ்வாறின்றி இம் மத வெறிக்காரர்கள் மதத்தின் பெயரால் அவளை அலங்கோலமாகச் செய்து, சமூக வாழ்க்கைக்கு 'உரிமையற்றவளாய் மிருகத்திலும் கேடாய் நடத்தி வருகிறார்கள். தங்கள் சமூகத்தைச் சுகமாக வைத்துக் கொள்ளுவதற்கு அது அவசியமாம்! ஆனால் ஆண் பிள்ளைகள் பல தடவை மணம்புரிந்துகொண்டாலும், மணந்த பெண்ணை விட்டு வேறு ஸ்திரீகளிடம் சென்றாலும் சமூகத்துக்கு யாதொரு அசுத்தம் இல்லை போலும்! என்னே இவர்கள் அறிவீனம்! இவ்விதக் குறுகிய நோக்கத்தின் மாறுபாடுகளை மதப் பித்தர்களான வேறு மதஸ்தர்களுள்ளும் நாம் காண்கிறோம். இதன் பயனாகவே 300 வருஷங்களாகக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் புரோடெஸ்டண்டுக் கிறிஸ்தவர்களாலும், அதற்கு முன் புரோடெஸ்டண்டுக் கிறிஸ்தவர்கள் கத்தோலிக்களாலும் துன்புறுத்தப்பட்டு வந்ததை ஐரோப்பியச் சரித்திரங்கள் வாயிலாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். மகம்மதியர்கள் பிற மதஸ்தர்களுக்கு இழைத்த கொடுமைகளைப்பற்றி நம் தேசச் சரித்திரத்தில் பரக்கக் காண்கிறோம். சைவர்கள் ஜைனர்களுக்கு இழைத்த கொடுமைகளைச் சொல்லி முடியாது. வைஷ்ணவ சைவச் சண்டைகள் கொஞ்சமன்று. இந்துக்கள் புத்தர்களை நாசப்படுத்திய சரிதம் கேட்டால், நெஞ்சு பிளக்கும். ராஜீய தேசீய விஷயங்களில் மற்ற எல்லாத் தேசங்களைவிட முன்னேற்றமடைந்திருக்கிற அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் இந் நாளிலும் இவ்விதக் கொடுமைகள் சிறிதளவு கையாடப்பட்டு வருகிறதென்றால், அவற்றை வேரறுப்பது எவ்வளவு அவசியமானது என்று விளங்கும்.

சமூகப் பிளவுகளும் ஒற்றுமையின்மையும்

ஜனங்களெல்லோரும் சகோதரத்துவத்தைக் கைக்கொண்டு அந்நியோந்நியமாய் சமாதானத்துடன் வாழ்வதை விட்டுவிட்டு ஒன்

பெண்மையினிடத்தில் போற்றுதற்குரிய அரிய குணங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவைகளைச் சரிவர உணர்ந்து, சரியான முறையில் வளர்த்துப் பெருக்கிக்கொண்டால், உலகிற்கும் உனக்கும் அபாரமான—ஆச்சரியமான நன்மைகளைக் கொடுக்கும்.

றோடொன்று சண்டைபோடும் பல வகுப்புகளாகப் பிரிந்திருப்பதற்கு இம் மதக் கோட்பாடுகளே முக்கிய காரணமாகும். தன் தன் மதக் கொள்கைகளில் தனக்குள்ள நம்பிக்கை பிற வகுப்பினர்களுக்குமுண்டாக வேண்டுமென்று எண்ணுவதோடு நிற்காமல், இவ் விஷயங்களில் தனி மனிதனுக்கு யாதொரு சுதந்திரமும் இருப்பது கூடாது என்றும் கருதத் தொடங்கின. அக் கருத்துக்கிணங்க அடக்குமுறைகளையும் கையாண்டு வந்தார்கள். அவற்றிற் சில நாவால் உரைக்கவும் கூடாத அவ்வளவு குரூரமானவை. முக்கியமாகக் கத்தோலிக்க மதஸ்தர் நாடுகளில் அவை வெகு தாராளமாய் உபயோகிக்கப்பட்டன. பதினாயிரக் கணக்கான ஜனங்கள் உயிருடன் நெருப்புக் கிரையாக்கப்பட்டனர். அரசர்களும், பிரமுகர்களும், மதாசாரியர்களும் அதைக் கண்டு களித்தார்கள். உலகத்தில் நாகரீகம் விருத்தியடைந்தபோது இவை சிறிது சிறிதாய்க் கைவிடப்பட்டன. இப்போது அதற்குப் பதிலாக சமூக மதக் கொள்கைகளுக்கு மாறாக நடப்பவர்களைப் பல நிர்ப்பந்தங்களுக் குள்ளாக்குகிறார்கள். அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது சமூக வாழ்க்கையில் கலந்து கொள்வது தீரர்களைத் தவிர மற்றவர்களுக்குச் சிறிது கடினமாகவேயிருக்கிறது. அதற்குக் காரணம் சமூகத்தின் ஒரு பகுதியான ஸ்திரீகள் தற்கால உணர்ச்சியற்றவர்களாய் மத வைதீகர்களின் சூழ்ச்சிகளில் ஆழ்ந்து கிடப்பதுதான். அவர்களுக்குத் தாராளமாய்க் கல்வி கற்பிப்பதனால் மட்டுமே அவர்கள் மனதை விசாலப்படுத்தி வைதீகக் கட்டுப்பாட்டினின்றும் அவர்களை விடுவிப்பது கூடும். படித்த பெண்கள் படித்த ஆடவர்களைப் பார்க்கிலும் அதிக ஊக்கத்துடன் சமூகக் குறைபாடுகளை ஒழிக்க முன்வந்திருப்பது இதற்குப் போதிய சான்று. தனி மனிதர் எவ்வளவுக் கெவ்வளவு மன விசாலமடைகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சமூகங்களும் மதக் கட்டுப்பாடென்ற வலையினின்று விடுவிக்கப்பட்டு, உண்மையான மதத்தின் தன்மையை உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடப்பது கூடும். சுருங்கச் சொல்லின் உலகிலுள்ள ஒவ்வொருவரும் மற்ற எல்லோர்க்கும் பணி செய்வதும், எல்லோரும் ஒவ்வொருவருக்கும் பணி செய்வதுமாகிய ஐக்கிய இயக்கத்தின் அடிப்படையான கொள்கையே மேலான மதமாகக் கருதத் தகுந்தது. தெய்வ வழிபாட்டினிமித்தம் தெய்வ அம்சமாகிய மனிதனைத் துன்புறுத்தும் மதக் கொள்கைகள் ஒழிக்கப்பெற்று, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அருள் வாக்கியத்தின் ஆழ்ந்த கருத்தை உணர்ந்தவர்களாய் அதற்குப் பெருந்

தெய்வத்தை நம்பு; வழிபடு. ஆனால் மூடத்தனம், மூடக் கொள்கைகள் ஆகிய இவைகளை உன்னிடமிருந்து விரட்டியடி. உனது மூடக் கொள்கையினாலும் மோசடியினாலும் நீ தெய்வத்தை ஏமாற்ற முடியாது. அன்பினாலும் ஆர்வத்தினாலுமே நீ உனது கோரிக்கையை நிறைவேற்ற முடியும்.

தடையாய் நிற்கும் தங்கள் மதக் கொள்கைகளை வேருடன் பிடுங்கியெறிந்துவிட்டுச் சமத்துவம், சகோதரத்துவம் என்ற மேலான கொள்கைகளை அனுசரிப்பது அத்தியாவசியம். யார் எம் மதத்தைத் தழுவி நின்றாலென்ன? ஒரு குடும்பத்தவர்களே வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாய் இருந்தாலென்? ஆராய்ச்சி செய்த எவராவது இதைத் தீங்காகக் கருதுவார்களா? ஆகையால் அவரவர்களுக்கு இஷ்டமான மதக் கொள்கைகளை அனுஷ்டிப்பதற்கு யாதொரு தடையும் இருக்கலாகாது. கிருஷ்ண பரமாத்மா கீதையில் எடுத்துரைத்தபடி எவ்வித வழிபாடும் பரம்பொருளாகிய தெய்வத்தையே சேருகிறது. அவரை தெய்வத்தின் அவதாரம் என்று கொண்டாடும் நம் நாட்டவர்கள் இவ்வுரையின் உண்மையை உணர்ந்து அதன் பிரகாரம் நடப்பதற்கு யாது தடையிருக்கக்கூடும்? ஆங்காங்கு நம் முன்னோர் நமக்கருளிய மேற்கோள்கள் செறிந்துகிடக்க இந்துக்களாகிய நாமோ சமயப் பூசல்களில் இறங்குவது? சமயப் பூசல்களால் விளையும் பெருங் கேட்டைக் கண்கூடாகப் பார்த்த பின்னரும் மனித வர்க்கம் ஏன் சமயப் பித்துக்களா யிருப்பது?

சில தப்பான கொள்கைகள்

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலகத்தை வெறுப்பதும், சரீரத்தின் தேவைகளைத் தேடாதொழிவதும், மோக்ஷமே நோக்கமாக அதற்காக உடலைப் பல வகைகளிலும் வருத்துவதும் மதத்தின் பெயரால் நடைபெற்றுவந்தன. இந்நாளிலும் பலர் அக் கொள்கைகளையே கைப்பற்றிக்கொண்டு பலவிதக் கோரமான செய்கைகளைச் செய்து வருகிறார்கள். உடலைப் பொருட்படுத்தாத வாழ்வும் வாழ்வாமோ? அது நம்மில் ஒரு முக்கியமான பகுதியன்றோ? சுவரன்னியில் சித்திரம் வரைவது எவ்வாறு இயலும்? இவ்வாறு உரைப்பதால் உடலுக்கு நாம் அடிமைகளாகிவிட வேண்டுமென்றல்ல. அதற்குத் தக்க கௌரவம் கொடுத்து அது நல்ல ஆரோக்கியத்துடனிருக்கும்படி செய்யவேண்டியது இன்றியமையாதது. அதைத் திருப்தி செய்வதற்காகத் தகுதியற்றவற்றால் அதைப் பேணுவது கூடாது. நாம் உடலுக் கின்பமென்று கருதுகிற அநேக விஷயங்கள் அதை நோய்க்கும், துன்பத்துக்கும் ஆளாக்க வல்லன. ஆரோக்கியத்துக்கு அனுகூலமான மதக் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொள்ளலாம். மதத்தின் பெயரால் மனிதர்களுடைய ஆரோக்கியம் குன்றக்கூடிய கொண்டாட்டங்களையும், பலவித வியாதிகள் ஜனங்களுக்குள் பரவுவதற்கும், சகோதரத்வம் கெடுவதற்கும், காரணமாய் நிற்கும் விழாக்களையும் ஒழிக்க முயல்வோமாகில், நாம் தழுவுகிற மதம் நம்மை உயர்த்த வல்லதாயிருக்கும். இல்லையேல் அதுவே நமது சத்துருவாகிவிடும்.

பெண்மையைக் காதலால் வெற்றிகொள்.

ஸ்வாமி விவேகானந்தரின் கடிதங்கள்.

தி. K. வேங்கடராவ் அவர்கள்.

சிகாகோ மத விசாரணைச் சபையில் இந்திய வேதாந்தப் பெருமழை பெய்து, பாரத நாட்டிற்கும் பாரதர்களுக்கும் விசேஷ மதிப்பும் பெருமையும் நல்கிய சிங்கத்தை அறியாதார் யாரே? நமது வேதங்களிலுள்ள உயரிய கொள்கைகளையும், ஆழ்ந்த சிந்தனைகளையும் சிறு பிள்ளைகளுக்கும் விளங்குமாறு எடுத்தோதிய

முடிவுரை

மேற் சொன்னவற்றால் நாம் மதத்தின் உண்மையான தன்மையைச் சிறிது உணரலாம். அது ஒவ்வொரு மனிதனும் தன் தன் வாழ்நாட்கள் நன்கு செல்லும்பொருட்டும் உலகத்தில் ஜனங்களுக்குள் அன்பும் சகோதரத்வமும் தழைத்தோங்குவதற்கும் துணைக் கருவியாயிருக்கிறது. அதுவே மனமென்ற கட்டுக்கடங்காத குதிரையை நல்வழிகளில் செலுத்த வல்லது. அதன் நோக்கமும் அதன் உயர்வும் தன் தன் முற்போக்குக்குத் தக்கவாறு மட்டுமே அமையப் பெறுகிறது. அர்த்தமற்ற, மனதைக் கட்டுப்படுத்தாத எந்த நடிப்புகளையும் மதமென்று சொல்வது தவறு. அவற்றை வெறுங் கொண்டாட்டங்களாக மட்டுமே கருதவேண்டும். அவற்றில் கலந்துகொள்வதும் விலகி நிற்பதும் ஒருவனுடைய மதத்திற்குச் சிறிதும் சம்பந்தப்பட்டதல்ல. தெய்வமே இல்லையென்று சொல்லுவது ஒருவனுடைய மதமாயிருப்பினும் இருக்கட்டும். அக் கூற்றுக்காக அவனை நிந்திப்பது சிறிதும் அவசியமற்றது. அது ஒருபுறமிருக்க, அவன் தன் செய்கைகளால் மேலான குணங்களையுடையவனாக விருப்பது கூடுமென்று நாம் ஒப்புக்கொள்ளுவோமாக. சமூக மதக் கோட்பாடுகளின் மூடப் பழக்க வழக்கங்களையும், அதைப் பின்பற்றிய அலங்கோலமான செய்கைகளையும் வேரறுக்க முயற்சி செய்வோமாக.

பிறப்பினால் உயர்வு, தாழ்வு, ஜாதி, வகுப்பு ஆகிய இவைகளை நம் நாட்டில் இல்லாதிருக்க உழை.

குருவை யாரே மறப்பர்! ஸ்வாமி விவேகானந்தர் என்றால் துறவிகட்கோர் அரசன் என்று குருவியும் கூறும். ஆங்கில பாஷா ஞானம் அவரிடம் சிறந்து விளங்கியமையால், வேதாந்த உண்மைகளைக் கூறும்போது ஐரோப்பியரிட மதக் கொள்கைகளையெல்லாம் ஆராய்ந்தே முடிவுகட்டுவார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் அனுக்கிரகத்தால் நரேந்திர தத்தர் ஸ்வாமி விவேகானந்தரானார். வான சாஸ்திரம், கணித சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களிலும் நமது ஸ்வாமிகள் பாண்டித்யம் பெற்றிருந்தமையினால், இவர் வேதாந்த சொற்பொழிவு நிகழ்த்துகையில் எல்லா சாஸ்திர விசாரணையும் அப்போது கிளம்பிக் கேட்போர் எவராயினும் அவர்களை ஸ்தம்பிக்கச் செய்துவிடும்.

ஸ்வாமிகள் அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களின் முக்கிய பட்டணங்களில் இந்திய வேதாந்த உண்மைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தபோது அவர் இந்தியாவிலுள்ள தமது சீடர்களுக்கு எழுதிய கடிதங்களை மொழிபெயர்த்து அடியிற் பிரசுரிக்கிறோம். இக் கடிதங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் பற்பலவுள. இவற்றை ஊன்றிப் படிக்குமளவில் ஓர் சேனாதிபதி தன் கீழுள்ள படைகளுக்குக் கொடுக்கும் உத்திரவுகள் ஞாபகத்திற்கு வரும்.

ஸ்வாமிகளின் கடிதங்கள்

1

1896 ஆகஸ்டு 8.

அன்புள்ள.............

அநேக விஷயங்கள் கவனிக்கற்பாலது. முதன்முதலாக, நாம் செய்யும் காரியங்களில் யோக்கியமாக நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் மாறாக நடக்கிறீர்களென்று சொல்ல முன் வரவில்லை. ஆனால் ஹிந்துக்களோ வியாபார விஷயங்களில் அசிரத்தை காட்டும் வழக்கமுடையவர்கள்; ஒழுங்காகவும் காலக்கிரமத்துடனும் கணக்குகளைச் சரிவர வைப்பதில்லை.

அடுத்தாற்போல் எந்தக் காரியத்தை மேற்கொண்டாலும் அதுவே பேரின்பம் என்று உறுதிகொண்டுழைக்கவேண்டும். ....பத்திரிகையே உனது இஷ்ட தேவதை என்று சிரமேற்கொண்டு ஒரு மனப்பாட்டுடன் தொண்டாற்று. பின்னர் கவனி;

பெண்மைக்கு உன்னைவிட தைரியம், புத்திக்கூர்மை, ஆளுந் திறமை, சகிப்புத் தன்மை, வசியம், உணர்ச்சி, உயர்வு உண்டென்பதை அறி.

எத்தகைய வெற்றி காண்கிறது பார். அபேதானந்தரை இந்தியாவிலிருந்து வரும்படி அழைத்திருக்கிறேன். ....பரிசுத்தம், பலனை எதிர்பாராமல் குருவிற்கு எதிர்பேசாது கீழ்ப்படிதல், இவ்விரண்டே வெற்றிக் கோவிலின் சாவிகள்.

மதக் கொள்கைகளைத் தாங்கி நிற்கும் பத்திரிகைகள் அயல்நாடுகளில் பிரபல்யம் பெறுவது அசாத்தியம். நற்குணமும், நன்றியறிதலுமுள்ள ஹிந்துக்களே அவற்றைத் தாங்கி நிற்கவேண்டும்.

பத்திரிகை வேதாந்த உண்மைகளைப் புகட்டுவதன்னியில் இந்திய கலாஞானத்தையும், அறவுணர்ச்சியையும் எடுத்தோதவேண்டும்.

“பக்தி” எனும் பொருள்பற்றித் தமது லாட்ஜில் பேசும்படி மிஸஸ். அன்னி பெசண்ட் என்னை வேண்டினார். ஓர் இரவு அங்கு பேசினேன். கர்னல் ஆல்காட்டும் அங்கே பிரசன்னமாயிருந்தார். மதங்களனைத்தையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதை நான் நன்கு விளக்கிக் காட்டினேன். மத விஷயங்களில் உலகிற்குப் போதிக்கவல்ல குரு ஸ்தானத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் உலக விவகாரங்களிலோ அயல் நாட்டினரிடமிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியவை அநேக முளவென்பதை நம் நாட்டினர் நன்கறிதல் வேண்டும்.

மாக்ஸ்முல்லர் எழுதியிருக்கும் அரிய கட்டுரையைப் பார்த்தேன். 6 மாதங்களுக்கு முன் அவர் எழுதியபோது மஜூம்தாரின் துண்டுப் பிரசுரம் ஒன்றே அவருக்கு ஆதாரமாயிருந்தது போலும்! ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரைப்பற்றி ஓர் புஸ்தகம் எழுதுவதாக மாக்ஸ்முல்லர் எனக்கோர் நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார். அவருக்கு வேண்டிய விஷயங்களை நான் கொடுத்திருக்கிறேன். ஆயினும் இந்தியர் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது.

சலியாது உழையுங்கள்! எடுத்த காரியத்தைக் கைவிடாதீர்கள்! எதையும் செய்யவல்ல துணிவுகொள்ளுங்கள்!

இவ்வுலகமே துன்பக் கடலன்றோ?

அனைவர்க்கும் எனதன்பு உரித்தாகுக!

விவேகானந்தா.

உனது முன்னோர் தேடிவைத்த தமிழ்ச் செல்வம் அமுக்கப்பட்டுவிட்டதே. தமிழின் மணம் மறைந்துவிட்டதே. ஆகையால், தமிழ் மகனே! பயத்தைக் கொன்று, பொய்மையை நசுக்கி, ஆண்மையோடு முயற்சியைக் கைக்கொண்டு, விடுதலையடைய முயல்.

2

C/o மிஸ். H. முல்லர்,
ஏர்லி லாட்ஜ், ரிட்ஜ்வே கார்டன்ஸ்,
விம்புள்டன், இங்கிலாந்து,
1896 செப்டம்பர் 22.

அன்பு மிக்க..............

ஜெர்மனியில் புரோபசர் டியூஸனுடன் சந்தோஷமாகக் காலங் கழித்தேன். பின்னர், நாங்களிருவரும் சேர்ந்துகொண்டு லண்டனுக்கு வந்தோம். நாங்கள் இப்போது இடைவிடா நண்பர்களானோம்.

............துளசிதாஸர், கபீர், நானக் இன்னும் தென்னிந்திய மதபோதகர்கள்—இவர்களிட சரித்திரச் சுருக்கங்களையும், உபதேசங்களையும்பற்றி அரிய நூல்கள் இயற்றவேண்டும். இத் துறையில் நாம் இன்னும் இறங்கவில்லையே! இவை இலக்கியச் சுவையுடனும், மதிப்பிற்குகந்த நடையுடனும் எழுதப்பட லவசியம். “நானும் எழுதிவிட்டேன்” என்று கிறுக்கித் தள்ளக்கூடாது.

ஊக்கத்துடன் முனைந்து செல்க!

இப்படிக்கு அன்புமிக்க,
விவேகானந்தா.

“பாரதி”ப் பத்திரிகையும்,
நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்
கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

Messrs. T. Subramanyam & Co.,
7, Batu Road,
KUALA LUMPUR, F. M. S.

The Manager, “India Novel Depot,”
71, Serangoon Road,
SINGAPORE, S. S.

தியாகம்! தியாகம் வேண்டும்! வேண்டும்! பரிசுத்தமான ஹிருதயத்துடன் செய்த தியாகம் வீண் போகாது. வேண்டும்பொழுது ஆத்மாவைக் கூடத் தியாகம் செய்தல் வேண்டும்.

இந்திய இளைஞர்களே, இன்னும் உறக்கமா?

திரு. ஆறு நாகநாதன் அவர்கள்.

காலச்சக்கரம் வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. அச் சுழற்சியில் நிமிஷங்கள் தோறும் புதிய புதிய மாறுதல்கள் தோன்றிக்கொண்டே வருகின்றன ஒரு காலத்தில் ஆடை யணிவதற்கும் அறியாமல் இலைகளையும், மரவுரிகளையும் புனைந்து, வீடு வாசலின்றி அலைந்து திரிந்து கொண்டிருந்த மாந்தரெல்லாம் இன்று மாட மாளிகைகளிலும், கூட கோபுரங்களிலும், உப்பரிகைகளிலும் மாண்புற வாழ்கின்றார்கள். 'சுதந்தரம்' என்ற சொல்லிற்கே பொருளை அறியாது, அஞ்ஞானப் படுகுழியில் ஆழ்ந்திருந்த நாடுகளெல்லாம் இன்று சுதந்திர ஒளி பெற்று இன்ப நுகர்ச்சியில் விளைத்தோங்கி வருகின்றன.

ஆனால், பண்டைக் காலந் தொட்டே செல்வச் சிறப்பிலும், கைத்தொழில் வளர்ச்சியிலும், வேளாண்மை விருத்தியிலும், வாணிபப் பெருக்கிலும் சீரும் சிறப்புமுற்று 'பொன்னாடு' எனப் புலவர் நாவில் பெருமை கொண்ட நம் இந்தியா, இன்று எத்தனை கொடுமைகளுக்கு ஆட்பட்டு அல்லலுற்று அவதிப்படுகின்றது. அம்மம்ம! நினைக்குந்தோறும், நினைக்குந்தோறும் நெஞ்சம் துடிக்கின்றது! என்னே! இச் செயல்! இதைப் போக்குவது இளைஞர் கடனன்றோ! ஆதலின் இளைஞர்களே! எழுங்கள்!! எழுங்கள்!!!

கும்பகர்ணன் ஆறு மாதம் தூங்கினாலும் ஆறு மாதமாவது விழித்திருந்தான். ஆனால், நீங்களோ ஒரு நூறு வருஷ காலம் ஒரேயடியாகத் தூங்கிவிட்டீர்கள். நீங்கள் தூங்கியதால், உங்களை யீன்றெடுத்த உங்கள் தாய் இன்று அன்னியரின் அடிமைச் சங்கிலியில் பிணிப்புண்டு, பண்டைப் பெருமை இழந்து, அகம் குழைந்து, முகம் வாடி, அந்தோ! அல்லலுறுகின்றாள்! அவளை உய்விக்க வழி தேட வேண்டாமா? இனியும் வாளா உறங்கிக் கிடப்பது நீதியோ? இளைஞரோ நாகாள்? எழுங்கள்! எழுங்கள்! உங்கள் பணியால், உங்

உன் ஊனுடலைக் காப்பாற்றி வளர்ப்பதில் அளவு கடந்த கவலை கொள்ளாதே.

கள் உழைப்பால், உங்கள் நெஞ்சூக்கத்தால், உங்களை யீன்ற, உங்கள் தாய் இன்று உயர்வு பெற வேண்டும்.

உலகமெங்கணும் உங்கள் எழுச்சியே உயர்வுகொண்டு மிளிர்கின்றன. எங்கு நோக்கினும் இளைஞர் எழுச்சியே வானுற ஓங்கி நிற்கிறது. இளைஞர் எழுச்சியால் விடுதலை யடையாத நாடும் உண்டோ! இளைஞர்களால் ஆகாத காரியமும் உண்டோ! ஆதலின் எத்தனை நாள் அடிமை வாழ்க்கையில் ஆழ்ந்து கிடப்பது!

"செம்புக்கும் கொம்புக்கும்—அஞ்சி
நீங்கள் சிற்றடிமைப் படலாமோ?"

என்ற நம் பாரதியின் வீர உரை உங்கள் செவிக்கு எட்டவில்லை போலும்! துப்பாக்கிக்கும், குண்டுச்கும், வாளுக்கும், பீரங்கிக்கும், சம்மன், குரூஸோ போன்ற போர்க் கப்பல்களுக்கும் பயந்து எத்தனை நாள் மூலையில் பதுங்கிக் கிடப்பது! "பிறந்த அன்றைக்குச் சாவு தலை மேலே" என்ற பெரியோர் வாசகத்தை உன்னுங்கள்! இன்னும் நம் பாரதியாரும்,

"பிறந்தவர் யாவருமிறப்ப துறுதி யெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும் பின்னுயிர்கொண்டு வாழ்வது
சுக மென்று மதிப்பாரோ?"

என்று வீர முழக்கம் செய்கின்றார். ஆதலின், வீரமுடையவர்களானால் வெளிக் கிளம்புங்கள்! அன்னை பணியை ஆர்வமுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்! பொறுமைக் குன்றாம் காந்தி யடிகளின் அறப் போரைப் பின்பற்றுங்கள்!

எங்கள் முன்னோர்கள் "அப்படிப்பட்டவர்கள், இப்படிப்பட்டவர்கள், வானத்தை வில்லாய் வளைத்தார்கள். மணலைக் கயிறாய்த் திரித்தார்கள்" என்று வாய் வேதாந்தம் பேசி வீணில் காலத்தைக் கழித்து விட்டுப் போவதில் பிரயோஜனமில்லை. "ராவணனாண்டாலென்ன, ராமனாண்டாலென்ன" என்ற அடிமை மொழியை ஆழக் குழி தோண்டிப் புதையுங்கள்.

"வீரசுதந்திரம் வேண்டி நின்றார்—பின்னர்
வேறொன்று கொள்வாரோ?"

என்ற வீர மொழியை வேண்டி நில்லுங்கள்!

விழிமின்! எழுமின்! விழுமிய கருமம்!
விடுபடும்வரை! வீறுகொண் டுழைமின்!

கட்டுண்ட பெண்மையை விடுதலை செய்.

ஆத்திசூடியின் அருமை.

திரு. ரகுநாதன் அவர்கள்.

உலகின்கண் தோன்றியுள்ள உயிர்க் கூட்டங்களுள் முதற் கண் வைக்கப்பெற்றதாயது, மக்கட் பிறப்பு. மற்றெல்லாப் பிறப்புக்களையும்விட, நன்மை யிது, தீமை யிது என அறிந்து, பிறப்பும் இறப்பும் இன்றி எல்லாம் வல்ல இறைவனிடம் ஒன்றாய்க் கலத்தற் கேற்ற நெறிக் கண்ணுய்ப்பது இப் பிறப்பேயாம். அந்நெறியை யறிதற்கு பாஷையும், கல்வியும் இன்றியமையாததாம். அத்தகைய நெறியை யளிக்கும் கல்வியே நமது தாய்மொழியாந் தமிழ்மொழி. நமது முன்னோர்கள், பண்டைக் காலத்தில் மற்றெல்லா நாட்டினரையும் விடக் கல்வி, தொழில், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும், வல்லுநராய் உலகத்திற்கு உயர்ந்த ஆத்மார்த்த ஞானத்தை யளித்து வந்தனர் என்பது இவ் வாத்திசூடியின் அருமையை யாராய்ந்தால் செவ்வனே விளங்கும். நமது தமிழ் மொழியில் பேரின்பம், சிற்றின்பம் என இரு திறத்தினவாய் பெருங் காப்பியம் சிறு காப்பியம் எனவும், அகப்பொருள் புறப்பொருள் எனவும் வகுக்கப்பட்டு அறம், பொருள், இன்பம், வீடு என நால்வகைப் பயனுடைய நூல்கள் பல மிளிர்கின்றன. அங்ஙனம் வகுக்கப்பட்ட நூல்களை யாராய்தற்கு நமது முன்னோர் அனுமானப் பிரமாணம், பெரும்பான்மையும், பிரத்தியக்ஷப் பிரமாணம் சிறுபான்மையும் விரவி வர செவ்விய முறை கூறியுள்ளார்கள். அனுமானப் பிரமாணம் என்பது புகையைப் பார்த்த மாத்திரத்தில் அங்கு நெருப்பு இருக்கும் என அநுமானத்தால் உணர்தல். பிரத்தியட்சப் பிரமாணம், தீயை நேரில் கண்டபின் தெரிதல். அதாவது காட்சி யளவை கண்ணாற் கண்ட பின் உணர்தல். எனவே நமது கல்வி புகட்டற்கு அனுமானமே மிகவும் தேவை

கற்றலின் பயன் யாதெனில், நமது தமிழ் வேதம் "கற்றதனா லாய பயனென் கொல்வாலறிவன், நற்றாள் தொழாரெனின்" எனக்

உனது மனதை அன்பு மயமாக்கிக்கொள். அன்பினால் இவ் வுலகத்தை வசியப்படுத்துக. அப் பரிசுத்தமான அன்பு மயம் ஆண்டவனைக்கூடக் கட்டுப்படுத்திவிடும். இந்த நன் முயற்சி உனக்கு முதலில் தோல்வியைக் கொடுத்தாலும், இறுதியில் நிச்சயமாய் வெற்றியையே கொடுக்கும்.

கூறுகின்றது. எனவே எப் பிறப்பினுஞ் சிறந்த மானுடப் பிறப்பின்கண், நாம் செய்யக் கிடப்பது நூலாராய்ச்சியினால் செவ்விய நெறியறிந்து, பிறப்பறுத்துக் கடவுளுடன் ஒன்றாய் இரண்டறக் கலத்தலேயாம். அதுவே வீடு(முத்தி). அவ் வீட்டு நெறி யுணர்த்துவதே கல்வி. அஃதை யறிவதே கல்வி கற்பதின் நோக்கமாம். அந் நெறியுரை நூல்கள் நால்வகைப் பயனுடையன. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன. சிறு காலைக் கல்வி கற்கு மொரு சிறுவன் இந் நான்கு வித புருஷார்த்தங்களில் மனங் கொள்ளுமாறு, ஆரம்பக் கல்வித் திட்டம் நமது நாட்டில் அமைந்து கிடத்தல் வேண்டும். அந் நான்குவித புருஷார்த்தங்களைத் தன்னுள்ளடக்கி எளிய நடையும், சிறிய சொற்களும், உயரிய பொருளுங் கொண்டதாய், சிறியோரும் பெரியோரும் படித்துப் பயன் பெறுதற்கேற்றதாய், சிறு காலை கற்றதைத்தொண்டு கிழவனாயினும் மனதிற் கொண்டு நடத்தற் கேதுவாய் தமிழுக்கும் பிற மொழிகட்கும் வாயைத் திறந்த மாத்திரத்தில் எளிதிற் பிறக்கும் முதலெழுத்தாகிய அகரத்தையும் நால்வகைப் பயனில் முன்னர்க் கூறிய, அறம் என்ற சொல்லையும் முதற் கண்ணுள்ளதாயும் பிள்ளைகள் எழுத்தறிதற் கேற்றவாறு உயிர், மெய், உயிர் மெய் என்ற பாகுபாட்டுடன் உள்ளது. நமது மூதாட்டியார் கொடுத்த ஆத்திசூடி என்னும் அரும் பெரு நூல். இஃது முற்காலக் கூறு.

இனி தற்காலக் கூற்றை யாராய்வோம். தற்காலத்தில் நமது நாட்டில் ஆரம்பம், நடுத்தரம், உயர்தரம் என வகுக்கப்பட்டு, கல்வி புகட்டுங் கழகங்கள் உயிர்க்குறு பயனை எண்ணாது உடற்குறு பயனையே நாடித் தொழில் புரிந்து வருதற் கேற்ற முறையைக் கற்பிப்பதே முக்கிய நோக்கமாகக் கொண்டு போதிக்கப் படுகின்றன. "அறஞ்செய விரும்பு" எனக் காதிற் கேட்டு மனதிற் பதித்துத் தெளிந்த பின்னர், கையில் "அ" என எழுதியெழுதிக் கல்வி கற்ற மாணவர்களின் சந்ததியார்கள், இதுகாலை கோர்கோ வென்றும், குறுங் கோடென்றும், டப்பி என்றும், படபட வென்றும், டம் டம் என்றும், தீய வொழுக்கக் குறியும், அவசரக் குறியும், பழிப்புக் குறியுந் தோன்றும் சொற்களை முதற்கண் கற்கின்றனர். அதாவது டப்பி என்ற மாத்திரத்தில் பொடி போடுவது என்றும், பட பட என்ற மாத்திரத்தில் அவசரம் என்றும், டம் டம் என்பது தெருக்கூத்தர் அடிக்கும் மேளம் என்பதும் பிள்ளைகளுக்கு எளிதிற் றெரியும் என்பது திண்ணம். "சூது விரும்பேல்", "அவசரப் படேல்", "இழிதொழில் புரியேல்" எனக் கேட்டுப் பாடஞ் செய்த ஒரு சாராரது

செல்வத்தினின்றும், கல்வியினின்றும், விடுதலையினின்றும் நீ வீழ்ந்து விட்டாய். எத்தனை காலம் நீ இவ்வாறு அடிமையிலும் இகழ்ச்சியிலும் உழன்றுகொண்டிருக்கப் போகிறாய்?

மக்கள் இதுகாலை இப் பழிப்புக்கிடமான முறையில் கற்பிக்கப்படுவது மிகவும் வருந்தத் தக்கது. இத்தகைய முறையில் வளரும் சிறுவன் எங்ஙனம் உயர்ந்த நோக்கமுடையோனுவன் என்பது நோக்கத் தக்கது.

இவ்வாறு நமது நாட்டுச் சிறுவர்களின் ஆத்ம ஞானம் சிதைந்து பிரத்தியட்ச பிரமாணமே சாலச் சிறந்ததென வற்புறுத்தி அத்திவார மில்லாக் கட்டிடம் கட்டப்படுகிறது. அக் கட்டிடம் சின்னுட்களில் இடிந்து விழுவதோடு தன்னுள் இருப்பவர் உயிர்களையும் கவர்ந்து செல்லுகிறது. "தெருவெல்லாந் தமிழ் முழக்கஞ் செழிக்க" வேண்டுமாயின் சர்வகலாசாலைகளைப் பரப்புவதும், உயர்தரக் கல்வியைத் தமிழில் போதிப்பதும் ஏனையதற்கால முறைகளும், தலை நோவுக்குத் தலையணையை மாற்றுவதே போன்றதென்பது திண்ணம்.

ஆகவே ஆரம்ப வகுப்புக்களில் ஆத்திசூடியையே முதல் நூலாகக் கொண்டு போதிக்கவும், ஆரம்ப வகுப்புகளையே முறையே சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என வகுக்கப்பட்ட முறைகளில் கையாளவும் முன்வந்தால், தெருவெல்லாந் தமிழ் முழங்கும். வெட்கக்கேடான வேலையில்லாத் திண்டாட்டமும் தோன்றாது. மெஞ்ஞானத்திற்கேதுவான அகக்கண் திறக்கப்பட்டால் 100 ரூபாய் செலவில் வாழுமொருவன் 10 ரூபாய் செலவில் எளிய வாழ்க்கை நடத்த இச்சிப்பான் என்பது திண்ணம். அத்தகைய பெருமை வாய்ந்த நூல் இந்த ஆத்திசூடி என்பதை விளக்கவே இஃதெழுதலானேன். எனது உள்ளக் கிடக்கையை உலகிற் களித்துத் தொண்டு புரிதற்கேற்ற அறிவும், ஆற்றலும் அளிக்க வென அன்னையின் அடியிணையை வாழ்த்தி வணங்குகிறேன்.

நூலாசிரியர் வரலாறு

இந் நூலை இயற்றியவர் ஔவையார். இவர் சரஸ்வதியின் அம்சமாய்க் கருவூர் ஆதி யென்பாள் வயிற்றில் பகவன் என்னும் அந்தணர்க்குப் பிறந்து, "நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில் பாண ரகத்தினில் ஔவை பிறந்தனள்" என்றமையின், பாணர் சேரியில் வளர்ந்தனர் என்று தெரிகிறது. இவர் பிரமசரிய விரதத்தை வேண்டி வாழ்ந்தவர் எனக் கூறுவர் பெரியோர். இவர் இயற்றிய வேறு நூல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், கல்வி யொழுக்கம், மூதுரை, நல்வழி, விநாயக ரகவல், பந்தனந்தாதி, அகதிக் கோவை,

தமிழா! தயக்கமேன்? இனி ஏறுபோல் தமிழ் உலகில் உன் பணியாற்ற முயலவேண்டாமா? உன்னைப் பெற்ற தமிழ்த் தாய் இன்னும் மாற்றாந் தாயால் இன்னல்களுக்குள் அகப்பட்டுத் தவித்துக்கொண் டிருக்கிறாளே அவளை நிர்வாணமாக்கி நீ உறங்குவதென்னே!

நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, அருந் தமிழ் மாலை, தரிசனப் பித்து, ஞானக் குறள் முதலியன. இவர் காலத்து இருந்த புலவர்கள் கம்பர், ஒட்டக்கூத்தர். இவர் விநாயகக் கடவுளைப் பூசித்து அருள் பெற்றவர். சேர சோழ பாண்டியர்கள், இவரிடத்தில் மிக அன்பு கொண்டிருந்தனர் எனக் கூறுவர். இவர் செய்த அற்புதச் செயல்கள் பல. இவற்றை யுணர்த்தும் நூல்களில் பரக்கக் காணலாம்.

நூற் பெயர்

ஆத்திசூடி. "முதனூல் கருத்தனளவு மிகுதி பொருள் செய்வித்தோன், தன்மை முதற் குறிப்பு" என்ற நன்னூற் சூத்திரப்படி இந் நூலின் முதற் குறிப்பே இந் நூற்குப் பெயராயிற்று.

ஆத்திசூடி: திருவாத்தி மாலையைச் சூடியவன். இரண்டனுருபும்பயனும் உடன்தொக்க தொகை. ஆத்தி என்பது பொருளாகு பெயர். முதற் பொருளின் பெயர் சினைக்கு ஆகி வந்தது. முதற் பொருளாகிய ஆத்தி அதன் சினையாகிய பூவை யுணர்த்தா நின்றது. சூடி வினையா லணையும் பெயர். சூடு பகுதி. இ விகுதி உகரக் கேடு சந்தி. "உயிர் வரினுக் குறள் மெய்விட்டோடும்" என்றபடி ஆகியது. இந் நூல் மானிடர்க்குப் பிறப்பறுத்து முத்தி நிலை யெய்தற்குச் சாதகமான நீதிகளைச் சிறு சொற்களால் அமையப் பெற்றது. அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற் பொருட் பெயர்ச் சொற்களையுந் தன்னுள் அடக்கியுள்ளது. என்னை யெனில் "அறஞ்செய விரும்பு" என முன்னும், "பொருடனைப் போற்றி வாழ்" எனப் பின்னும், "மெல்லியல் நல்லாள் தோள் சேர்" என அதன் பின்னும், "வீடு பெற நில்" என இறுதியிலும் கூறியுள்ளார். மக்கள் சிறுகாலை தொட்டு இத் துறையில் பயில வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து. இந் நூல் அகர முதல் ஔகார மிறுதியாக உயிரெழுத்தைக் குறித்தற்குப் பன்னிரண்டு வாக்கியங்களும், "அஃகஞ் சுருக்கேல்" என ஆய்தத்திற்கு ஒன்றும் ககரமுதல் னகரவிறுதியாகப் பதினெண் மெய்களுக்கும் பதினெட்டு வாக்கியங்களும், "பன்னீருயிரும் கசதநபமவயஞங வீரைந்துயிர் மெய்யு மொழி முதல்" என்ற விதிப்படி மொழி முதலாகும் உயிர் மெய்யெழுத்துக்கள் கசதநபமவ என்ற ஏழெழுத்திற்கும் ஒவ்வொன்றிற்குப் பதினொன்றாக எழுபத்தேழும் ஆக நூற்றெட்டு வாக்கியங்கள் யுடையது. ஔவைப் பிராட்டியார் முற்கூறிய நாற்பொருட் பயனும் ஒரு செய்யுளில் அடங்கப் பாடிய பாட்டு ஒன்று கீழ் காண்க.

இளந் தமிழா, நிமிர்ந்து நில்! நீ விழிப்படைந்து உனது நாட்டிற்கும் உலகிற்கும் தொண்டு செய்யுங் காலம் நெருங்கிவிட்டது.

197896

எனது யாத்திரை.

திரு. B. S. சங்கரன் அவர்கள்.

எனது வடநாட்டு யாத்திரையைப்பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டுமென்று கனம் ஆசிரிய ரவர்கள் பணியிட்டார்கள். அதை மறுத்தற்கஞ்சி எழுதலானேன். எழுதும் சில வார்த்தைகளில் குற்றங் காண்பது அழகல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முக்கியமாக எனது வைதீக நண்பர்கள் கோபத்திற்கு ஆளாகும்படி சில வரிகள் எழுதினால், அதை அவர்கள் படிக்கும்பொழுது என்னுடைய நோக்கம் சீர்திருத்தமேயொழிய துவேஷம் சிறிதுமில்லை என்பதை எண்ணி மன்னிக்கவேண்டுகிறேன்.

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் தாதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

இந் நூற் பெருமை

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் இவ் விரு நூல்களையும் டாக்டர் ஜோன், பெஸ்ஸட் ஜட்சன் என்ற மேனாட்டுப் பெரியார்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். ஜர்மானியர் முதற் பலருந் தத்தம் பாஷையில் மொழிபெயர்த்து நடாத்துவதனால் இதன் பெருமை கூறாது விளங்கும்.

சிறுகாலை கல்வி கற்குஞ்சிறார் அறம் பொருளின்பம் வீடு என்ற நால் வகைப் பயன் பேறுதற் கேற்றவாறு அமைந்த நூலிஃதெனக் கூறினும், மொழி முதல் எழுத்துக்கள் கணக்கின்படி 108 வாக்கியங்களை யுடையது எனவும் கூறினும், சாதாரணமாக ஆறுயுங் கால் உபநிடதங்கள் நூற்றெட்டு வகைத்து, தருமங்கள் நூற்றெட்டு, அறவோர் ஜபிக்கும் காயத்திரி நூற்றெட்டு, உபநிடதம் என்பது வேதத்தின் சாரம். அதாவது வேதத்தின் கிளை நமது அம்மையார் அருளிய ஆத்திசூடியும் வேதத்தின் பொருளைத் திரட்டிச் சேர்த்து 108 சிறு வாக்கியங்களில் அமைக்கப் பெற்றது.

தன்னுடைய உயர்ந்த நோக்கங்களை நிறைவேற்றப் பெண்மைக்கு வேண்டிய சுதந்திரம் கொடு.

ஆதிகாலத்தில் நன்மையை நாடி ஏற்படுத்தப்பட்ட வழக்கங்களெல்லாம் நாளடைவில் சீர்கெட்டுச் சமூக வாழ்வைக் கெடுக்கும் கோட்பாடுகளாக மாறிவிட்டன. கோவில் கட்டுவது, குளம் வெட்டுவது, பிச்சையிடுவது, யாத்திரை செய்வது முதலியவைகள் தொன்றுதொட்டு வந்த வழக்கங்கள். ஆனால் இன்றுள்ள நிலையைப் பாருங்கள்! கோவில்கள் அக்கிரமக் களஞ்சியங்களாக இருக்கின்றன. குளங்கள் காலரா, பிளேக் முதலிய தொத்து வியாதிகளை வளர்க்கின்றன. பிச்சையிடும் வழக்கம் சோம்பேறிகளையும், கஞ்சாக் குடிப்பவர்களையும் நமது நாட்டில் நிரப்பிவிட்டது. யாத்திரை போவதென்பது பொம்மலாட்டமாக—புரோகிதக் கொடுமையாக ஆகிவிட்டது. "எங்கள் தாத்தா போனார்; முப்பாட்டன் போனார்; நான் போகிறேன்" என்று சொல்வதைத் தவிர யாத்திரை செல்வதின் முக்கியமான கருத்தை அறிந்தவர்கள் இக் காலத்தில் எத்தனை பேர்கள்?

ஆத்ம ஞானத்தை உணர்ந்த மஹரிஷிகளின் வம்சத்தில் பிறந்த நாம் "காசிக்குச் சென்று புண்ணியத்தை மூட்டை கட்டிக்கொண்டு வந்து இந்திர லோகத்தில் முதல் வகுப்புக் குறிச்சிக்கு டிக்கட் வாங்கிவிடலாம்" என்று எண்ணுகிறவர்களாக மாறிவிட்டோம் என்பதை நினைத்தால், நமது அடிமைத்தனம் இன்னமும் நீங்காமலிருப்பது ஆச்சரியமல்லவே! காசிக்குப் போனால் மோக்ஷம். ஆம். ஆனால் பணம் பறிப்பதற்காகப் புரோகிதன் கூடை கூடையாகக் கொட்டுகிற பொய்க்கும், லோபித்தனத்தினால் "ஏழை" என்று வேஷம் போடும் யாத்ரீகர்களுக்கு மிடையில் மோக்ஷம் படுகிற பாடுதான் என்ன! ஆண்டவன் சாக்ஷியாகச் சொல்லுகிறேன்; காசியிலே இருக்கும் புரோகிதர்களும், காசி மார்க்கமாக டிக்கட் வாங்கி வந்தவர்களும் செல்லுமிடந்தான் மோக்ஷமெனில் அது எனக்கு வேண்டவே வேண்டாம். நரகத்தையே நான் விரும்புவேன்.

யாத்திரை போவதன் நோக்கமென்ன?

ஒரு சாண் வயிற்றுக்குப் பாடுபடுவதையே நோக்கமாகக் கொண்ட நாம் உழைப்பதும், உண்பதும், உறங்குவதுமாக வாழ்வை ஒரே ரீதியில் கழித்து வருகிறோம். செக்கு மாடுகள் சுயஞாபகமற்றுச் சென்ற தடத்திலேயே செல்கின்றன. நமக்கும் இம் மாட்டிற்கும் வித்தியாசமில்லை. வாழ்விலே ஒரு விருத்தி ஏற்படாமலிருப்பதற்காக, "நம்மைத் தவிரப் பிறரும் உலகில் உள்ளார்" என்

பணத்தினாலும் செல்வாக்கினாலும் உலகத்தை மயக்கி உன் வயப்படுத்த முயற்சிக்காதே. இம் முயற்சியில் நீ முதலில் ஜெயம் பெற்றாலும், முடிவில் நீ தோற்று மீளாப் படுகுழியில் திண்ணமாய் வீழ்வாய்.

பதை நாம் உணரவேண்டுமென்பதற்காக யாத்திரை போகவேண்டுமென்று பணித்தனர் பெரியோர். நமது கிராமத்தை விட்டுப் புறப்பட்டுக் காசி சென்று திரும்புகிறவரை நிமிஷந்தோறும் லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் நமக்கு யாத்திரா பலன் பணம் செலவழிந்த ஏக்கந்தான். நம்முடைய எல்லையைக் கடந்து கடல், காற்று, மேகம், சூரிய சந்திர நக்ஷத்திரங்கள் முதலிய பெரிய வஸ்துக்களுடன் மனங்கலந்து உறவாடி, வீரர் வாழ்ந்த இடங்களைக் கண்ணால் கண்டு நாமும் வீரம் பெற்று, பல பெரியோர்களையும் ஞானிகளையும் சந்தித்து 'உலகறிந்து' வருவதே உண்மையான கல்வி என்பது நமது மூதாதையர் துணிபு.

இன்று நாம் வட இந்தியாவுக்குச் செல்லுகிறோம். பூனாவிலிருந்து பம்பாய் செல்லுகிற பாதையில் அதியுன்னத மலைகளும், பள்ளத்தாக்குகளும், கணவாய்களும், நீர்ச் சுனைகளும், காடுகளும் மேடுகளும் அப் பிராந்தியத்தில் ஒரு காலத்தில் அஞ்சாத நெஞ்சுடன் ஆண் சிங்கமெனத் திரிந்த சிவாஜியை ஞாபகமூட்டவில்லையா? 30 ரூபாய் சம்பளத்திற்காக வெள்ளைத் தோலுக்கும், தற்குறித் தாலுகா போர்டு பிரஸிடெண்டுக்கும் சலாமிடும் தமிழன் கூடச் சிறிது மராட்டிய வீரம் பெற்றுவிடமாட்டானா; இந்த உணர்ச்சி தோன்றாமல் ஒருவன் அந்தப் பக்கம் யாத்திரை சென்று திரும்புவானாகில் அந்த யாத்திரைக்குப் பலனே இல்லை. பாரத வீரர் மலிந்த அந்தப் பிரதேசத்தில் போனபொழுது, என் தலை வெட்கம் தாங்காமல் தொங்கியது. வீர சிவாஜி எந்த அந்நிய ஆட்சியை எதிர்த்துக் கடைசிவரை போராடினாரோ அந்த அந்நிய ஆட்சிக்கு முதல் முதல் அடிமையானவன் நம் மாகாணத்தவன்.

பிறருடைய பெருமையைப் பார்த்ததும் நமது சிறுமை நன்கு புலப்படும் என்று சொல்லுவார்கள். இது உண்மை. பம்பாய் நகரத்தின் ஒரு மணி நேர வாசம், மதராஸிகளாகிய நாம் எவ்வளவு அடிமைப் புத்தி வாய்ந்தவர்கள் என்பதைக் காட்டிவிடும். "பிறரிடம் சேவகம் செய்யாவிட்டால் நாம் உயிர்வாழ முடியாது" என்பது மதராஸியின் எண்ணம். பம்பாய் வாசி ஒவ்வொருவனுக்கும் தன் நம்பிக்கை உண்டு. சேவகம் செய்யாமல் தன் முயற்சியாலும் தந்திரத்தாலும் வியாபாரம் செய்து பிழைக்க வழி தெரியும். சென்னையிலே விளையும் நிலக்கடலை. அதை டென்மார்க் தேசத்திற்கு அனுப்பப் பம்பாய் வியாபாரி முன்னுக்கு வருவான். தானே வியாபாரம் செய்யத் தைரியமில்லாத தமிழன் பம்பாய் வாலாவிடம் சம்பளத்திற்குப் போவான். இந்தக் காலம் என்று மாறுமோ?

தமிழன்பனே! உனது தாய் மொழியாகிய தமிழுக்கு உயிரைக் கொடு. சீர்கேடாய்ப் போன உன் மொழி புத்துயிர் பெற்றுத் திகழும்படி செய்.

வட இந்தியாவைப்பற்றி எழுதினால் டில்லியைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியுமா? டில்லி நமது ராஜாங்கத்திற்குத் தலைநகர். இல்லை, நமக்கு ராஜாங்கமேது? நம்மை ஆளும் பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்குத் தலைநகர். டில்லியிலே இதுவரை ஏழு பெரிய சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்திருப்பதாகச் சரித்திரம் கூறுகின்றது. இது எட்டாவது சாம்ராஜ்யம். டில்லியிலே நாம் பார்க்க வேண்டிய ஒரு வெள்ளை யானை இருக்கிறது. அந்த மதயானையின் மீது வித்தல்பாய் படேல் என்ற மாவுத்தர் வெகு சாமர்த்தியமாயும், தைரியமாயும் சவாரி செய்தார் என்பதை நோக்கும்பொழுது நமக்குப் பெருமைதான். ஆனால் அவ் வீரனது தீரத்தைக் கடைப்பிடிக்காதவரையில் இந்தப் பெருமையும் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் புராணப் பெருமையாக மாறிவிடும்.

பூர்வீகத்திலிருந்து ஹிந்துக்களுக்குப் புண்ணிய ஸ்தலமாய் விளங்குகிற காசித் தலத்திற்குச் சென்றேன். அங்கும் தமிழர்கள் ஏராளமாய் இருக்கின்றனர். இங்கிலாந்து சென்ற விதவைகள் "காசியிலே இறக்க முக்தி" என்பதை எண்ணி எமனை நோக்கித் தவம் செய்து வருகின்றனர். உயிர்வாழ்வதற்காக மற்ற தேசத்தவர்கள் பெரும்பாடு படுகிறார்கள். நமது மாதர் சாவதற்குத் தவங்கிடக்கிறார்கள். கையிலே ராட்டையும் பஞ்சும் கொண்டு பிழைத்தாலும் மேலாக இருக்கும். இதை நான் எழுதினால் நாஸ்திகன் என்கிறார்கள். காசியிலிருக்கும் புரோகிதர்களைப்பற்றி அதிகமாகச் சொல்லப் பிரியமில்லை. தாயார் தகப்பனார் இருக்கிறார்கள் என்று பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம் என்றாலோ, உயிருடன் இருப்போர்க்கும் சிரார்த்தம் செய்யலாம் என்று சுருதி ஸ்மிருதி ஆதாரங்களுடன் வாதிக்கிறார் புரோகிதர். உயிருடன் இருப்பவர்க்குச் சிரார்த்தம் செய்ய அனுமதிக்கும் புரோகிதர் தீண்டாமை வேண்டும் என்று சொல்லுவது ஆச்சர்யமா? "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்றார் பாரதியார்.

என்ன அக்கிரமம் நடந்தாலும் காசிக்குப் பெருமையைக் கொடுக்கக்கூடிய இரண்டு பெரிய அம்சங்களை மறந்துவிட முடியாது. "இமயமலையில் பிறந்து, பிறந்த இடத்திற்கு இயைந்த பெருமையுடன் இருகரையும் அலை வீசி, ஆர்த்திரைத்து மயிரடர்ந்த சிம்மம் போலவும், திமில் பெருத்த ரிஷபம் போலவும், மதக் குணம் நிறைந்த மதயானை போலவும், கம்பீரமான கதியுடன் அரசன் பவனி சென்றாற்போல், ஊரூரும் சென்று கடலில் கலக்கும் கடவுள்

தன்னம்பிக்கை உன் ஆவியில் ஊறவேண்டும். தன்னம்பிக்கையே கர்மயோகிக்கு வெற்றியைத் தருகின்றது. தியாகமும் தன்னம்பிக்கையும் வெற்றிக்கு அஸ்திவாரமாயிருக்கின்றது.

நதி" என்று அந் நதியின் பிரவாகத்தைப்போன்ற தமிழ் நடையில் "கமலாம்பாள்" சரித்திரத்தில் ஆசிரியர் வர்ணிக்கும் கங்கை நதி காசிக்குப் பெருமை கொடுக்கிறது. ஞாலத்துள் வெற்போன்றும் ஈடிலதாய் விண்ணில் முடிதாக்கும் பொற்பாகிய இமயமலையிலிருந்து அதனுடைய மௌன ரகசியத்தையும் கூடவே அழைத்துக்கொண்டு வருகிற

"—மன்னர் செயத்
தான்போம் வழியெல்லாம் தன்மமொடு பொன்விளைக்கும்
வான்போந்த கங்கை" —பாரதியார்.

ஆற்றைக் கண்ணால் கண்டால் நமது பாவம் தீருமென்பதில் என்ன சந்தேகம்? இங்கு கடவுளை நேரில் காணலாம்.

ஆனால், விசாரமற்று இறைவனைக் காண வரும் ஏழைகளிடம் பணம் பிடுங்கித் தின்னும் புரோகிதர்கள் செய்யும் கொடுமையைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல் கங்கையில் தாண்டவமாடிக்கொண்டிருந்த கடவுள் ஓடிவிட்டார். இப்பொழுது காட்சி தருவதில்லை. ஏழைகளுக்கும் புரோகிதர்களுக்கும் இருக்கும் அஞ்ஞானத்தைப் போக்கி, உண்மையான கல்வி அளிக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் நமது தலைவர் பண்டித மதன்மோஹன் மாளவ்யா ஏற்படுத்தியிருக்கும் 'ஹிந்து சர்வகலாசாலை'யில்தான் கடவுள் பிரத்தியக்ஷமாகக் காட்சி தருகிறார்.

வட இந்திய யாத்திரையில் யான் தெரிந்துகொண்ட ஒன்றை மட்டும் சொல்லி இக் கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

நம்மைக்காட்டிலும் மற்ற மாகாணத்தவர்களுக்குச் சுதேச பாஷை அபிமானம் அதிகமிருக்கிறது. வேறு வழியில்லாவிட்டால் தான் வட இந்தியன் ஆங்கிலத்தில் பேசுவான். நம்மவர்களோ தமிழில் பேசினால், எழுதினால் அவமானமாக நினைக்கிறார்கள்.

குறிப்பு:—இந்தக் கட்டுரையை எழுதியவர் நல்ல தேசபக்தர். "கமலாம்பாள்" எழுதிய ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்களின் உறவினர்.

காலத்திற்கேற்ற நூல்கள், கற்பனைகள், பிறமொழி நூல்களின் மொழி பெயர்ப்புகள், சுவைக்கு மெளிய கவிதைகள், இன்பத்தையும், ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தரும் சிறு கதைகள், நமது செந்தமிழ் நாட்டில் சுலபமாய் உலாவுதல் வேண்டும்.

பொருளாதார நெருக்கடியும் ரூஸ்வெல்டும்.

திரு. E. பரமசிவம் அவர்கள், B. A.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நம் நாடெங்கும் பணப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் சொல்லொணாத் துயர் அடைந்து வருகின்றனர். தொழிற்சாலைகள் அநேகம் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலையின்றி வெளியே தள்ளப்பட்டனர். வியாபாரச் சுணக்கத்தால் பல வியாபாரிகள் நொடித்துப் போயினர். விளைபொருள் விலை மலிவால் விவசாயிகள் உழைப்புக் கேற்ற ஊதியமின்றி துன்புறுகின்றனர். மேலும் இவர்கள் கடன்காரர் வசப்பட்டு வட்டிக்குக்கூடப் போதிய வருமானமின்றிக் கஷ்டப்படுவதை நினைக்குங்கால், எம் மனம் அனலிலிட்ட மெழுகு போல் உருகுகிறது. நம் நாட்டில் மாத்திரம் இக் கஷ்டம் ஏற்படவில்லை. உலக மெங்கும் வியாபாரச் சுணக்கம்! விலை மலிவு! பணப் பஞ்சம்! வேலை யில்லாத் திண்டாட்டம்! பொன் கொழிக்கும் நாடெனப் போற்றப்படும் அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலும் இந் நிலைமையே!

இப் பணப் பஞ்சம் ஏற்பட்டதன் காரணத்தை ஊன்றிக் கவனித்தல் அவசியமாகும். பெரிய யுத்தத்திற்குப் பின் ஒரு நாட்டிலில்லாத சாமானை பிற நாட்டிலிருந்து பெறுவதை விடுத்து ஒவ்வொரு தேசமும் தன் தேவைக்கு வேண்டிய சகல சாமான்களையும் உற்பத்தி செய்ய ஆரம்பித்ததால் (Economic Nationalism) உலகப் பொருள் உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது. உலகில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு இவ்விதம் பொருள் உற்பத்தி அதிகப்பட்டது ஒரு காரணமாகும். பொருள் உற்பத்தி அதிகப்பட்ட ஒரே காரணத்தால் சாமான்கள் விலை இவ்வளவு குறைய முடியாது; வேறு காரணமிருத்தல் வேண்டும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் காலவியல்பே" அல்லவா? ஆதலால் பழையவற்றை வைத்துக்கொண்டு மாத்திரம் நீ தமிழை உயர்த்தலாம் என்று எண்ணாதே.

இக் கொடிய பணப் பஞ்ச மேற்பட உலகிலிருந்த பணத்தைக் கடல் கொண்டு விட்டதா அல்லது வெள்ளி தங்கச் சுரங்கங்கள் யாவும் காலியாகிவிட்டனவா? இரண்டுமில்லை. இதன் முக்கிய காரணத்தை உலகப் பொருளாதார அமைப்பில் காணவேண்டும். ஜனங்களுக்கு வாங்கும் சக்தி அபரிமிதமாகக் குறைந்துவிட்டது. தற்காலப் பொருளாதார அமைப்பில் பணம் முதலாளியை நோக்கி ஓடிவிட்டது, ஓடிக்கொண்டிருக்கிறது. முதல் குட்டி போட்டு பெருகும் சக்தி வாய்ந்ததாயிருக்கிறது. உழைப்புக் கேற்ற ஊதியமில்லை; தொழிலாளிகள் உழைத்துப் பணக்காரர் பொக்கிஷத்தை நிரப்ப வேண்டியிருக்கிறது. பணக்கார தேசமெனப்படும் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் செல்வத்தை எண்ணை ராஜா ராக்பெல், மோட்டார் அரசன் போர்டு, இரும்பு மன்னன் கார்னிஜி ஆகிய முதலாளிகள் ஆகருஷித்துக் கொண்டார்கள். ஆனால் எதற்கும் எல்லையுண்டு. இனிமேல் அவர்கள் செல்வம் வளர முடியாது. உதாரணமாக ஹென்றி போர்டு தினசரி ஆயிரக் கணக்கில் மோட்டார் உற்பத்தி செய்கிறார். ஜனங்களுக்கு வாங்கும் சக்தியில்லாவிட்டால் அவைகளை விற்று எவ்வாறு மென்மேலும் அவர் பணம் சேகரிக்க முடியும். ஊற்றுகள் இருந்தாலல்லவோ கிணற்றில் தண்ணீர் ஊறும். எனவே. ஜனங்களுக்கு வாங்கும் சக்தி (Power of Consumption) குறைந்து ஒரு சிலர் கையில் செல்வம் திரண்டு விட்டதே தற்காலப் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமென எளிதில் விளங்கும்.

வெகு காலத்திற்கு முன்னமே தற்கால பொருளாதாரப் போக்கை உய்த்துணர்ந்த அர்த்த சாஸ்திர நிபுணர் கார்ல்மார்க்ஸ் முதலாளிகளிடம் பணம் சேர்ந்து கொண்டே போகுமென்றும், அம் முதலாளிகளுக்குள்ளும் போட்டி ஏற்பட்டுச் சிறிய மீன் பெரிய மீன்களுக்கு இறையாவது போல, காலக்கிரமத்தில் சிறிய முதலாளிகளும் அழிவுற்று ஒரு சில கோடீஸ்வரர் கைகளில் செல்வம் சேர்ந்து விடுமென்றும், அப்போது உலகில் பொருள் உற்பத்தி ஏராளமாயிருந்த போதிலும் பணமின்மையால் ஜனங்களுக்கு வாங்கும் சக்தியின்றி வருந்துவார்களென்றும், அதுகாலை பொருளாதாரப் புரட்சி ஏற்படுமென்றும் கூறிய அவரது வாக்கு இப்போது மெய்த்துவிட்டது.

தேச சேவையே தெய்வ சேவை எனக் கருதும் அமெரிக்க ஐக்கிய மாகாண பிரஸிடெண்டாகிய ரூஸ்வெல்டு அந் நாட்டுப் பணக் கஷ்டத்தை ஒழிக்கச் செய்து வரும் முயற்சி வியந்து போற்றிப் பின்பற்றத் தக்கதாகும். ரூஸ்வெல்டு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கோத்தைக் குறைத்து தொழிலாளர் அநேகருக்கு வேலை கொடுத்திருக்கிறார். எனினும் இன்னும் 35 லக்ஷம் குடும்பங்கள் அரசாங்கப் போஷிப்பில் இருந்து வருகின்றன. விற்காமல் கிடக்கும் தானியம், துணி முதலானவைகளை அரசாங்கப் பொறுப்பில் 22 கோடி ரூபாய்க்கு வாங்கி அவைகளை ஏழைகளுக்குத் தானம் பண்ண ஒரு திட்டம் போட்டிருக்கிறார். இவ்விதம் செய்வதால் பொருள் விலை சற்று ஏறும். இதிலிருந்து தானியம் துணி முதலானவைகளுக்கு வாங்கும் சக்தி குறைந்து தரித்திரர்களாகி விட்டார்களென்றும் தெரிகிறதல்லவா?

அற வழியில் தவறி விழுந்தாலும் சலிப்பில்லாமல் எழுந்து மறுபடியும் மறுபடியும் நட. நம்பிக்கையை விடாதே. உன் பணியைச் செய். நிச்சயமாக வெற்றி கிடைக்கும்.

விளைபொருள் உற்பத்தியைக் குறைக்கவும் ரூஸ்வெல்டு முயற்சி எடுத்து வருகிறார். குடியானவர்கள் ஒவ்வொருவரும் கொஞ்ச காலத்திற்கு தங்கள் நிலத்தில் ஒரு பகுதியைச் சாகுபடி செய்யக் கூடாதென்ற ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படும்படி செய்து வருகிறார். இவ்விதம் விளைபொருள் உற்பத்தியைக் குறைப்பதால் அவைகளின் விலை ஏறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை நேரத்தைக் குறைத்துத் தொழிலாளர் அநேகருக்கு வேலை கொடுத்தும், பணக்காரரிடமிருந்து அடையும் வரிப் பணத்தை ஏழைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துப் போஷித்தும், விளைபொருள் உற்பத்தியைக் குறைத்துக் குடியானவர்களுக்குச் சகாயம் செய்து வரும் ரூஸ்வெல்டை நினைக்கும் போது குடிகளுக்குத் தானமளித்து அவர்களின் பிதாவென நம் பாரத கண்டத்தில் விளங்கிய ஹர்ஷா, அசோகா முதலிய அற சொரூபிகளின் ஞாபகம் வருகிறது. ஆனால் ரூஸ்வெல்டின் திட்டங்கள் வேலையில்லாமை, தரித்திரம் இவைகளை உலகத்திலிருந்து அடியோடு ஒழிக்க முடியாது; தற்கால சாந்தியாகத்தான் போக்க முடியும். வேலையில்லாமை, தரித்திரம், பணப் பஞ்சம் ஆகிய தற்கால உலகப் பிரச்சனைகள் நிரந்தரமாகத் தீர வேண்டுமானால் பொருளாதார அமைப்பில் உலகமெங்கும் மாறுதல் ஏற்பட வேண்டும். அவ்விதம் ஏற்படும் காலமும் வெகு தூரத்தில் இல்லை.

இந்தியா விவசாய நாடு. ஆகையால் தற்காலப் பொருளாதார நெருக்கடி நம் நாட்டுக் குடியானவர்களையே பெரிதும் பாதித்துக் கொண்டிருக்கிறது. நம் நாட்டுக் கிராமவாசிகளில் கடனில்லாதவர்

தமிழ் நாட்டுக் கவிச் சக்கிரவர்த்தி பாரதியாரின் கீதங்களைப் போன்ற எளிய—இனிய—தேனொழுகும் இசைகளைத் தமிழகத்தில் வாரி வாரி இறை.

சிறு கதை வளர்ச்சி. *

திரு. ப. சுருளிவேள் அவர்கள்.

உலகிற்கோர் கண்ணென மிளிரும் உயரிய பெயர் படைத்த பத்திரிகைகளிலெல்லாம் ஒன்றிரண்டு சிறு கதைகளேனும் இல்லாதிருப்பதில்லை. சிறு கதைகட்காய் வெளிவரும் பத்திரிகைகளின்றி, வெறும் ஜோதிடம், வைத்தியம், மதம், சமூகம், கட்சி, இராஜீயம் முதலிய விஷயங்கட்காய் வெளிவரும் பத்திரிகைகளிலும் சிறு கதைகள் ஸ்தானம் பெற்றிருக்கின்றன. சிறு கதைகளில் அத்தகைய சுவைதான் என்ன இருக்கிறது? நம்மை முக்தராக்கும் காரணங்களேதேனும் உளவோ? என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தற்காலப் பத்திரிகா உலகில் சிறு கதைகள் அதிகரித்திருப்பதையும், அதை நிர்மாணிக்கும் கர்த்தர்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதையும் நோக்குவோர் "எல்லாக் கட்டுரைகளிலும் சிறு கதைகளே அதிமுக்கியம்போலும்" என ஐயுறுதல் ஆச்சரியமன்று. இவ்விருபதாம் நூற்றாண்டே சிறு கதைகளின் சாம்ராஜ்யமெனினும் ஒக்கும். ஆயின் நம் தமிழ்க் கதைகளை மட்டும் படிப்பின் கதைகளின் உயர்வும், அவைகளின் சிரேஷ்ட ஸ்தானமும் நன்கு விளங்கா. பல பாஷைகளிலும் எழுதப்பட்ட இனிய கதைகளைக் கற்கவேண்டும். அப் பாஷைகளில் உலகப் பிரக்யாதி பெற்ற கதாசிரியர்களும், அவர்கட்கிருக்கும் மதிப்பும் தெரியவரும். ஆங்கிலத்தில் இத்தகையோர் நிறைந்துள்ளார். ருஷிய பாஷையில் டால்ஸ்டாய், செகோவ் முதலானோர் பிரசித்தமானவர்கள். பிரஞ்சு பாஷையில் கதாசிரியர்களிலெல்லாம் கைடிமோபாஸோம் போல் பிரசித்தி பெற்றோர் எவருமிலர். அவருடைய கற்பனைக் கதைகள் நாலாயிரத்திற்குமேல் இருப்பதாய்க் கூறுகின்றனர். சிறு கண்ணாடி பெரிய உருவத்தையும் தன்னுள் அடக்கிக் காட்டுவதுபோல், ஒரே பக்கத்தில் சாமர்த்தியமாகச் சுருங்கக் கூறி விளங்க வைத்திருக்கும் அவருடைய கதைகளைக் காண்போர் ஆச்சரியமுறுகிறார். இதேபோல் அமெரிக்காவில் ஓ. ஹென்ரி என்பாருளர். அவரை, சிறு கதைகளின் ஷேக்ஸ்பியர் எனினும் மிகையன்று.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சிறு கதைகளின் பிரசார முறையைக் காண்போர் ஸ்தம்பியுறுகிறார். செந்தமிழ்ப் பத்திரிகைகளில் எங்கேனும் ஒவ்வொரு கதைகள் வெளிவருவது போலன்றி. சிறு கதைகளுக்காய் வெளிவரும் வார, மாதப் பத்திரிகைகள் அநேகமுள. இங்கிலாந்தில் "தி ஸ்ட்ரேண்ட்" எனும் திங்கள் வெளியீட்டை அநேகர் கண்ணுற்றிருக்கலாம். அங்கு வெளியாகும் சிறு கதைப் பத்திரிகைகளிலெல்லாம் அதி சிரேஷ்டமானது இதுவே. இதில் சாதாரண கதாசிரியர்களுக்கெல்லாம் இடம் கிடையாது. அமெரிக்காவில் இத்தகைய வார, மாத சஞ்சிகைகள் இவ்வளவெனக் கூறுவதசாத்தியம். இவைகளில் சாடர்டே, ஈவினிங் போஸ்ட் முதலியன முக்கியமானவை. இனி, சிறு கதைகட்கு இவ்வளவு மகத்வம் ஏன் அளித்திருக்கின்றனவென்பதை ஆராய்வோம்.

சிறு கதைகளில் மாந்தரின் மனோ விகாரங்களை நீக்கும் ஓர் வித சக்தியே, அவைகளின் பெருமைக்குக் காரணமாகும். சொற்ப காலத்தில், அற்பச் செலவில் கற்க நினைப்போருக்குச் சிறு கதைகளை விட உயர்ந்தவை யாவுள? காவியமெனப் பலர் கழறுவர். அதன் ரஸனைச் சுவையறிவோர் அறிஞராயிருக்கவேண்டும். கதைகளோ,

---

களைப் பார்த்தல் அருமை. கடன்காரர் மன்னைப் பிடியில் அவர்களின் விழி பிதுங்கிக்கொண்டிருக்கிறது. இந்தியாவில் படித்தவர்கள் வேலையில்லாப் பூதவசப்பட்டு அலறிக்கொண்டிருக்கின்றனர். தொழிலாளர் நிலைமையோ அந்தோ பரிதாபம்! அவர்களும் வேலையின்றி, ஆடையின்றி, உணவின்றி ஓட்டாண்டிகளாக அலைகின்றனர். குடிகள் இவ்விதம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தும் நமது காருண்ய சர்க்கார் அவர்களை ஏறிட்டும் பாராதிருப்பது ஏனோ? அரசாங்கம் குடிகளின் தந்தையாயிருந்து அவர்களின் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டியது அதன் கடமை. ரூஸ்வெல்டைப் பின்பற்றிப் பொருளாதார நெருக்கடியை தற்கால சாந்தியாகவாவது போக்குவதற்கு நமது அரசாங்கம் தன் அசட்டைத் தனத்தை யொழித்து இனியாவது முன்வருமா?

நீவிரு போல் நட. குழி விழுந்த கண்களும், கன்னம் ஒட்டிய வாயும், எலும்பு தெரியும் மார்பும், கூனல் முதுகும், நரைத்த மயிரும் கூடிய தேகமாகும்படி பிஞ்சில் பழுத்த உன் தேகத்தை விட்டு விட்டு பின்பு திண்டாடாதே.

---

* இலந்து மங்களூரினின்று வெளிவரும் "ராஷ்டிர பந்து" ஆண்டு மலரில் ஸ்ரீமதி. சீதாதேவி எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.

கேவலமான கலைப் பயிற்சியுடையோரும் கற்று அதன் பொருளறிந்து மகிழ்வர். ஆதலின் அறிஞர் முதல் அற்பக் கலையுடையோர் ஈறாகக் கதைகளைக் கற்று ஆத்மானந்த மெய்துவர்.

மேல் நாட்டில் தினக்கூலியும் சிறு கதையினைக் கற்கப் பேராவாக் கொண்டு தினந்தோறும் சிறிது பணமேனும் சந்தோஷத்துடன் செலவு செய்கிறான். இதே காரணத்தால் இவர்களைத் திருப்தி செய்ய அநேக ஆசிரியர்கள் அபரிமிதமான சிறு கதைப் பத்திரிகைகளை வெளியிடுகின்றனர். ஆயிரக் கணக்கான கதை எழுத நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் முன் வருகின்றனர். ஆதலின் அங்குள்ள பத்திரிகைகள் நன்முறையில் நடைபெறுகின்றன.

உயர்வுடைக் கதாசிரியர்கட்குப் பண உதவி செய்து அவர்களின் அற்புதக் கற்பிதக் கதைகளையே பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும். பல பத்திரிகாசிரியர்கள் பிரசித்திபெற்ற ஆசிரியர்களின் கதைகளை ஒப்பந்த மூலம் வரவழைத்துக் கொள்ளுகின்றனர். உதாரணமாக பி. ஜி. ஓட்ஹௌஸின் சிறு கதைகள் "ஸ்ட்ரேண்ட்" பத்திரிகையிலன்றி வேறு பத்திரிகைகளில் வரவொட்டாமல் பத்திரிகாசிரியருக்கும் அவருக்கும் ஒப்பந்தமாயிருக்கிறது. இத்தகைய சிரேஷ்டரின் பெயர்கள் ஒரு பத்திரிகையிலிருப்பதே, அப் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களை அதிகமாக்க மிகச் சிறந்த உபாயமாயுளது. இவ் வுபாயத்தாலேயே அப் பத்திரிகைகளுக்கு ஐம்பதாயிரத்தினின்றும் லட்சம் சந்தாதாரர்கள்வரை உளராம். கதாசிரியன் சிரமத்திற்குத் தகுந்த பணம் கிடைப்பதால், அவன் எந்நாளும் உற்சாகத்துடன் கதை வரைந்துகொண்டிருக்கிறான். இங்கிலாந்தில் ஒவ்வொரு சிறு கதைக்கும் சுமார் ஐம்பது ரூபாய்வரை கிடைக்கிறது. உயர்ந்த ஆசிரியர்களுக்கோ இதற்கும் அதிகமாகவே கிடைக்கிறது. உதாரணமாக பி. ஜி. ஓட்ஹௌஸ், டப்ளியூ. டப்ளியூ. ஜாகப்ஸ், ஜி. ஜி. பெல் போன்றோர் கதைகளுக்கு நூற்றுக் கணக்கான ரூபாய் கிடைக்கிறது.

நமது தேசத்தில் ஒவ்வொருவரும் குடும்பத்தைக் காப்பாற்றப் பகலெல்லாம் பாடுபட வேண்டியிருக்கிறது. ஆதலின் ஐந்நூறு, அறுநூறு பக்கங்களுள்ள தொடர் கதைகளை வாசிக்க அவகாசம்

நம்மருமைத் தாய் நாட்டினில் அச்சம் ஒழிந்து, ஆண்மை பெற்று, வீரம் செறிந்து, வறுமை ஒடுங்கி, இரத்தல் ஒழிந்து, கவலை அகன்று, அடிமையை அகற்றி, பகையைக் கொன்று, சிட்டுக்குருவியென விடுதலை பெற்று, அன்பு வளர்த்து, சமத்துவம் பேணி, அன்னையைப் பணிந்து, வீர அமர வாழ்க்கை எய்தி, சிறப்புற்று பாரதம் திகழவேண்டு மென்பதே உனது பேரவாவாய் இருக்கட்டும். தாய் நாட்டின் நலனுக்குழைப்பதே உனது வாழ்க்கையின் நோக்கமா யிருக்கட்டும்.

கிடையா. ஹாஸ்ய ரஸமுடைய சிறு கதைகளாயின் சாயங்காலம் கற்று மனச் சாந்திகொள்ளுவர்.

நம் செந்தமிழ் நாட்டுப் பத்திரிகை சிலவற்றில் ஒன்றிலுள்ள கதையை மற்றொன்றில் பிரசுரித்துவிடுகின்றனர். வாரப் பதிப்பில் வரும் கதைகள் தினப் பதிப்பில் வெளிவராதிருப்பதரிது. இங்ஙனம் எங்கோ ஒவ்வொரு கதைகள் வெளிவருவதன்றி, சிறு கதைக்காகப் பிரத்தியேகமான பத்திரிகையொன்றில்லாதது நம் துர்ப்பாக்கியமே.

நம் தமிழ்க் கதாசிரியர்கள் வரைவதிலெல்லாம் காதலர் லீலை அவர்களுடையும் இன்னல், கடைசியில் கலியாணம். கலியாணம் முடியக் கதையும் முடிவடைகிறது. அதன் பின்னரே வாழ்க்கையின் சரித்திரம் இருக்கிறது. அதைக் கதையாகச் சித்திரிப்பின் எவ்வளவு இனிமையா யிருக்குமென்பதை, ஆசிரியர்கள் உணர்வதில்லை. ஆசிரியர் உலகானுபவமோர்ந்து கதைகள் இயற்ற முன் வரும்வரைத் தமிழ் நாட்டில் கதைகள் வளர்ச்சியடைவது துர்லபமே.

கதைகள் வரைந்துவிடுவதால் மாத்திரம் விசேஷமடைய முடியாது. அவைகளுக்கிடும் பெயரும் சாதுர்யமாய் அமைக்கப்பட வேண்டும். தமிழ்க் கதைகளுக்கிடும் கண்ணப்பன், ஆனந்தன், கற்பாசி, காதல் வெற்றி முதலான பெயர்களை நோக்குங்கள். ஆங்கிலக் கதைகளின் பெயரை நோக்குங்கள். நமது கதைகளின் பெயர் எவ்வளவுக்கெவ்வளவு உற்சாக மிழந்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு உற்சாகமாக ஆங்கிலக் கதைப் பெயர்கள் அமைந்திருக்கின்றன. உதாரணமாக ஓட்ஹௌஸன் எழுதிய "Pig H o·o·o·o·o·o Eye" எனும் பெயரை நோக்கியதும், அதை யோதி முடிக்க வேண்டுமென்னும் அவா உண்டாகின்றது. அதே கதையை எம்மவர் யாவரேனும் வரையின், கதா நாயக நாயகியின் பெயரிட்டு ஓதற்கின்றிச் செய்வர். கதைகளுக்கிடும் நாமகரணங்களின் உயர்வினாலேயே, அவைகள் அநேக தடவை ஓதப்படுகின்றன.

நமது கதைகள் மேல்நாட்டுக் கதைகள்போல் உயர்வடையா திருப்பதற்கு இன்னும் சில காரணங்களுள. முதலாவதாக ஆசிரி

தற்காலத்தில் நம் நாட்டில் வழங்கும் அடிமை மூடின மேனாட்டுப் படிப்பிலும், பட்டம் பதவியிலும் மோகம் வைக்காதே. ஏனெனில் நீ அவைகளிலே உன் வாழ்நாளைக் கழித்து, நம்மைப் பிணித்திருக்கும் அடிமைக் கூட்டை அவிழ்க்க முடியாது. உனது நோக்கங்கள் பாழாகி, பிற நாட்டின் ஆதீனத்திற்கு அடிமையாய் விடுவாய். உனது செல்வமெலாம் வீணாகி ஒன்றும் கல்லாதவனாகிப் போய்விடுவாய்.

யர்களுக்குப் போதிய பணம் கிடைக்காவிடில், நமது கதைகள் என்றும் உயர்வடையப் போவதில்லை. இரண்டாவதாக நம் நாட்டுப் பண்டித இரத்தினங்கள் கதைகளை அலக்ஷ்யமாய் எண்ணி, அவைகளை எழுதத் துணியாதிருப்பதே. ஆதலின் பத்திரிகாசிரியர்கள் கதையென்ற பெயரால் யாவர் எங்ஙனம் வரையினும், பக்கம் நிரைத்தற்கேனும் பிரசுரிக்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்க்கிறது.

இத்தகைய காரணங்களால் நம் நாட்டில் மேல்நாட்டைப்போல் சிறு கதை வளர்ச்சியின்றிக் கிடக்கிறது. இனியேனும் அறிஞர்கள் தம் சிந்தையைச் செலுத்திச் சிறு கதையை வளர்க்க முற்படுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகிறேன்.

கீழ் குறிப்பிட்டவர்களிடம்
நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்.

K. N. Sankaran Pillai,
No. 281, 2nd Division, Maradana,
COLOMBO.

N. P. 'Ramaswamy Esq.,
PALLATUR, P. O.,
(Ramnad Dt.,)

பொய்க் கதைகள், சாதிப் பிரிவினைகள், வகுப்பு வேற்றுமைகள் கொண்ட கதைகள், கவிகள், மூடக் கொள்கைகளை வளர்க்கும் பகுத்தறிவிற்கு முரணான கதைகள், கவிகள், இலக்கியங்கள் அகற்றுதல் வேண்டும்.

“பாரதி”

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

மாலை	ஸ்ரீமுக-மார்கழி	மணி
5	1933-ஹு டிசம்பர்—1934-ஹு ஜனவரிமீ	9

தீண்டாமை விலக்கு.

(ஒரு சிறு கதை.)

திரு. வே. இராமச்சந்திரன் அவர்கள்.

“பிராம்மணன், பள்ளி, பறையன் எல்லாம் ஒண்ணு பூடணும் என்று அந்த காந்தி சொல்றாமே, என்ன அநியாயம் இது? கலி முத்திப் போச்சு.”

“ஓய்! சாஸ்திரிகளே, நீர் அந்த மகான் சொல்வதின் தத்துவத்தை அறிந்துகொள்ளாது பேசுகிறீர். எப்படியும் ஒரு காலம் வரத்தான் போகிறது; அன்று நீங்களெல்லாம் உங்கள் மடி சஞ்சிகளையும், தர்ப்பைப் புல்லையும் தூக்கிக்கொண்டு காட்டை நோக்கி ஓட வேண்டியதுதான்” என்று சற்று லௌகீகியான ஒரு சாஸ்திரி பதில் கூறினார். மேற் கண்டவாறு மூன்று வைதீகப் பிராமணர்கள் பேசிக்கொண்டே தெருவில் நடந்து போய்க்கொண்டிருந்தனர்.

* * * * *

நாராயணன், அலி ஹுசேன், ஜான் மூவரும் இணைபிரியாத் தோழர்கள். அந்த வருஷம் பத்தாவது வகுப்புப் பரீக்ஷைக்கு மூவ

தமிழகத் தென்றல் நறுமணங் கொண்டு வீசுதல் வேண்டும். வெளிநாட்டார் நம்மைப் போற்றுதல் வேண்டும்.

ரும் சென்றிருந்தனர். எந்தக் காரியத்திலும் அவர்கள் கருத்து வேறுபட்டதில்லை. ஒருவர் சிறிது அபிப்பிராயப் பேதப்பட்டாலும், தன்னுடைய கருத்து தவறு என்று மற்றவர் தெளிவாக எடுத்துக் கூறித் திருத்தினால் வீண் விவாதமின்றி ஒப்புக்கொள்வது அவர்கள் வழக்கம்.

மேற் குறித்தவாறு தங்களுக்கு முன்னே செல்லும் வைதீகர்கள் பேசிக்கொண்டு செல்வதைக் கேட்ட நண்பர் மூவரும், அன்றே தீண்டாமையை இந்த நாட்டிலிருந்து ஒழிப்பதற்கு அவரவர்களால் இயன்றவளவு வாழ்க்கையில் எத்துறையில் இருந்தாலும் உழைக்க வேண்டுமென்று வான வீதியில் தன் பரிவாரங்களுடன் அப்பொழுதே கிழக்குக் கடலினின்றும் உதயமாகிய முழு வெண்மதியின் முன்பு சபதம் செய்துகொண்டார்கள். ஒரு புனிதமான அரிய வேலைக்கு விதை போடப்பட்டது.

* * * * *

நாராயணன், உபய வேதாந்த பிரதிவாதி பயங்கரம் திருமலாச்சாரியாரின் ஏக புத்திரன். தகப்பனார் ஜீவனம் வைதீகத்தாலேயே. பழைய பழக்க வழக்கங்களில் அர்த்தமற்ற மூட நம்பிக்கையும், பற்றும் கொண்டவர். தன் கட்சி நியாயத்தையே எடுத்து வாதாடுவது அவர் சுபாவம். மிகுந்த வைதீகப் பற்றுள்ளவர். ஆயினும் "நீச பாஷை" கற்று, தன் புதல்வன், "கந்தர்வ"னாகிவிட வேண்டுமென்று அவர் அந்தரங்க அபிப்பிராயம்.

அலி ஹுசேன் ஓர் பரம்பரை செல்வாக்குள்ள மகம்மதிய குலத்தில் பிறந்தவன். சமரஸ நோக்கும், தாராள சிந்தையும் அவனுக்கு இயற்கையாக அமைந்திருந்தன. பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிப்பது மிகவும் கொடுமையென்று அவன் கூறுவான். ஒவ்வொரு மதத்திலும் எவ்வளவோ அரிய கொள்கைகளும் சித்தாந்தங்களும் உண்டு. அவரவர் மதம் அவரவர்களுக்கு உயர்ந்தது. பிற மதங்களை இழிவுபடுத்தி தம் மதத்தைச் சிறப்பித்துக் கூறிப் பொய்ப் பிரசாரம் செய்வோர் கொள்கையை அவன் பலமாக கண்டிப்பான். ஒரு குளத்திற்கு எப்படி பல பக்கங்களிலும் படிகளிருக்குமோ, அவ்வாறே கடவுளை யடைவதற்குப் பல மதங்களும் என்று அலி ஹுசேன் சொல்வான்.

ஜான் ஓர் ஆதி திராவிடச் சிறுவன். அவன் இயற்பெயர் நல்லமுத்து. அவன் ஆறு மாதக் குழந்தையாய் இருந்தபோது பெற்றோர் இருவரும் காலராவினால் இறந்துவிட்டனர். அக்கிராமத்தில் வசித்து வந்த ஒரு கிறிஸ்து மதப் பாதிரியார் அக் குழந்

நீயும் பெண்மையும் சமமெனக் கருது.

தையை எடுத்து வளர்த்து, கல்வி கற்பித்து, ஜான் என்று நாமகரணம் செய்து கிறிஸ்துவ மதத்தில் சேர்த்துக்கொண்டார். அவனுக்கு நெடு நாள்வரை தான் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன் என்பது தெரியாது. அதை அறிந்தது முதற் கொண்டு தன் முழு கவனத்தையும், ஹிந்து மத சம்பந்தமான சகல சாஸ்திரங்களையும், நூல்களையும் படித்து அதிலுள்ள அரிய உயரிய நீதி ஞான போதனைகளைத் தெளிவாய் உணர்ந்துகொண்டான். எப்படியும் தான் ஒரு ஹிந்துவாகிவிட வேண்டுமென்று அவன் எண்ணினான். ஆனால் மிகச் சிறப்பு வாய்ந்த ஹிந்து மதத்தில் அதற்கு மார்க்கமொன்றுமில்லை யென்று அறிய அவன் அடைந்த வருத்தத்திற்களவில்லை. மூன்று நண்பர்களும் தமக்குள் எவ்வித ஜாதி மத வித்தியாசங்கள் பாராட்டுவதில்லை. உண்ணுதல், உறங்குதல் முதலிய தினசரி கடமைகளில் எவ்வித பேதமும் பாராட்டியதில்லை. கருத்தொருமித்த நண்பர்கள் கிடைப்பது அருமையன்றோ?

* * * * *

இருபத்தைந்து வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. நண்பர் மூவரும் வாழ்க்கைத் துறையாகிய பாதையில் வழி பிரிந்து விட்டனர். உலகத்தை உய்விக்க வந்த உத்தமன்—அறப்போர் அடிகள்—அஹிம்ஸா தர்மமூர்த்தி—நமது மகாத்மா காந்திஜி, நாட்டிலிருந்து தீண்டாமைப் பேயை ஓட்ட தன் ஒப்பற்ற உயிரையே அர்ப்பணம் செய்ய முன்வந்தார். தொண்டர் பல்லாயிரவர் தியாக அக்கினியில் மூழ்கி எழத் தயாரா யிருந்தனர். நாட்டின் ஒருமுகமான கவனம், வைதீகக் கோட்டையான கேரள தேசத்திலுள்ள குருவாயூர் க்ஷேத்திரத்தை நோக்கி யிருந்தது. தலைவர் கட்டளைப்படி விடுதலைப் போரிலிருந்து மக்கள் தங்கள் வேலையை தீண்டாமையைப் போக்குவதில் செலுத்தினர். ஜனங்களின் பேராதரவும், செல்வாக்கும் பெற்றுள்ள நியாயமான இயக்கம் இறுதியில் வெற்றியடைந்தே தீருமன்றோ? ஆம் அதில் சந்தேகமில்லை.

அலி ஹுசேன் தன் பெரிய வியாபாரத்தை விட்டு தேச சேவையிலீடுபட்டு பல முறை சிறை சென்று இப்பொழுது மலயாளம் சுற்றுப்புறங்களில் தீண்டமை ஒழிப்பு வேலை செய்து வருகிறான். ஜான் ஆகிய நல்லமுத்துவும் அங்கு தீவிரமான பிரச்சாரத்திலீடுபட்டிருக்கிறான்.

பெண்மைதான் சக்தியென்று நம்பு.

தஞ்சை, திருச்சி, குண்டூர், நெல்லூர் முதலிய பல இடங்களில் ஜில்லா கலெக்டர் உத்தியோகம் பார்த்து இப்பொழுது நாராயணன், ஐ. ஸி. எஸ். வேலையிலிருந்து விலகி, உபகாரச் சம்பளம் பெற்று ஏராளமான சொத்து, பங்களாக்களுடன் உதகமண்டலத்தில் உல்லாஸ வாழ்க்கை நடத்தி வருகிறான். அலி ஹுஸேனுக்கும், நல்ல முத்துவுக்கும் (இப்பொழுது அவன் ஹிந்துவாய் விட்டபடியால் நாமும் அவ்வாறே அழைப்போம்) நாராயணனைப் பற்றிய யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. ஏனெனில் இவர்கள் இருவரும் தீண்டாமையை ஒழிக்க வேலை செய்ய இதுவே சரியான சமயமென்று அதற்காகத் தங்கள் பழைய நண்பனான நாராயணனை தேடுகின்றனர்.

மறுநாள் தினசரிப் பத்திரிகையைப் படித்த நண்பர் இருவரும் திடுக்கிட்டு ஆச்சர்யமடைந்தனர். அதில் ஒரு பக்கத்தில் தீண்டாமையை ஒழிக்க அரசாங்கத்தார் சட்டம் செய்யலாகாதென்றும், அதற்கு சாஸ்திரங்களில் எவ்வித ஆதாரமுமில்லையென்றும், தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று கூறுவோர், வாழ்க்கையில் எவ்வித அந்தஸ்துமில்லாத ஒரு சிறு கூட்டத்தினரேயென்றும் அவர்கள் கூக்குரலுக்கு கவர்ன்மெண்டார் செவி சாய்க்கலாகாதென்றும், காந்தி இந்த விதமாக ஒரு தந்திரம் செய்து ஆதித் திராவிடர்களையும் தன் கக்ஷியில் சேர்த்துக்கொண்டு அரசாங்கத்தாரை ஒரு முகமாக எதிர்ப்பதற்கே சதி செய்கிறாரென்றும், இதில் ஒருவரும் ஏமாறலாகாதென்றும், தான் தீண்டாமையை ஒழிக்க பாடுபடும் தொண்டர்களிடம் சத்தியாக்கிரகம் செய்ய ஒரு தொண்டர் படை திரட்டப் போவதாகவும், அதற்கு தொண்டர்களாகச் சேர்ந்தோ, பண உதவியோ செய்யலாமென்றும், ஒரு கட்டுரை எழுதப்பட்டு, கீழே: டி. நாராயணன், ஐ. ஸி. எஸ். ரிடயர்ட் கலெக்டர் என்று கையொப்பமிடப்பட்டிருந்தது.

அதை வாசித்து முடித்த இரு நண்பர்களும், தம்மையும் மீறி வாய்விட்டுச் சிரித்தனர். அந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த காட்சி, சபதம் அப்படியே அவர்கள் கண் முன்பு வந்து நின்றது! இப்படி நாராயணன் செய்வானென்று யாராவது அப்பொழுது கனவிலாவது நினைத்திருப்பார்களா?

அறிவும், அன்பும், ஞானமும், சாந்தியும், பொருட் செலவின்மையும், ஆத்ம சக்தியும், உடல் வலியும், போராற்றலும் நாட்டுக் கல்வியின் மூலம் கொடுக்கக்கூடிய குருகுலங்களை ஸ்தாபகம் செய்.

சாஸ்திர ஆராய்ச்சி.

அதன்பொருட்டுத் தங்களையே பலிகொடுக்கத் துணிந்த உத்தமர்கள்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

பண்டைக் காலத்தில் சாஸ்திர ஆராய்ச்சியிலும், அறிவாற்றல்களிலும், நாகரீகத்திலும் மிகச் சிறந்திருந்தது நம் பரத கண்டமேயாகும். நமது முன்னோர்களாகிய இருடிகளும், சித்தர்களும், தபோதனர்களும் அக் காலத்தில் தங்கள் நலத்தைத் தியாகம் செய்து, உலகோர் உஜ்ஜீவிக்கும் பொருட்டுப் பல ஆராய்ச்சிகள் செய்து, பல உண்மைகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பல சாஸ்திரங்களின் பெயர்களால் எண்ணற்ற நூல்கள் எழுதி வைத்திருக்கின்றனர். பூத பௌதிக சம்பந்தமான பல அரிய சாஸ்திரங்களோடு ஆன்மார்த்தமான பல தத்துவ நூல்களையும், வேதாந்த நூல்களையும் நம் முன்னோர்கள் நமக்கருளியுள்ளார்கள். அம் முயற்சியில் எத்தனை இருடிகள், எத்தனை தபோதனர்கள், எத்தனை சித்தர்கள், எத்தனை அறிவாளிகள் தங்கள் உடல், பொருள், ஆவிகளை யர்ப்பணஞ் செய்ய நேர்ந்ததோ யாரே யறிவார்? பொதுநலத்தைக் கோரித் தங்கள் உயிரையே தியாகம் செய்த உத்தமர்கள் பலரது சரித்திரங்கள் காலச் சக்கரத்தின் கீழ்ப் புதைந்திருக்கின்றன. ஆயினும் பல சரித்திரங்களைப் புராணங்களிலும் படிக்கிறோம். ததீசி முனிவர் இந்திரனுக்காகவேண்டித் தம் முதுகெலும்பைக் கொடுத்திருக்கின்றார். கர்ணனது கொடைத் திறத்தின் வரலாறுகளில் எத்துணைத் தியாகம் வெளிப்படுகிறது! சரித்திர காலத்திலும் எத்தனையோ முடிமன்னர்களும், பிறரும் நாட்டின் நலத்தை நாடியும், பொதுஜனங்களின் அவசியத்தை முன்னிட்டும் தங்கள் உடல், பொருள், ஆவிகளைத் தத்தம் செய்திருக்கக் காண்கிறோம். புத்தர், இராமாநுஜர் முதலிய சமயாசாரியர்களும் சமயங்களின் பெயரால் தன்னலத்தைத் தியாகம் செய்தவர்களேயாவர். இத்தனை மேதாவிகள் தங்கள் உயிரைத்

நீதான் தேசத்திற்குத் தூண் போன்றவன். உன்னில் பொருந்தியிருக்கும் அநேக சக்திகளை மறைக்காது, குறைக்காது வெளிப்படுத்தி நமது நாட்டிற்கும் உலகத்திற்கும் பயன்படுத்துக.

திருணமாக மதித்து அர்ப்பணஞ் செய்த அஸ்திவாரத்தின்மேலேயே நம் இந்திய நாட்டின் பழம் பெருமைகள் அனைத்தும் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் பூர்வத்தில் அத்தனைப் பெருமைகளுக் கிலக்காய் நின்ற நம் பாரத நாடு இன்று எந் நிலையிலிருக்கிறது? நாடெங்குந் தேடினாலும் ஒரு ததீசியைக் காணோம்! மகாத்மாஜியைத் தவிர்த்து வேறு ஒரு தியாக புருஷரைக் காணோம்! எங்கே பார்த்தாலும் சுயநலமும், வஞ்சனையும், பேராசையுமே தாண்டவமாடுகின்றன. "உலகம் பொய்; உடல் அநித்தியம்; உயிர் நிலையற்றது" என்ற வாய் வேதாந்தம் இந்தியா முழுதும் பரவி நிற்கிறதேயொழிய, அக் கொள்கையின்படி அநித்தியமாகிய உடல், பொருள், ஆவிகளைத் துணிந்து தியாகம் செய்ய முன்வருபவர்களெத்தனை பேர்? இந் நிலையில் சாஸ்திர ஆராய்ச்சிக்கென—புதிய புதிய நவீனங்களை கண்டுபிடிப்பதற்கென உயிருக்குத் துணிந்து முயற்சி செய்பவர் நம்மில் எங்கே தோன்றப் போகின்றனர்?

இந்தியா நாகரீகத்தில் சிறந்திருந்த பண்டைக்காலத்தில் அநாகரீகர்களாய் வாழ்ந்துகொண் டிருந்தார்களென்று நம்மவர்கள் பழித்துக் கூறும் மேல்நாட்டாரை இன்று கவனித்துப் பார்த்தால், அவர்கள் நம்மைவிட பல வழிகளிலும் முன்னேற்ற மடைந்திருக்கக் காண்கின்றோம். மேல் நாட்டினர் பல ஆராய்ச்சிகள் செய்து பல நவீனங்களைக் கண்டுபிடித்து, மக்கள் நலத்திற்கு அவற்றை உபயோகப்படுத்தி வருவதை யாவரு முணர்வார்கள். ஆனால், அப்புதுமைகளைக் கண்டு பிடிப்பதில் சாஸ்திர ஆராய்ச்சியாளருக்கு கஷ்ட நஷ்டங்களும், பிராண அபாயங்களும் எப்படிப் பட்டவை யென்பதை எல்லாரும் உணர மாட்டார்கள். மிகச் சிலர் அவற்றை உணர்ந்திருப்பினும் அதன் உயர்வினை உண்மையில் மதித்தவர்கள் மிக மிக அரிதாவர். ஆகாய விமானம் இன்று ஆகாய வெளிகளில் அற்புதமாய்ப் பறப்பதைக் கண்டு அதிசய முறுவோர் எண்ணிறந்தோர். ஆயினும், இத்தனைச் சௌகரியமாகவும், அபாய மில்லாமலும் ஆகாயத்தில் விமானங்கள் பறப்பதற்கு எத்தனை அறிஞர்கள், அவ்விமானத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஆரம்பத்தில் உயிரை இழந்திருக்கின்றார்களென்பதை எண்ணிப் பாத்தவர்கள் எத்தனைபேர்? உண்மையில் மக்களின் மேன்மைக்குத் துணைபுரியும் நவீன சாதனங்களையும், நவீன வஸ்துக்களையும், நவீன மருந்துகளையும் கண்டு பிடிக்கும் முயற்சிகளில் உயிரை யிழந்தசாஸ்திர ஆராய்ச்சிகளில் வல்ல அறிஞர்கள் நமக்கு என்றும் ஞாபகத்தில் வைத்துப் பூசிக்கத் தகுந்தவரன்றோ? அவர்களின் வாழ்க்கை—ஜீவிதம் சரித்திர சம்பந்தமானதாகும். அவர்களே உண்மையில் மக்களெனத் தக்கவராகும்.

சமீபத்தில் சின்னாட்களுக்கு முன் காலஞ் சென்றாரென்று பத்திரிகைகளில் படித்த மாஞ்செஸ்டர் வாசியாகிய டாக்டர் சிட்னி ராசன் வில்சன் என்பவர் மேலே கூறியவர்களில் ஒருவராவர். அவர் மனிதன் ஸ்பரிச உணர்ச்சியை யிழந்து அந்திய தசைக்கு வந்த பின்னரும் கடைசிவரையில் தெளிவான அறிவோடு இருக்கச் செய்யும் சாதனங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பல வருடங்கள் பாடுபட்டு வந்தார். "கியாஸ் மாஸ்க்" ஒன்றை நிருமித்து, அதனால் ஜெயம் பெற—தங் கருத்தில் சித்தியையடைய எண்ணியிருந்தார். ஆயினும் அக் கண்டுபிடிப்பை யுலகத்திற்கு அறிவிக்கும் முன்னர்க் கடைசியாக ஒரு முறை அதனைத் தனக்கே உபயோகித்துப் பார்க்கவேண்டி முற்பட்டார். "மாஸ்க்" என்ற அச் சாதனத்தைத் தன் முகத்தில் மாட்டிக்கொண்டார். ஆயினும் துரதிர்ஷ்ட வசமாய் அப்பொழுதே உயிரை இழந்தார்.

இற்றைக்குச் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இப்படியே மிட்லே டாக்டர் ஜெஸ்ஸி லாஜியர் என்ற அமெரிக்கா சாஸ்திர பரிசோதகர் "எல்லோ பீவர்" என்ற மஞ்சள் காய்ச்சலெனும் தொத்துவியாதிக்குத் தன் உயிரைப் பலி கொடுத்தார். அன்னார் அந்த நோய்க்குக் காரணமாகிய கிருமியானது ஒரு வகைக் கொசுவினிடத்தினின்றும், அக் கொசு மனிதனைக் கடிப்பதால் மனித தேகத்திற் புகுந்து, அந் நோயை மனிதனுக்கு உண்டாக்குகிறதெனக் கண்டுபிடித்தார். அதை நிரூபிப்பதற்காகவே அத்தகைய கொசுவைக்கொண்டு தமக்கு அக் காய்ச்சலை வரவழைத்துக் காட்டி அதனாலேயே மரணமடைந்தார். ஆயினும் அவர் கண்டுபிடித்த உண்மைகள் வெளியானதிலிருந்தே மேற்படி வியாதிக்கு மக்கள் உள்ளாகாமல் தப்புவதற்கு வழி கண்டார்கள்.

டச்சு தேசத்தின் ஆராய்ச்சியாளராகிய ஜான் வான்ஸ்வா மெட்டாப் என்பவரும் இதைப்போன்ற சாஸ்திர ஆராய்ச்சியின் பரிசோதனையிலேயே தம் இரு கண்களையு மிழந்தார். ஆயினும் அவர் கண்டுபிடித்த சூக்ஷ்மதர்சனி இயந்திரத்தின் சகாயத்தினாலேயே தேனீயின் உடலமைப்பின் உண்மைகளை இன்று உலகம் அறியலாயிற்று.

பதினெட்டாவது நூற்றாண்டில் மனிதரின் சீர்ண கோசத்தின் உண்மைகளை, உயிருக்குத் துணிந்து தன்னுடலிலேயே பல பரிசோதனைகளைச் செய்து பார்த்துக் கண்டுபிடித்தவர் இத்தாலியா நாட்டு அறிஞராகிய ஜாரோஸ் பாலன்ஜான் என்பவராகும். அவர் சிறிய துணிப் பைகளில் ஆகாரத்தை வைத்து விழுங்கினார். துணிக்

குள்ளிருப்பினும் அவ் வுணவு வயிற்றில் ஜீர்ணமாய்ப்போயிற்று. பிறகு சிறிய மரக் குழாய்களில் மாமிசம், எலும்பு முதலிய கடினமான பதார்த்தங்களை வைத்து அவற்றை விழுங்கிப்பார்த்தும் பரிசோதனைகள் செய்தார். ஆயினும் அத்தனைப் பரிசோதனைகளிலும் யாதொரு அபாயத்திற்கும் உள்ளாகாமல் தப்பித்துப் பிழைத்ததோடு ஜீர்ணகோச சம்பந்தமான பல உண்மைகளை யறிந்து உலகத்திற்கு அறிவித்தார்.

ஸர் பாட்டிரிக் மான்ஸன் என்பவர் மலேரியாக் காய்ச்சல் சீதோஷ்ண பேதத்தால் உண்டாவதில்லை யென்றும், அது ஒரு வகைக் கொசுக் கடியாலேயே உண்டாகிற தென்றுங் கண்டுபிடித்தார். அவ் வுண்மைகளை நேரில் விளக்கவேண்டி மலேரியாக் கொசுக்களை லண்டன்மா நகருக்குக் கொண்டுவந்து, அவற்றைத் தன்மேல் கடிக்கவிட்டுக்கொண்டு மலேரியா ஜுரத்தைத் தமக்கு வரவழைத்துக்கொண்டு, பிராணாபாயகரமான நிலைமைக்கு உள்ளானார். ஆயினும் அதிர்ஷ்ட வசமாய்த் தாமே சிகிச்சைகள் செய்துகொண்டு குணமடைந்தார்.

சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளரின் பாதுகாப்புக்குரிய விளக்கைக் கண்டுபிடித்தவராகிய ஹம்பிரீ என்பவர் நிரூபித்துக் காட்டுவதன் முன்னர், நைட்ரஸ் ஆக்ஸைட் என்பது பிராணாபாயகரமான பொருளென மதிக்கப்பட்டு வந்தது. ஆயினும் அஃது அபாயகரமானதல்ல வென்பதைப் பரிசோதனைகளால் கண்டுபிடித்துக் கடைசியில் தம்மீதே அதை உபயோகித்துக் காட்டி, அவ் வுண்மையை வெளிப்படுத்தினார். அதனாலேயே இன்று அப் பொருள் வைத்தியத் துறையில் அதிக அனுகூலமான உதவிகளைப் புரிந்து வருவதாயிற்று. குளோரோபாரத்தின் உபயோகத்தைக் கண்டுபிடித்தவராகிய ஸர் ஜேம்ஸ் ஸிப்ஸன் என்பவரும் முதலில் அதனைத் தமக்கே உபயோகித்துக் காட்டியே உலகத்திற்கு மெய்ப்பித்தார்.

ஷார்க் என்னும் ஒருவகை மீன்கள் மனிதரை எதிர்த்து, அவர்களது உடலின் மாமிசத்தை யுண்பதற்கு விரும்புகின்றனவா என்பதைப் பரிசோதிக்கவேண்டி, வான் காம்பென் ஹெயில்னர் என்ற பிரசித்தியடைந்த சாஸ்திர பண்டிதர் பஹமியா தீவுக்குச் சின்னாட்களுக்கு முன் சென்றாரெனக் கேள்விப்பட்டோம். அவ் விடத்தில் ஷார்க் என்ற ஒரு வகை மீன்கள் நிறைந்துள்ள சமுத்திரத்தில் தானே இறங்கித் தன் உடலை அம் மீன்கள் உணவாகத் தின்கின்றனவா என்பதை நேரில் சோதித்தறிய விரும்பினாராம்.

க்ஷத்திரிய தாராபாய்.

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

ஆரிய மணிகளின் அருங்குணங்களையும், அற்புதக் காரியங்களையும் தொகுத்துரைக்கத் துணிந்து எழுதுவதில் அவர்களுடைய குணாதிசயங்களை நினைக்கச் சந்தோஷமும், அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை நினைக்கப் பரிதாபமும், அத்தகைய ரத்னங்கள் பெரிதும் இக் காலத்தில் இலராயினரே என்பதை நினைக்கத் துக்கமும் அடிக்கடி எமக்குப் பெருகுகின்றது. இக் கதையைப் படிப்பவர்களுக்கும் மன வெழுச்சி, இரக்கம், தெய்வ பக்தி, பெரு நோக்கு, ஊக்கம், சௌரியம், தேச பக்தி முதலிய வனைத்தும் தோன்றி வளருமென நம்புகிறோம்.

பூர்வத்திற் பெருந்தன்மை வாய்ந்து அருங்காரியங்க ளியற்றிப் புகழ்பெற்று, அப் புகழுடம்பினோடு இன்றைக்கும் நட்சத்திரங்களென விளங்கும் பெண்பாலாருள் "தாராபாய்" என்னும் நாமம்

லண்டன் நகரத்தில் அநேக ஆண்டுகளாகப் பக்ஷவாத ரோகத்தைப்பற்றிப் பரிசோதனைகளைச் செய்துவரும் ஸர் ஹென்றி ஹைண்டு என்பவர் ஒவ்வொரு நாளும் மரணத்தை எதிர்கொண்டு வேலை செய்கிறார். 20 ஆண்டுகளுக்கு முன்னால் அவர் தம்முடைய இடது கை நரம்புகளை வெட்டிக்கொண்டு, அத் துன்பத்தைச் சகித்துச் சோதனை புரிந்தார்.

இதுபோன்ற திருஷ்டாந்தங்கள் இன்னும் பலவற்றை மேல் நாடுகளில் காணலாம். எனவே நம் இந்தியர்கள் வீணே வாய் வேதாந்தம் பேசிக் காலந் தள்ளுவதை விடுத்துச் செய்கையில் காரிய சூரர்களாய், தியாக புருஷர்களாய், ஊக்கமுள்ளவர்களாய் சாஸ்திர ஆராய்ச்சிக்கும், நாட்டின் நன்மைக்கும் வேலை செய்ய முற்பட வேண்டுமெனக் கூற விரும்புகின்றோம். இத்தகைய தியாகசீலர்களன்றோ உண்மையான வீரர்களாவர்!

படைத்தவர் இருவர் இருந்தனர். அவர்களிருவருக்கும் வித்திபாசம் தெரியும்பொருட்டு இந்தக் கதாநாயகியை "க்ஷத்திரிய தாராபாய்" என்றனம். அவள் பிரபலமாக இருந்த காலத்தை வரையறுத்துக் குறிப்பதற்கு அனுகூலமும், அவகாசமும் இல்லையாயினும், அவளது நற்சரிதையைச் சுருக்கமாக ஈண்டு எழுதுகிறேன்.

முன்னர் ஆரியவர்த்தத்துத் துரைத்தனம் மகம்மதியர்பால் அமைந்திருந்த காலத்தில் நாட்டில் அங்கங்கே ஏற்பட்டிருந்த சமஸ்தானீர்களும், சிற்றரசர்களும் மிகச் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தனர். தேசத்தில் அதர்மம் மேலிட்டது. அநியாயம் சகிக்கமுடியாதாயிற்று. அதனால் குடிகள் சிறுமை அடைந்து, ஈன ஸ்திதியில் மிகுந்த வாதைப்பட்டுக்கொண்டிருந்தனர். அப்போது ராஜபுதனத்தில் வேதநகரம் என்னுமொரு சிறு சமஸ்தானம் இருந்தது. சூரதான் ராவ் என்பவர் அதற்கு அதிபர். அவர் மிக்க பலம் வாய்ந்தவர். சௌரியம் மிகுந்தவர். சத்துருக்களை வென்றோட்டி வீரங் காட்டியவர். ஆனால் அந்தத் தருணத்தில் அவர் வயது முதிர்ந்தவராக இருந்தார். மூப்பின் முதிர்ச்சியினால் சூரதான் ராவ் சத்துருவை யெதிர்க்கச் சக்தியற்றிருந்தனர். அவருக்குக் குமாரர் இலர். ஓரிளம் புதல்வி மாத்திரமே இருந்தனள். அந்தக் கன்யாரத்தினமே நமது கதாநாயகியாம் தாராபாய்.

முன்னிருந்த வைபவங்கள் குன்றி முதுமை மேலிட்டுக் கால வேற்றுமையினால் மன மெலிந்திருக்கும் சூரதான் ராவ் அந்திய காலத்தில் அருந்துணையாக இருப்பளெனக் கருதியிருந்த தம் மனைவியையும் இழந்தனர். அதனால் அவருக்கு நேர்ந்த துக்கம் சொல்லவொண்ணாது. அந்தத் தௌர்பாக்கியத்தின் கொடுமை இதனடியிற் காணும் செய்யுளினால் இனிது விளங்கும்.

"மனைவியை யிழந்த துக்கம் வருமுறவினர் பழிச்சொல்
இனைவுறக் கடனைக் கோட விழிஓர் பாற் றெழிலியற்றல்
முனைவுறு வறுமை நாளில் முன்னிய நேயனைந்தாம்
இனையவுந் தீயே யின்றி யெரித்திடு முடலை மாதோ."

இவ்வாறு அவர் நிற்கும் நிலையையறிந்து லில்லா என்னும் துருக்கனொருவன் வேதநகரத்தின்மீது படையெடுத்து வந்தனன். அவனை யெதிர்த்துப் போர்புரியத் திறனும், திடனுமில்லாத சூரதான் ராவ் தம் ராஜ்யத்தை அவனுக்கு விட்டுவிட்டு, தம் செல்வத் தாராவும், தானுமாக தக்பூர் என்னும் இடத்திற்குப் போனார்கள்.

அன்பனே! எப்பொழுதும் இன்பத்தையே நினை; இன்பத்தையே பேசு; இன்பத்தையே பாடு; இன்பத்தையே நாடு; இன்பத்தையே வேண்டி நில்; எங்கும் இன்பமாக விருக்கட்டும்.

அங்கு அவனுக்கு அன்பருமிலர்; ஆப்தருமிலர்; உற்றாருமிலர்; உறவினருமிலர். அவருக்கு உயிர்த் துணையும் தாராவே; உயிரும் தாராவே. பாராட்டுந் தாய், ஊட்டுந் தாய், முலைத் தாய், கைத் தாய், செவிலித் தாய் என்னும் தாய்மார் ஐவருள் முலைத் தாயொழிய ஏனைய நான்கு விதமான தாயாரும் அவளுக்கு அவரே. ஆன்மையின், தாயற்ற அந்தத் தாராவை அவர்தம் பிராணபதமாக வளர்த்து வந்தார்.

சூரதான் ராவினுடைய ஏழ்மையை யுணர்ந்து மேற்சொல்லிய துருக்க மூர்க்கன் அவரைத் தக்பூரினின்று ஓட்டத் துணிந்தான். அதன்பின் அவர்தம் பெண்மணியை அழைத்துக்கொண்டு, அவ்வூரைவிட்டகன்று அபூ (Mount Abu) என்னும் மலையினுச்சியில் வசிக்கப் போயினர். அந்தச் சமயத்தில், ஏனைய சிற்றரசர்களெவரும் அவருக்குத் துணைபுரியாராயினர். ஒவ்வொருவரும் தத்தம் ராஜ்ஜியத்தைக் காத்துக்கொள்ளும் கருமமாகவே இருந்தனர்.

சூரதான் ராவுக்குத் தாராபாய் தவிர வேறு சந்தானம இல்லாமையால், அவர் அந்தக் கன்னிகையைக்கொண்டே தம் பகையைத் தீர்த்துக்கொள்ளவும், துராக்கிருதனான துருக்கனைத் தண்டிக்கவும் கங்கணங் கட்டிக்கொண்டார். அவர்தம் மகளையே மகனெனப் பாவித்துத் தாராபாய்க்குப் போர்த்தொழில் பயிற்றுவித்தார். அந்தக் கன்னியாரத்தினமும், அபூ மலை நாட்டில் அவரோடிருந்து அவருக்குச் சேவை செய்து, அவர் கற்பித்த ரண வித்தையைச் சிரத்தையுடன் பயின்று வந்தனள். அவளுக்கு அறிவு சற்று விளக்கமுற்ற கால முதற்கொண்டே, அவள் தனக்குத் தந்தையார் சஸ்திர வித்தையைக் கற்பிக்குங் காரணம் இன்னதென ஊகித்து அறிந்துகொண்டாள். உத்தேசத்திற்குத் தக்கவாறு அவளுக்கு உற்சாகம் அதிகரித்தது. அவள் சஸ்திராஸ்திர வித்தையைக் (சஸ்திராஸ்திர வித்தை = சஸ்திரத்தையும் அஸ்திரத்தையும் பிரயோகிக்கும் வித்தை; சஸ்திரமாவது: கையிற் பிடித்திருக்கத்தக்க ஆயுதம்; அஸ்திரமாவது: எறிபடை, கையை விட்டு அகன்று செல்லும் ஆயுதம். கத்தி சஸ்திரமெனப்படும்; அம்பு அஸ்திரமெனப்படும்.) கருத்துடன் கவனித்துக் கற்று அதனில் தேர்ச்சி பெற்றாள். அவள் இளமைப் பருவத்திலிருந்தே சரீரப் பயிற்சிக்குரிய வியாயாமங்கள் செய்து வந்தமையால், அவளுடைய தேகம் மிக்க வன்மை பொருந்தியதாயிற்று. அன்றியும், வாலிபத்திலிருந்து ஹட யோகத்துக்குரிய ஆசன முறை

மறந்தும், குற்றுயிராய் ஆடிக்கொண்டும் இருக்கிறதுமான நம் நாட்டுக் கைத்தொழில்களைப் புதுப்பித்து வளர்.

களை அப்பியாசித்தவனுக்குத் தேகம் நெகிழ்ந்து இணங்குவது போல, அவளுடைய தேகம் மனத்தோடு முரண்படாமல் மனம் ஏவிய கட்டளையை நிறைவேற்றி வந்தது. அஃது அநேகருக்கு அசாத்தியமான காரியமாகும். எழுந்து ஓரிடத்திற்குப் போகவோ ஒரு காரியத்தைச் செய்யவோ மனமிருக்கும். ஆயினும் தேகம் இணங்காது. அப்படிப்பட்ட நிலைமையிலுள்ளவர்களை நாம் எங்கும் காணலாம். பயிற்சியின் பயனாக அவளுடைய தேகம் வன்மை பொருந்தியது ஒருவாறிருக்க, மலை நாட்டு வாசத்தினாலும், தந்தையின் உபதேச விசேஷத்தினாலும் அவளுடைய மனமும் தேகத்தைப் போலவே வன்மை பொருந்தியதாயிற்று. அவளது இள நெஞ்சம் வன்னெஞ்சமாகி வைரம் பற்றியது. இவ்வாறு அவ்விளங்கொடியானவள் சுக்கில பக்ஷத்துச் சந்திரனைப்போல நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வந்தனள். அந்த அபிவிருத்திக்குத் தக்கவாறு தன் தந்தைக்கு நேர்ந்த அவமானத்தைப்பற்றி விசனமும் அவளுக்கு அதிகரித்து வந்தது. அவருக்கு அத்தகைய அவமானம் விளைவித்தவனைக் கொன்று பகையைத் தீர்த்துக்கொள்ள அவள் சமயம் பார்த்துக்கொண்டேயிருந்தனள்.

அந்த எண்ணத்தைத் தவிர அவளுடைய மனத்தில் வேறு எண்ணமே கிடையாது. ஆதலின் தாராபாய்க்கு அந்தத் துருக்கன் மீது தீராப் பகையும், அதனைத் தீர்த்துக்கொள்ளும் அவாவும் நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தது.

கல்வியிலும் சௌரியத்திலும் தாராபாய் ஒப்புயர்வில்லாதிருந்ததன்றி, ரூபலாவண்யத்திலுஞ் சிறந்து விளங்கினள். அவளுக்கு வயது வந்தவுடன் அவளுடைய சௌந்தரியக் கீர்த்தியைக் கேட்டு, அவளை மணக்க எண்ணி, ராஜபுத்திரர்கள் அநேகர் அவளுடைய தந்தைக்கு வர்த்தமான மனுப்புவாராயினர். முதலில் மேவாட் ராஜபுத்திரனான ஜய மல்லன் என்பவன் அவளைத் தனக்குப் பாணிக்கிரகணஞ் செய்விக்கக் கேட்டான். ஆனால் தன் தந்தையின் பகைவனை யடக்காமல் தான் விவாகஞ் செய்துகொள்வதில்லையெனத் தாராபாய் நிச்சயித்துக்கொண்டமையால் "என் தந்தையின் பகைவனைக் கொல்பவனே எனக்குக் கணவனாகத் தக்கவன்" என்று அந்த ராஜபுத்திரனுக்குச் சொல்லியனுப்பிவிட்டாள். கோப காரணத்தை உடனே மறந்து பொறுமையை மேற்கொள்வது அந்தணருக்குரிய தர்மமாகும். வன்மம் வகித்துப் பகை சாதிப்பது க்ஷத்திரியருக்குரிய தர்மமாகும். க்ஷத்திரம் வைத்து விவகரிப்பவர்களாதலின் அவர்கள் க்ஷத்திரியர்கள் எனப்பெற்றனர்.

நம் சுதந்திரக் கொடி கட்டி நமது நாட்டுப் பண்டங்களை ஏற்றிய கப்பல் கள்பரந்த நீரில் ஓட்டும்.

சூராதான் ராவும், மேவாட் ராணாவும் ஓரினத்தவர்களேயாதலின், மேவாட் ராஜகுமாரன் தன் புதல்வியைக் கலியாணஞ் செய்துகொள்ள விரும்பியது சூராதான் ராவுக்கு நியாயமாகவே தோற்றியது. அந்த ராஜகுமாரன் தன் புத்திரியின் சங்கற்பத்தை நிறைவேற்றுவானாயின் அவனுக்கு அவளைப் பாணிக்கிரகணஞ் செய்விக்கலாமென்று அவர் நினைத்திருந்தார். ஆனால் ஜய மல்லனோ சௌரியமற்றவன்; கர்வங்கொண்டவன். தாராபாயின் சபதத்தை நிறைவேற்று முன்னரே விவாகம் நடந்தேற வேண்டுமென்றான். தந்தையும், மகளும் அதற்கு இசைந்தாரல்லர். அவனுடைய ஆசை நிறைவேறாது போகவே ஜய மல்லன் தாராபாயைப் பார்த்து, "உன் தந்தையைப்போல் நீயும் தரித்திர லக்ஷணமுடையவள். இப்போது என்னைப்போன்ற ராஜபுத்திரனைத் திரஸ்கரித்தனை. ஆதலின், உன் வீட்டில் ஊழியஞ்செய்யும் இழிந்த வேலைக்காரன் தவிர வேறெவனும் உன்னை மணக்கமாட்டான் என்பதை உறுதியாகக் கொள்" என்று தூஷிக்கத் தொடங்கினான். அந்த நீச வார்த்தைகளைக் கேட்டவுடனே சூராதான் ராவ் மனம் பொறுக்காமல் கட்கத்தைக் கொண்டு அந்த ராஜகுமாரனைக் கடிந்து கூறுடியெறிந்தார். அந்தச் செய்தி அவனுடைய தந்தையாகிய ராய மல்ல ராஜனுக்கு எட்டியதும், ராய மல்லன் அதைக் கேட்டுச் சிறிதும் சிந்தையுறாது "நிர்மலமாகிய எங்கள் வம்சத்தைக் கெடுக்க வந்த அந்தத் துஷ்டப் பையனுக்குத் தக்க சிக்ஷை கிடைத்தது" என்று, துஷ்டனைத் துரை மகனெனத் தாக்ஷணியம் வைக்காமல் துண்டாடிய சூராதான் ராவை மெச்சிக் கொண்டாடினான்.

ராய மல்ல ராஜனுக்குப் பிருதிவி ராஜன் எனப் பெயர் படைத்த மற்றொரு குமாரனிருந்தான். முன்னொரு தருணத்தில், ராய மல்லன் அவன்மீது கோபங்கொண்டு அவனை ஊரினின்றும் அப்புறப்படுத்தியிருந்தான். மூத்த குமாரனான ஜய மல்லன் மேற்சொல்லியவாறு தேகமிழக்கவே, ராய மல்லன் தன் இளைய குமாரனான பிருதிவியை வரவழைத்து அவனுக்கு இளவரசுப் பட்டங் கட்டினான். அவன் மிகுந்த நற்குணசீலன். நியாயப் பிரியன். ஆதலின் குடிகள் அவனிடத்து அனுராகங் காட்டி, அவன் தம்மூருக்குத் திரும்பி வந்து சேர்ந்ததைக் குறித்துச் சந்தோஷமடைந்தனர். சிலநாட் கழிந்த பின்னர் தாராபாயின் நற்குணங்களையும், ரூபலாவண்யாதிகளையும் அவன் கேள்வியுற்றுத் தன் சௌரியத்தைக் காட்டி அவளை மணந்துகொள்ள நிச்சயித்தான். பின்னர் அவன் சூராதான் ராவுக்குச் சத்துருவாகிய துருக்கன்மீது படையெடுக்க

அன்னிய நாட்டுப் பொருள்களுக்கு நமது தேசம் சந்தையா இருக்க வேண்டாம்.

னுற்றான். அதைக் கேட்டுத் தாராபாய் சந்தோஷித்துத் தானும் அவனுடன் கூட யுத்த யாத்திரைக்குப் புறப்பட்டாள். பிருதிவி ராஜன் ஏறக்குறைய எண்ணாயிரம் படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு ஆப்கான் (Afghan) தேசத்தினனை சத்துருவை வெல்வதற்காக அவனுடைய தோதா நகரத்தின்மீது படையெடுத்துச் சென்றான். அந்தச் சமயத்தில், தாராபாய் புருஷ வேடந் தரித்துக் குதிரையேறிப் பிரத்தியட்ச மகிஷாசூரமர்த்தினியே போன்று அத்தயவனனுக்கு யமனாகப் பிரயாணமாயினள்.

அவர்கள் தோதா நகரத்தண்டையிற் போய்ச் சேர்ந்த தினத்தில் துருக்கர் எல்லோரும் உற்சவங் கொண்டாடிக்கொண் டிருந்தனர். அவர்களுக்கு முக்கியமான மோகரம் பண்டிகையின் கடைசித் தினமாதலின் அவர்கள் அதிக உற்சாகத்தோடு குதூகலமாக பீர் உற்சவஞ் செய்து, ரதங்கள், வாகனங்கள், வாத்தியங்கள் முதலியவைகளுடன் திரள் திரளாக ஊர்வலம் வந்துகொண்டிருந்தனர் அவர்களுடைய பிரபுவாகிய லில்லா என்பவன் மேன்மையான ஆடையாபரணங்களணிந்து தன் மாளிகையின் மேல் மேடையினின்று அம் மகோற்சவத்தைக் கண்டு களித்துக்கொண் டிருந்தான். பிருதிவி ராஜனும், தாராபாயும் தம் சேனைகளை ஊருக்கு வெளிப்புறத்தில் நிறுத்திவிட்டுத் தம் வேலையாள் ஒருவனை மாத்திரம் தம்முடன் அழைத்துக்கொண்டு, உற்சவம் பார்க்க வந்தவர்களைப்போல், அந்தக் கூட்டத்திற் கலந்து அப்போது போய்க்கொண் டிருந்தனர். அங்ஙனம் அவர்கள் செல்லுகையில், தாராபாய் தன் தந்தையின் சத்துரு அவனேயாவனென்று அறிந்து, குறியிட்டு, அவன்மீது தைக்குமாறு ஓர் அம்பை எய்தனள். தாராபாயோ அநேக காலம் அஸ்திர வித்தையில் அதுவே தொழிலாகப் பழகி, அறையிலாடி அப்போது அப்பலத்தில் ஆட வந்தவளாவள். அவள் எய்யும் அம்பும் அவமாகுமோ? ஜன சந்தடியினிடையினின்று ஆகாய வாணமெனக் கிளம்பிச் சீற்றத்துடன் அதிவேகமாகப் பாய்ந்து சென்ற அவ் வஸ்திரம் அத்தயவனனுடைய மார்பைப் பிளந்து, அவனை யமபுரிக்கு அனுப்பியது.

உடனே துருச்கர்சள் ஒருங்குகூடி நகரத் துவாரத்தில் மதக் கரி யொன்றைக் காவலாக வைத்துத் தம் தலைவனது பிராணனைப் போக்கிய போர்வீரன் யாவனெனத் தேடத் தொடங்கினர். ஆனால் அவ் வீரன் அவர்களுச்கு அகப்பட்டானல்லன். பகைவனைப் போக்கிய பின்னர், அம் மூவரும் ஊருக்கப்பாலிருந்த தம் சேனையுடன் சேர்வதற்குப் போய்க்கொண் டிருந்தனர். நகரத் தலைவாயி

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய இவைகளை எப்பொழுதும் நாடு.

லிருந்த துருக்கரது சிறு படையும்; மதக் களிறும் அவர்களை யெதிர்த்து மடக்கலாயின. பிருதிவி ராஜனும், தாராபாயும், சேவகனும் மறுபடியும் தைரிய மேற்கொண்டு போராடச் சித்தமாயினர். மதங்கொண்ட அந்த யானை அண்டமதிர ஆரவாரித்து அருகில் வரவே, தாராபாய் தன் கையிற் பிடித்திருந்த வாளினால், அதன் தொண்டத்தைத் துண்டமாக்கினள். சீறி வந்த யானை சிதையுண்டு பெருமுழக்கமிட்டுச் சோர்ந்து அப்புறமகன்று விழுந்தது. அங்கிருந்த சிறு படையை வென்று மூவரும் வெளிப்போந்தனர்.

நகரத்தினின்று வெளிப்போந்த பின்னர்ப் பிருதிவி ராஜன் தன் சேனைகளை நோக்கித் தோதா நகரத்துப் படைகளுடன் போர் புரியுமாறு கட்டளையிட்டான். உடனே அந்த வீரர்கள் பட்டணத்தை முற்றுகையிட்டு, அங்கிருந்த துருக்கர் சேனையை நாற்புறமுஞ் சிதறியோட அடித்தனர். துருக்கர்களுள் முக்காற்பாதி மாண்டுபோயினர். பின்னர்ப் பிருதிவி ராஜனும், தாராபாயும், மகோற்சவத்துடன் நகரப் பிரவேசஞ் செய்து, வெற்றிக்கோடி நாட்டினர். தமக்கு வெற்றிவாய்ந்த பின்னர்ப் பிருதிவி ராஜனுடைய படைகள் துருக்கர்களைப் பிடித்து வருத்துவதைக் கண்ணுற்றுத் தாராபாய்—"அங்ஙனஞ் செய்வது அடாது; பகை தீர்ந்தபின்னர்ப் பரிதாபங் காட்டுவதே பரம வீர லக்ஷணம். செத்த பாம்பையடிப்பது சௌரியமாகாது. பகைஞர் கைசோர்ந்து கலைத்துக் காலில் வீழ்ந்த காலத்து, அவர்களிடத்துக் கருணை கொண்டொழுகுவதே உத்தம வீரர்க்குரிய கடமை" என்று சொல்லித் தம்மவருக்குப் புத்திபுகட்டி, மிகுந்திருந்த துருக்கர்களை யாதரிப்பாளாயினள்.

தான் கொண்ட கொள்கையை முடித்த பின்னர்த் தாராபாய் அந்தப் பிருதிவி ராஜனை வரித்தனள். அவ் விருவருடைய தந்தைமாரும் அவர்களுடைய விருப்பத்திற் கிணங்கி, சுபமுகூர்த்தம் நிச்சயித்து விவாக மகோற்சவத்தை வெகு விமரிசையாக நடப்பித்தனர். சூரதான் ராவுக்கு அவருடைய ராஜ்யம் திரும்பவுங் கிடைத்தது. தாராபாயின் சபதம் நிறைவேறியது. அவளுடைய சாகசமும், திறமையும், பெற்றோரிடத் தன்பும், வாக்குறை தவறா நெறியும், இரக்கமும் நமக்கு நற்பாடங்களாயின.

பின்னர் சூரதான் ராவுக்கு விருத்தாப்பியம் அதிகரித்தமையின், அவர்தம் ராஜ்யத்தைத் தம் மருமகனான பிருதிவி ராஜனுக் களித்துப் பட்டாபிஷேகம் செய்வித்தார். தாராபாயுங் கணவனும் சீருஞ் சிறப்பும் பொருந்திக் குடி ஜனங்களைத் தம் மக்களெனக் கொண்டு, அவர்களிடத்து அன்பு பாராட்டி, அரசுபுரிவதைச் சூர

மேனாட்டு நாகரீகத்திலும், டாம்பீகத்திலும் விட்டிற் பூச்சி போல் வீழாதே.

நம் நாடும் கத்தரும்.

திரு. A. ராமசாமி அவர்கள்.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் முதன் முதலாக நாகரீகம் பெற்று விளங்கியது இந்திய நாடேயென்பது சரித்திர ஆராய்ச்சியாளர் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு முடிவாகும். பண்டைக்காலத்தில் வாணிபம், விவசாயம், கைத்தொழில் ஆகியவைகளில் மிகமேம்பாடடைந்திருந்தது இத் தேசம் என்பதைப் பல திருஷ்டாந்தங்களால் விளக்கலாம். தற்போது அவையனைத்தும் சிறுகச் சிறுகக் குன்றி, ஒவ்வொரு விஷயத்திற்கும் அயல் நாட்டினரையே எதிர்பார்த்துக் கொண்டு யாதொன்றும் அறியாத காட்டுமிராண்டிகளைப் போலிருந்து, இப்போதுதான் புதிது புதிதாக நாகரீகம் கற்றுக்கொள்ளுவாரைப் போன்று விவரிக்கும்படியான தன்மை நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறானதற்குக் காரணம் ஆங்கில அரசாட்சியே யென்று தீவிரவாதிகள் கூறத் துணிவார்கள். ஆனால் நன்காராய்ந்து பார்க்குமிடத்து நாமே காரணமாவோ மென்பது புலனாகும். அயல் நாட்டினர் தம் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டிச் சில இன்னல்கள் விளைவித்திருந்த போதிலும் நம் நாட்டினருக்கு வலிமையான தேசாபிமானமும், ஏமாறாத் தன்மையும் இருந்திருக்குமானால் தற்போது இவ்வாறாய வறுமை நிலையும், பேதைமை நிலையும் நம் நாட்டிற்கு ஏற்பட்டிராதென்று கூறுவேன். நமது பண்டைப் பெருமைகளை ஒவ்வொன்றாக எடுத்துரைப்பின் மிக விரிவாக முடியும். சுருங்கக்

தான் ராவ் கண்டு களித்துச் சுகமாகத் தனித்திருப்பாராயினர். ராஜ்ய நிர்வாகத்தில் தாராபாய் தன் கணவனுக்குத் துணையாகி, ஜனங்களுக்குப் பற்பல விதங்களில் அனுகூலங்கள் அமைத்து வந்தாள்.

எளிய வாழ்க்கையே நம் நாட்டிற்கு ஒக்கும் நாகரீகம் என்பதை மறவாதே.

கூறுமிடத்து நம் நாடு பழம் பெருமையும், செல்வமும் மிகக் குன்றி, சிறுமையும், மிக வறுமையுமே தற்போது அடைந்துள்ளது என்றல் சாலுமென்று கருதுகிறேன். இவ் வறுமையை யொழிப்பதற்காகவே உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தியடிகள் கத்தரியக்கத் தோற்றுவித்துள்ளார். இவ் வியக்கம் தோன்றிய காலத்தே அநேகர் இதை ஆதரித்தாரிலர். துவக்கத்தில் பிரபல தேசாபிமானிகளெல்லோருமேகூட அவநம்பிக்கை கொண்டிருந்தனர். தற்போதோ வெனின் தீவிரவாதிகள் மாத்திரமின்றி மிதவாதிகளும், ஜஸ்டிஸ் கட்சியினருங்கூட இவ் வியக்கத்தை மிகவும் ஆதரிக்கின்றனர். அது மட்டிலுமல்ல உத்தியோக வர்க்கத்தினருங்கூட கத்தரை யாதரிக்கின்றனர். தற்போதுள்ள சென்னை மாகாணக் கல்வி மந்திரியாரும் கத்தருக்கு மிக்க ஆதரவளித்துக்கொண்டு வருகிறார். சில பள்ளிக்கூடங்களில் நூல் நூற்க ஆதரவளித்துக்கொண்டு வருகிறார். சில பள்ளிக்கூடங்களில் நூல் நூற்று, நெசவு நெய்யும் வேலையும் கற்பித்து வருகிறார்கள். இதனால் கத்தரியக்கம் பெருகிவிட்டதென்று கூறத் தடையில்லை. ஆயினும் நமது நாட்டின் ஜனத் தொகைக்கு இந் நிலைமையையொரு விரிவான நிலைமையென்று கூறிவிடுவதற்கில்லை. ஏனெனில் நம் நாட்டினர்க்கு வேண்டிய அளவு துணிகள் தற்போதுண்டாகின்ற கத்தர் நூற்களால் ஆவதில்லை. அயல் நாடுகளிலிருந்து இன்னும் ஏராளமான துணிகள் இறக்குமதியாய்க்கொண்டே யிருக்கின்றன. அத் துணிகளையும், அந் நூற்களையும் முற்றிலும் தடைப்படுத்தி நிறுத்துவதற்குப் போதியவளவு கத்தர் நம் நாட்டில் வளர்ந்துவிடுமாயின் அப்போதுதான் கத்தரியக்கம் பயன் பெற்றதென்றும், மகிமையும் பெருக்கமு முடையதென்றும் கூறவேண்டும். அவ்வாறாவதற்கேற்ற காரியங்கள் நாட்டில் நடைபெற்று வருகின்றனவென்றும் கூறலாம். கல்வி மந்திரியாரவர்கள் கத்தருக்கு ஆதரவளித்து வருவதே இதற்கொரு திருஷ்டாந்தமென்று கூறத்தகும். இவ்வளவு பெரிய தேசத்திற்கு அத்தி பூத்ததைப்போல் ஒரு அதிகாரி மாத்திரம் கத்தருக்கு ஆதரவளிப்பது போதாது. அதிகார வர்க்கத்தினர் அனைவரும் முக்கியமாக மாகாண கவர்னர்கள் மனப் பூர்வமான ஆதரவளிக்க வேண்டும். சர்க்காரால் போதியவளவு ஆதரவளித்து அயல் நாட்டுத் துணிகளுக்கும் நூற்களுக்கும் ஆதரவைக் குறைத்து, உள் நாட்டுத் துணிகள் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய உபாயங்கள் செய்தும் ஜனங்களுக்குக் கற்பித்தும் வரவேண்டும். ஆனால் இவ்வாறாவது துர்லபம். அடிமை நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்று கபடமற்று எஜமானன் எங்காவது பாடுபடுவானா? அதைப்போல நம்மை அடிமைகளாக்கி வைத்திருக்கும் சர்க்கார் நமது முன்னேற்றத்திற்குத்

எண்ணும்—செய்யுங் காரியங்களில் உ[illegible]சமும், ஆர்வமும், திண்ணமும் பொருந்தி யிருக்க வேண்டும்.

துணைபுரியு மென்றெண்ணுவது பகற் கனவென்றே யெண்ணுகின்றேன்.

கத்தரினால் நாட்டிலுள்ள ஏழைகள் அநேகர் வயிறு வளர்க்க ஏதுவாயிருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். இதைச் சற்று ஆராய்வோமாயின் ஒரு ஏழையானவன் தன் குடும்பத்திற்கோ அல்லது தன் வயிற்றிற்கோ போதுமான அளவு திருப்தியான உணவை இந்தக் கத்தர் நூற்பதினாலேயே தேடிக்கொள்ள முடியாதென்பது புலனாகும். ஒரு நாளெல்லாம் நூற்றால் இரண்டணா அல்லது மூன்றணாவுக்கு மேல் கூலி கிடைக்காது. இதைக்கொண்டு ஒருவன் நாளெல்லாம் ஓயாது நூல் நூற்றுவிட்டுத் திருப்தியாகச் சாப்பிடுவதற்கு இக் காலத்தில் போதுமா என்பதைச் சற்று கவனித்தால் விளங்கும். ஒரு வயிற்றுக்கே தடுமாற்றமென்றால், குடும்பத்தைப்பற்றிக் கூறவேண்டியதே யில்லை. ஆகையால் ஏழைகளாயிருப்பவர்கள் நூல் நூற்று வயிறு வளர்ப்பதற்கு இது காலமல்ல. இதனால் கத்தர் வளர்ச்சியடைவதற்கு மாறாகக் கூறுவதாக எவரும் கருதலாகாது. ஆகவே கத்தர் வளர்ச்சிக்குச் சர்க்காரையாவது, ஏழைக் குடும்பங்களையாவது எதிர்பார்த்திருப்பது சரியான வழியென்று கூறுவதற்கில்லை. இவ் விஷயத்தில் மகாத்மா அவர்கள் சொல்லுவதைப்போல பணக்காரனாயினும், ஏழையாயினும், அதிகாரியாயினும், மற்று யாவராயினும் சரி நாளொன்றுக்கு ஒரு மணி நேரமாவது தேசத்திற்காகவோ, விளையாட்டிற்காகவோ அல்லது ஓய்வுகாலத் தொழிலுக்காகவோ, எத்தன்மையாகவோ நூற்றேயாகவேண்டும் என்னும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்பதை முற்றிலும் ஆதரிக்க வேண்டுமென்று தேச மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொரு வழியும் உண்டு. அதாவது, நம் தேசத்தில் பல்லாயிரம் பேர் யாதொரு வேலையும் செய்வதற்கின்றி யாசகத் தொழிலை மேற்கொண்டு ஊரூராய்ச் சுற்றித் திரிகின்றார்கள். இவர்களில் பலர் பல தொழில்களைக் கற்றவர்களுமுண்டு. வேலை செய்யச் சோம்பித் திரிபவர்களுமுண்டு. இவர்களுக்கெல்லாம் சில செல்வவந்தர்கள் முன்னின்று தொழிற்சாலைகளைக் கட்டிக்கொடுத்து, ராட்டினத்தையும், நெசவையும் ஆங்கமைத்து அவற்றில் வேலை செய்யும்படி தொழில் கற்பித்து, திருப்தியான கூலி கொடுத்துக் கத்தரை விருத்தி செய்யலாம். வட இந்தியாவில் இம்மாதிரி ஏழைகளை யாதரிக்கும்படியான அனாத சாலையங்கள் உண்டு. இத் தென்னாட்டிலும் அவ்வாறு செய்தால், குடும்பிகளாய் உணவுக்குக் கஷ்டப்படுகிற ஏழைகளுங்கூட வயிற்றுக்குப் போதிய கூலி கிடைக்குமென்றெண்ணி, அச் சாலையங்களிற் சேர்ந்து, கத்தரை வளர்ச்சி செய்வார்கள். இத் தொழிலுக்கு நம்

பண்டைப் பெரிய நம் நாகரீகத்தைப் போற்று.

தேசத்துப் பணக்காரர்கள் முன்னின்று தனிமையாகவோ, கூட்டுறவு முறையாகவோ பாடுபடுவார்களானால் நல்ல பலனை யடையலாம்.

மற்றும் பணக்காரர் வீடுகளிலும், பிராமணர், வைசியர் முதலிய சில வகுப்பினரின் பெண்பாலார்கள் யாதொரு தொழிலுமின்றி கணவன்மார் கையை யெதிர்பார்த்துக் காசுவாங்கிச் செலவழித்து, ஓய்வு காலங்களில் வீண் வார்த்தைகளிலும், சொக்கட்டானாடுவதிலும் காலத்தை வீணே கழிக்கிறார்கள். அப் பெண்மணிகளுக்கும் நூல் நூற்கும் தொழிலைக் கற்பித்துக் கத்தரை விருத்தி செய்யலாம். இப்படிச் செய்வதால், அப் பெண்பாலார்கள் சோம்பலையகற்றிச் சுறுசுறுப்பாக வேலை செய்து தேகாரோக்கியமாக இருப்பதற்கேதுவாயிருப்பதனறித் தம் தம் மக்களையும் சுற்றத்தாரையும் உற்சாகப்படுத்துவதற்குரிய பணத்தையும் தேடிக்கொள்ளுகிறவர்களாவார்கள். இம் மூன்று வழிகளிலும் கத்தரை வளர்ச்சி செய்வித்தலுக்கு வேண்டிய நல்ல முறைகளைக் கையாள்வதனால் கத்தர் விரைவில் பெருகிவிடுமென்பதில் ஐயமில்லை.

மேலும் தற்போது ஏழைகளாயுள்ளோர்க்குக் கத்தர்த் துணிகளையே அணியவேண்டுமென்று பெரிதும் விருப்பமிருப்பினும், விலை மிகுதியை யுன்னுமிடத்து அவர்கள் தமக்கு வெறுப்பான அயல் நாட்டுத் துணிகளிலேயே தம் பணத்தைப் போட்டுவிடுகிறார்கள். கத்தர் சரசமான விலைக்குக் கிடைக்காததே இதற்குக் காரணம். அப்படிக் கிடைக்காததும் அது வளர்ச்சியடையாதிருப்பதே காரணம். ஆதலால், மேற்கூறிய மூன்று வழிகளில் கத்தரை வளர்ச்சி செய்தால், ஏழைகளுக்கும் ஏற்ற விலைக்குக் கத்தர் கிடைக்கும். நாட்டில் பெரும்பகுதியினர் ஏழைகளாகவே யிருப்பதனால் அவ்வேழை மக்களனைவரும் கத்தரை வாங்கி யுடுத்தத் தொடங்குங்கால், அயல் நாட்டுத் துணிகளின் வரவு அடைபட்டுப்போகும். நம் நாட்டினருக்கு நல்ல இலாபமுண்டாகும். நமது லக்ஷ்மீ நம் தேசத்திலேயே தாண்டவமாடுவாள். அவ்வாறு கத்தரை வளர்க்கவேண்டுமானால் கூட்டுறவு முறையில் பாடுபடுவதே சுலப சாத்தியமும், விரைவில் பயன்படக் கூடியதாயிருக்குமென்றும் கருதுகிறேன். ஆகவே கத்தர் வளர்ச்சியை ஏழை மக்களின் தலையில் மட்டிலும் போட்டுவிடாமல், பணக்காரர்களும் முன்னின்று மிக்க கவனத்துடனும், போபிமானத்துடனும் தமது பெயர் நிலைத்திருக்கவும், நாட்டிலுள்ள வறுமையாளர் வயிறு வளர்ப்பதற்காகவும், நாட்டின் நலத்திற்காகவும் மும்முரமாக உழைக்கவேண்டும்.

இந்தியராகிய நாம் எங்கு போனாலும், நம்மைத் தூற்றுகின்றனர்; விரட்டுகின்றனர். கூலி வேலை செய்யும் "கருப்பன்" என்று ஏளனம் செய்கின்றனர்.

வாழ்க்கையின் மாயம்.

"ஞான வினோதன்"

ஓர் வீடு. இதுகாறும் மூடி ஒருவருமில்லாத இவ் வீட்டில் இன்று ஏதோ ஓர் நவமான காட்சி! என்ன? ஓர் விதவை, தன் கண்ணாலமாகாதப் பெண்ணோடும், தன் பெருத்த சாமான் மூட்டையோடும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன் இவ் வீட்டில் குடிபுகுந்துள்ளாள். ஆத்திர மிகுதியால் இதை கவனிக்க நம் பரணச் சிறுவன்—அவன் பெயர் பரணன்—இவ் வீட்டுத் தோட்டச் சுவர் மீது ஏறி உற்று நோக்கிக்கொண் டிருந்தான். ஏதோ மந்திர வலிமையால் கட்டுண்டவன் போல் தன் முதல் நிலையை

பண்டைக் காலத்தில் யந்திரங்களேதுமில்லா அன்றே நம் முதியோர் கையால் நூற்று நெய்த ஆடைகள் மிக மெல்லியனவா யிருந்தன என்பதைச் சரித்திர ஆராய்ச்சியால் அறியலாகும். உலகப் பிரசித்தி பெற்ற டக்கா மஸ்லின்களை யறியாதார் எவர்? மொகலாய அரசாட்சி இந் நாட்டில் நிலைத்திருந்த காலத்திலுங்கூட இந் நாட்டு மெல்லிய ஆடைகள் வியக்கத்தக்கனவா யிருந்தன. தன் மகள் நேத்திரானந்தமா யிருக்கிறாளென் றெண்ணி, அணிந்திருந்த 20 முழ நீளமுடைய ஒரு ஆடையைப் பார்த்த மொகலாய அரசன் ஒருவன் அவ்வாடையின் மெல்லிய தன்மையைக் கண்டு, மகளை மறைவிடத்திற்குச் செல்லும்படி எச்சரித்தும், பெண்கள் இத்தகைய மெல்லிய ஆடைகளை யணியலாகாதென்று சட்டமும் ஏற்படுத்தினானென்றால், அக்காலத்தே நம்மவர்கள் நெசவுத் தொழிலிலும், நூல் நூற்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்த பெருமையை என்னவென் றியம்புவது? அவ்விதப் பண்டைப் பெருமை இன்றே பொலியப் பணக்காரர் முன்னின்று பாடுபடவேண்டும். கத்தர் நாட்டின் பெருமையையும், வைதீகத் தன்மையையும், தூய்மையையும் உண்டாக்குகின்றதென்றும், ஆதலால் அதை விருத்தி செய்தல் முக்கிய கடமையென்றும் கூறி, இதை இம்மட்டுடன் நிறுத்துகின்றேன்.

வந்தே மாதரம்.

விட்டுக் கடுகளவேனும் பெயரளவில்லை. நம் பரணன் திடீரென வீட்டுக்குள் தன் கூறிய கருவிழிகளின் பார்வையை செலுத்துகின்றான்; வருத்தகரமான காட்சி, உள்ளே ஓர் விதவையையும்—சீதாதேவி அவள் பேர்—ஓர் பெண்ணையும்—மோஹினி அவள் நாமம், கண்டான் பரணன். இது ஓர் அழகு தெய்வமோ? மின்னற் கொடியோ? மதி போன்ற முகம்; வண்டுகள் விருப்பொடு மொய்க்கும் நறையாடு வார்குழல்; கண்டோர் தன்னிடை ஆசையால் வீழ்ந்து கரையேற முடியாது. தத்தளிக்கச் செய்யு மிரு கரிய விழிகள்; பொன்புறை மேனி. இவள் கனிந்த கன்னங்கள் வழி விழிநீர் ஆறாக ஓடிக்கொண்டிருக்கின்றது. பெண் பித்து பெரிய பித்து. பரணன் லயித்துவிட்டா னவ ளழகில். சிறுவனைக் கண்டு சீதாதேவி அவனை நோக்கி அடி எடுத்து வைத்து வந்துகொண்டிருக்கிறாள். எங்கு தன்னை அடிக்கத்தான் வருகிறாளென்று சிறுவன் நினைத்து தன் முஷ்டியைக் காண்பித்தான். இவ் வீரா வேசத்தில் மெய்மறந்து விட்டான். அடடா! வீட்டுத் தோப்பில் 'தொப்' பென்று தலை கீழ் கால் மேலாக குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு விழுந்தான். இதனைக் கண்ட விதவை 'ஐயோ பையா' என்று கூவினாள். பையனுக்கு மனது படபட வென்று அதி வேகமாயடித்துக்கொண்டிருக்கிறது. பீதி மேலிட்டது; தன்னை எங்கே அந்த கைம்பெண் பிடித்து அடித்துப் போடுகிறாளோ? என்ற அச்சம்; பின்னங் கால்கள் தன் புடதியில் பட பையன் எடுத்தான் ஓட்டம். அன்று முதல் பையனுக்கு அந்த குடும்பத்தைக் கண்டு விட்டால் குடல் நடுக்கம்; அந்த வீட்டை எட்டிப் பார்ப்பதே கிடையாது.

ஒரு நாள் பரணன் ஓர் கச்சேரியில் தானிசைத்து வைத்திருந்த பாட்டொன்றை யாழை வைத்துப் பாடிக்கொண்டிருந்தான். சீதாதேவியும், மோஹினியும் வந்திருப்பதைக் கண்டுவிட்டான்; வந்துவிட்டது வெட்கம். இது மட்டுமா! அவர்கள் தன் பாட்டை மெச்சுவதையும் அறிந்துகொண்டு விட்டான். இதைப் பரணனால் பொறுக்க முடியவில்லை. என்செய்வான் பாவம்! இரு தலைக் கொள்ளி எறும்பு. சீதாதேவியைக் கண்டால் வெட்கம்; எழுந்து போய்விடுமோமென்றால் தன் முன் ஓர் பெரிய சபை. ஓர் யுக்தி. ஆ பலே! என்ன யுக்திடா! சபாஷ். என்ன செய்தான்? கச்சேரி கலையுமட்டும் குனிந்த தலை நிமிரவில்லை பரணன். எங்காவது தன்னெதிரே சீதாதேவியாவது, மோஹினியாவது வருவதை பரணன் கண்டுவிட்டால் போதும், வேறு ஒரு பாதை வழியாக தன் வீட்டிற்கு ஏகிடுவான். என்ன வெட்கம், வெட்கம்!

பாணன் தான் சீதாதேவியை அடி வயிற்றிலிருந்து வெறுத்து விட்டான். விதவை பாணனை வெறுத்தனளா? கச்சேரியில் பாணன் பாட்டை கேட்ட க்ஷணமுதல் அவளுக்கவன் மீது அளவு கடந்த ஆர்வம்; அன்பு, தயை. சிறுவனைத் தேடி அவள் எத்தனை நாள் அவன் வீட்டிற்குச் செல்வாள்! ஒரு நாள் சீதாதேவி வீட்டில் சிறுவனைக் காணாததால் தான் செல்லும் பொழுது சிறுவனுக்கு ஓர் லிகிதம் அவன் தாயிடம் கொடுத்து விட்டுச் சென்றாள். இரவு எட்டு மணி இருக்கும். வெளியில் போன சிறுவன் மீண்டும் வீடு வந்து சேர்ந்தான். வந்ததும் தன் தாய் கடிதம் கொடுக்கப் பெற்றான்; உடைத்தான்; படித்தான். வெட்கம்; வெட்கம்; என்னடா வெட்கம்! இந்தக் கடிதத்தை வாங்கியதற்கு தாயிற்கு ஒரு 'டோஸ்' கொடுத்தான். காகிதத்தின் சாராம்ஸம் மேல் வருமாறு.

"உன் பாட்டை நான் அன்று கச்சேரியில் கேட்டது முதல் உன்னைப் பார்க்க வேணுமென்ற பிரீதி மேலிட்டால், உன் வீட்டிற்கு மாசாந்தங்கள் பல நடந்தேன். நான் வரும்பொழுது வீட்டிலுன்னைக் கண்டு பிடிக்க முடியாமற் போகிறது. இதைக் கண்டதும் தயவு செய்து நாளை நீ என் வீட்டிற்குக் கட்டாயம் வரவேண்டும். மறுத்தல் கூடாது. மறவாதே!

இப்படிக்கு
சீதா தேவி.

2

பொழுது புலர்ந்தது. கீழ் வானத்திலோர் வெள்ளைக் கீற்று. கோழிகள் தம் சிறகுகளை இருபுடையும் அடித்துக்கொண்டு "கொ கொ, கோ" வென்று ஆர்ப்பரித்தன. காகங்கள் கூட்டங் கூட்டமாய் "கா கா" என்று கத்திய வண்ணமாய் மரக் கிளைகளி லமர்ந்தன. மற்ற பறவைகளும் காலைத் துயிலெழுந்து, அன்பினிசை கூட்டி, சிறகுகளால் தாளமிட்டுக்கொண்டு கதிரவன் வரல் கண்டு பூரித்து புளகாங்கித மெய்தின.

விடியுமுன் னெழுந்து விட்டான் பாணன்; நித்திய கர்மானுஷ்டானங்களை வழுவாது செய்து முடித்தான். இதற்குள் கதிரவனும் காயும் கதிர்களை எங்கணும் பரப்பிக்கொண்டு கீழ் வானத்தில் சிறிது தூரம் மேல் ஊர்ந்துவிட்டான். காலை சுமார் மணி எட்டு. காலையுண்டி அருந்தினான். சீதாதேவி அகத்திற்குச் செல்ல வேண்டிய நினைவு அவன் மனதிலூசலாடிய வண்ணமா யிருந்தது. எப்படியும் போய் தீருவதென்று தீர்மானித்துக் கொண்டுவிட்டான்.

தமிழரென்ற ஒரே மக்களாய் நாம் வாழ்வோம்.

சிறுவன் சட்டையை மாட்டிக்கொண்டான். சட்டையில் சுருக்கமாகப் பதினைந்து ஓட்டைகளுக்கு மேலிராது. ஓர் நல்ல வேஷ்டியைப் பார்த்தெடுத்து உடுத்திக்கொண்டான். வேஷ்டியில் கரை கிடையாது. கிழிந்து போயிற்று. அதைப் பார்த்தவர்கள் எவரு மதை கைத் தையல் வேஷ்டியா அல்லது தறியில் நெய்த வேஷ்டியா? என்று சந்தேகப்படாம லிருப்பது வெகு அருமை; சர்வம் தையல் மயம். வறுமைத் தாயின் தவப் புதல்வன் நம் பாணன்.

இவ்வளவு ஜோருடன் பாணன் புறப்பட்டு விட்டான் சீதாதேவி அகத்திற்கு; அடைந்தும் விட்டான். சிறுவனைக் கண்டார்கள் சீதாதேவியும், மோஹினியும். ஓர் துப்பாக்கிச் சிரிப்பு. கட்டாயம் வயிறு புண்ணா யிருக்குமென்றே நினைக்கிறேன். சிரிப்பு ஓய்ந்தபாடில்லை. "பக் பக்"கென்று வெளிக் கிளம்பிக்கொண்டே இருந்தது.

எப்படி யிருந்தாலும் பாணனை நன்கு உபசரித்தனள் சீதாதேவி. எல்லோரு மோர் சிற்றுண்டி அருந்தினர். சாப்பிட்ட பின்னர் எல்லோரும் கூடி வம்பு அளக்க ஆரம்பித்தார்கள். கொஞ்ச நேரமானதும் சிறுவன் விடை பெற்றுக்கொண்டு வந்தனம் செலுத்தி விட்டுப் போய்விட்டான்.

இந்தப் போக்குவரத்து மறு நாளும் தொடர்ந்தது. மறு நாளைக்கு மறு நாளும். அதற்கடுத்த நாள். இப்படியாக இது காயமாய்விட்டது. பாணன் வரும்பொழுதெல்லாம் மோஹினி அவனைப் படாத பாடுகள் படுத்திவிடுவாள்; சொல்லாத சொற்களெல்லா மளந்து விடுவாள். இந்த மாதிரிப் பாணனை குறை கூறி அவன் கோபத்தை கிளப்புவதே மோஹினியின் தொழிலாய்விட்டது. மோஹினிக்குச் சங்கீதம் சொல்லி வைத்துவிட வேண்டுமென்பது சீதாதேவியின் மனதில் நெடு நாட்களாக வளர்ந்து வந்த பேரவா. மோஹினிக்குச் சங்கீதம் சொல்லி வைக்கும் கடமை பாணன் தலையில் விழுந்தது. உண்மையில் மோஹினிக்கு இருந்த இடும்பு கொஞ்சநஞ்சமல்ல. சரியாய் படிப்பதே இல்லை. பாணனைத் தனக்கு பல இழி தொழில்கள் புரியும்படி செய்வாள். அதற்கு பாணன் முடியாது என்று கடுமையாகக் கூறிவிடுவான். அதற்கவனைப் படுத்தும் பாடுகள்....................அப்பா சொல்லி முடியாது. இதிலெல்லாம் மகா கெட்டிக்காரி மோஹினி.

நமக்குக் குடிக்கக் கஞ்சி யில்லை; உடுக்கத் துணி யில்லை. நம் நாட்டு வாணிபம் போய், சுயமாக நூற்று நெய்த துணிகள் போய், அன்னி நாட்டுத் துணிகள் இங்கு புகுந்து, நமது செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போய் விடுகின்றன. நாம் பணம் சொறியும் கருவிகளாக இருக்கிறோம்.

3

அந்திப் பொழுது. சூரியன் மலைவாயில் விழப் போகும் சமயம். 'தங்கமுருக்கி தழல் குறைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ' என்று வியப்புறும் வண்ணம் உலகிலுள்ள சகல பொருள்களும் பொன் மயமாக மிளிர்கின்றன. அருணனும் கீழ் சென்றான். இருள் மெல்ல படர ஆரம்பிக்கின்றது. சுழல் காற்று 'விர் விர்' என்றடிக்கின்றது. காள மேகங்கள் கூட்டங் கூட்டமாய் விண்ணை மூடிக்கொண்டு வருகின்றன; மூடியும்விட்டன. இருட்பிழம்பு; எங்கும் அந்தகாரம். இருளின் வயிற்றைப் பிளந்துகொண்டு மின்னல் கண்ணைப் பறிக்கின்றது; உலகத்தாரைப் பார்த்துப் பல்லைக் காட்டி நகைக்கின்றது. சிறிது நேரத்தில் 'சல்'லென்று தூற்றல் நிலத்தில் விழுந்தது. இடி 'டம டம' என்று அடிக்கிறது. இதனால் உலக மண்டபாதாள முதல் அதிர்ச்சியுறுகின்றது. மழையும் 'சோ'வென்று கதவு, சாளரமெல்லாம் துழைத்துக்கொண்டடிக்கின்றது; காற்று ஆய்ந்தோய்ந்து விட்டது. சற்று கீழ் வானம் வெளுத்தது; சிறிது பொழுதில் மழையும் நின்றுவிட்டது; பிரகிருதி தேவி முன்போலவே ரமணீயமாக காட்சி அளிக்கின்றாள்.

சீதாதேவி வீட்டிலொரு அறை. மோஹினியும் பரணனும் தவிர வேறொருவரும் கிடையாது. மோஹினி யாழ் வாசித்துக் கொண்டிருக்கிறாள். பக்கத்தில் பரணன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். மோஹினி ஓர் பாட்டில் சுரம் தப்பிதமாக வாசித்துவிட்டாள். கேட்டதற்கு புத்தகத்தி லப்படித்தா னிருக்கிறது என்று வாய் கூசாமல் சொன்னாள். இவள் சொல்லும் கூற்றின் உண்மையைப் பரிசோதிக்க வளைந்து புத்தகத்தைப் பார்த்தான் பரணன். மோஹினி தன் கையை வீணையில் வைத்துக்கொண்டிருந்தாள். கையை எடுக்கவில்லை. என்ன துணிவு! புஸ்தகத்தை நோக்கச் சென்ற கண் பார்வை வேறெதையோ நோக்கிச் செல்கின்றது. அவனிதழ்கள் அவள் கைவிரல்கள் சமீபத்திலிருந்தன. எதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்; புத்தகத்தையா? இல்லை. மற்றொன்றை—புஷ்ப இதழ்களிலும் மென்மையுடையது; பிரகாசம் பொருந்தியது. திடீரென்று—தன்னையே முற்றிலு மறந்து—தன்னிதழ்களை மோஹினியின் கோவைக் கனி போன்ற செவ்வை கரத்தோடு இறுகச் சேர்த்தான். முத்தமிட்ட இடம் கனிந்து செக்கச் செவேலென்றிருந்தது.

> பணத்தை விரயம் செய்து, ஆரோக்கியம் ஒழுக்கம் தன்னம்பிக்கை, தன் முயற்சி கெட்டு ஆங்கிலம் படித்த மாணவர்களின் வேலையில்லா பரிதாபகரமான திண்டாட்டத்தைக் கவனியுங்கள்! தற்காலக் கல்வியின் யோக்கியதையை ஆராய்ந்தறியுங்கள்.

இருவரும் பேச்சிறந்து திகைத்தனர். பரணன் பின் நகர்ந்தான். மோஹினி தன் கரத்தைப் பளிச்சென்று எடுத்துக் கொண்டாள். இருவரும் தலை கவிழ்ந்தனர். சில நிமிஷங்கள் நிசப்தம். நிசப்த மறையில் நிலவியது. இதற்குள் காதலரிருவர் மனத்திலும் தோன்றி மறைந்த எண்ணங்கள் எத்தனை? என்னென்ன? காற்றடிக்கிறது; கடல் குமுறுகிறது. அலைகள் எழும்பி வானத்தை தொட்டுக்கொண்டு சீற்றம் கொண்ட நாகம் படத்தால் அடிப்பது போல் கரையில் அதி வேகமாய் மோதுகின்றன. நடுக் கடல் உயரும் அலைகளுக்கிடையே ஓர் கட்டு மரம். அலை எழும்போது மரம் மேலெழும்; பின் தணியும்; இக் கட்டு மரத்தினை நிகர்த்தது மோஹினியின் மனோ நிலை. மோஹினி பின்னும் யாழை மீட்ட ஆரம்பித்தாள். அகமும் புறமும் ஒன்றுபட்டிருந்தாலல்லவோ செய்கை சரியாயிருக்கும்? எனவே, மோஹினி பாடும் பாட்டெல்லாம் முற்றும் அபத்தமாயிருந்தது.

பரணன் நிலையை சிறிது ஆராய்வோம். வெட்கம் தலைக்கேறிவிட்டது; பின் மோஹினியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை; மோஹினி மீட்டும் யாழோசை 'அசுணமாச் செவிக்கு பரையறை' போன்றிருந்தது. மோஹினிக்கு மேலிவன் மனோ நிலை. கடனைக் கழிக்க கொஞ்சநேரமங்கு உட்கார்ந்துவிட்டு, பின் ஒரு வார்த்தையும் சொல்லாது வெளிக் கிளம்பிவிட்டான். மோஹினி தன் கடைக் கண் பார்வையை பரணன் மீது செலுத்துகிறாள்; என்னே அவளுக்கு உண்டான மட்டற்ற மகிழ்ச்சி!

மோஹினி அறையில் தன்னந்தனியே இருக்கிறாள். தன்னறைக் கதவுகளை நன்கு தாளிட்டுக் கொண்டு, ஓர் நிலைக் கண்ணாடியின் முன் நின்றுகொண்டாள். அவள் கண்களினின்று புதியதோர் ஒளி வீசின போல் காணப்பட்டன. அன்று நடந்தவற்றைப் பற்றி சிந்தனையிலாழ்ந்து விடுகின்றாள். உடனே வெட்கத்தால் தலை கவிழ்கின்றாள். அன்று முழுதும் சந்தோஷ சாகரத்திலாழ்ந்து விட்டிருந்தாள். அன்று முழுதும் தன்னறையை விட்டு வெளிக் கிளம்ப மறுத்தனள். ஏன்? அவளுக்குத் தன் கையோடு ஏதேனும் சமாசாரம் பேச வேண்டியிருந்ததோ, என்னவோ! அன்றவள் தொட்ட காரியமெல்லாம் வழவழா, குழகுழா. இதினாலென்ன! தாயோடிருக்கும் பொழுது தன் தாயின் பின் சென்று நிற்கின்றாள்; தாயை இறுகக்

> செல்வமாய், சீராய், சுதந்திரமாய், சமத்துவமாய், பாரோர் புகழக் கண்ணியமாய் வாழ்ந்த நமது பாரதத் தாய், இப்பொழுது அந்தோ! செல்வம் குன்றி, சக்தி குறைந்து ஸ்வாதந்திரியம் இழந்து தன் புத்திரர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டுத் தவிக்கின்ற நிலையை நினைக்க உங்கள் உள்ளம் பற்றி எரியவில்லையா?

கட்டிக்கொண்டு முத்தமிடுகின்றாள் அவள் மனம் காதலின் வாசனையை நுகர்ந்தவண்ணமா யிருக்கின்றது.

இரவில் மோஹினி படுத்துக்கொள்ளும் பொழுது வெகு நேரமாய்விட்டது. கண்ணாடியைப் பார்த்த வண்ணமே இருக்கின்றாள். பெண் பரணனிதழ்களுக்கு விருந்தூட்டிய கரத்தை முத்தங்களால் மாலையிடுகின்றாள். அறையிலுள்ள விளக்கை அணைத்தாள். படுக்கையில் படுத்துக்கொண்டாள். காதலால் படுக்கையி லங்கு மிங்கும் புரள்கின்றாள். திடீரென அன்றையச் சம்பவம் மனதில் சாடி ஆனந்த நடனம் புரிகின்றது; புஜங்கதசை புரிகின்றது; வாய் விட்டும் சிரித்துவிட்டாள்; காதலின் மகிமையை உன்னி மகிழ்கின்றாள்; தன் தலை அணையை முத்தமிட்டு விட்டு நித்திரையிலாழ்ந்து விட்டாள்.

மறுநா ளென்றும் போலவே பரணன் மோஹினிக்குப் பாடம் கற்பிக்க வந்தான். என்றும் போலவே நாள் சென்றது. இருப்பினும் இருவர் உளத்திலும் இரகஸ்யமாய் காதல் மரம் வளர்ந்து கொண்டேதான் வந்தது.

ஒரு நாள் அறையில் பரணனும் மோஹினியும் தவிர வேறொருவரும் கிடையாது. சாயங்கால நேரம் இருள் அறையையும் கைப்பற்ற படை எடுத்துக்கொண்டு வருகிறது. இருவரும் நெருங்கிக் கொண்டே வந்தனர். இறுதியில் மோஹினி ஆற்றாளாகி பரணனின் கமலக் கையைப் பிடித்து தன் அதரத்தின் பக்கம் கொண்டு போகிறாள். ஓர் ஓசை கதவு திறந்தது பட்டென கையை விட்டு விட்டு நல்லவள் போல் தன் கருமமே கண்ணா யமர்ந்து விட்டாள். கதவு திறந்தவள் சீதாதேவி. அவளிதை கவனித்தாலும் கவனியாது போல் போய்விட்டாள். அன்று முதல் அவ் வீட்டின் பக்கத்திலுள்ள பூங்காவில் 'பரண—மோஹினி' சல்லாபங்கள் நடக்கும்.

4

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 15 நாட்களே இருக்கின்றன. மோஹினி தாயாருடன் வேற்றூரொன்றில் தன் சுற்றத்தார் ஒருவரோடு 'பொங்கலை'க் கொண்டாட உத்பவித்தது. பாவிப் பொங்கல் பண்டிகை! மோஹினி ஊருக்குப் புறப்படுவதற்கு முதல்

எழுங்கள்; வீர வாலிபர்களே! எக் காலம் வரையில் இப்படி மயங்கிக் கிடப்பீர்கள். அடிமை யென்ற மாயையில் விழுந்து மோசம், வஞ்சகம், மிருக வாழ்வு, கொடிய செயல்கள் என்ற கீழான குணங்களில் அமிழ்ந்து, கனவுகள் கண்டு களிப்படைகிறீர்கள். உடனே எழுங்கள்! உங்கள் தளைகளை உதறித் தள்ளுங்கள்.

நாள் பரணனை கண்டு பேசி, முத்தமிட்டு ஊருக்குப் புறப்பட விடை பெற்றுக்கொண்டு போய்விட்டாள். தன் காதலி யில்லாத நாட்களெல்லாம் இம் முத்தமே பரணனுக்கு இதமளித்த சஞ்சீவி! மோஹினி போய்விட்டாள். மோஹினி மட்டுமா சென்றாள்? பரணனின் உயிரையுங் கொள்ளை கொண்டு செல்கின்றாள். மோஹினியின் நினைவே பரணன் மனதில் குடிகொண்டிருந்தது. பரணனுக்கு மோஹினியைக் கண்டு பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே. காதலின் பிரிவாற்றாது துன்பப்படுகின்றான்; காதலி இல்லாது போனதால் அவன் கண்களுக்கு உலகமே அஸ்தமித்துப் போய்விட்டதாகத் தோற்றுகின்றது; உடல் உயிரற்று வெறுங் குழலாக இருக்கின்றது; யாவும் வெளுத்து செத்த பிணங்களாகக் காணப்படுகின்றன. ஏதோ மனதை அடைக்கின்றது; மூச்சுவிட முடியவில்லை; நரக வேதனை; தன்னைச் சுற்றிக் காதலின் பிரிவை உணர்த்தும் சின்னங்களையும், சூழ்ந்துள்ள வெல்லாம் காதலி மோஹினியின் உருவமாகவே தோன்றும் பொழுதும், காதலரிருவர் கூடி ஒருமித்து தம் வாழ்வை இன்பமயமாகக் கழித்த இடங்களைக் காணும் பொழுதும், காதலி பிரிந்த துக்கத்தால் அவ்விடத்தில் தனியே வாழச் சகியாமல் துன்பப்படும் பொழுதும் உயிரை வைத்துக் கொண்டிருப்பதே கஷ்டம்—முடியாது. அந்தோ! திடீரென அவன் கால்களுக்கு நேராக ஓரிருள் சூழ்ந்த கெடு பள்ளம்; பயம், ஆத்திரத்தால் அவனதைக் குனிந்து பார்க்கின்றான். தலை 'கிரு கிரு' என்று சுழல்கின்றது. அந்தோ! தொப்பென்று அதில் விழுகின்றான். அநேகமாய் இயமன் முன்னிலையிலிருப்பதாகவே எண்ணுகின்றான் பரணன். காதலின் பிரிவு எமதர்மனின் முகம் போன்றது. மனதிற்கினியவள் போவதைப் பார்க்கின்றான். உயிர் வாங்கப்பட்டு விடுகின்றது; எல்லாம் குழப்பம்; எங்கு பார்த்தாலும் இருள்; இருள்.

"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்.

என்ற பாரதியார் காதல் பல்லவியும் வெறும் வார்த்தையோ?

மாணவர்களே! சுதந்திரமும், சகோதரத்துவமும், கல்விப் பெருக்கும், கலைஞானப் பெருக்கும், இயற்கை வாழ்வும், பிரமச்சர்யமும் பொருந்த நம் பழைய குருகுலக் கல்வி போய், காசுக்கும், கூழுக்கும், வரதட்சணைக்கும், மரப்பாவை மணத்திற்கும், உத்தியோக மோகத்திற்கும் ஆதாரமான இயற்கைக்கு மாறான சிறைக்கோடக் கல்வி யல்லவா உங்களை இவ்வாறு பாழ்படுத்தி விட்டது. ஐயோ! தற்காலப் பள்ளிப் படிப்புத் துள்ளிக் குதிக்கக் கூட உதவாதே.

இவ்வாறு சின்னாட்கள் சென்றன. பரணன் ஜீவனற்ற பிரேதமா யிருந்தான். என்றும் 'மோஹினி, மோஹினி' என்ற நாமமே அவனிதழ்களில் நடனமாடியது.

ஒரு நாள் பரணன் ஏதோ வீட்டுள் காரியமா யிருந்தான். வீட்டுக் கதவு தாளிட்டிருந்தது. மாலை சுமார் $3\frac{1}{2}$ மணி யிருக்கும். கதவு தட்டுமோசை. பரணன் கதவைத் திறந்தான். பரணன் கையில் ஓர் கடிதம் கொடுத்தான் தபால்காரன். அது என்ன தபால்? யாரெழுதியது? எங்கிருந்து? பரணனுக்கு கடிதத்தை உடைக்கு முன்பு அதிலடங்கிய விஷயம் தெரியும் போலும்! அவனுக்கெல்லையற்ற மகிழ்ச்சி. கடிதத்தைக் கையில் கொண்டவுடன் பரணன் மெய் 'ஜில்' என்று குளிர்ந்தது. காதலின் மகிமை இதுதானோ? மெய்க் காதலென்றுவிதுதானோ? கடிதத்தை உடைத்து முதல் வரியை வாசித்தான். ஆஹா! என்னென்று சொல்வது அவனுக்குண்டான ஆனந்தக் களிப்பை! காதல் கடலில் மிதந்துகொண் டிருக்கிறான் பரணன். காதலலையால் தூக்கிச் செல்லப்பட்டு ஏதோ அதி ரமணீயமான தீவுக்குக் கொண்டு போகப்பட்டான். அத் தீவின் மகிமை சொல்லிலடங்கும் தகைமைத்தோ! இருள் படர்ந்த பரணன் வாழ்வில் இன்று ஓர் புதிய ஒளி! ஒளி யென்றால் சாதாரணமான மங்கலான ஒழியா? இல்லை. மின்னலைப் பழித்த ஜெகத்ஜோதி! காகிதத்தில் ஓர் வாக்கியம்! அதென்ன?

அருமைக் காதலா!

.........உன் பொன்னே போன்ற காலத்தை வீணாக்காது
பாட்டுக்கள் இசைத்துக் கொண்டிருக்கவும்..............

இப்படிக்கு
உன்னை என்றும் மறவாத
மோஹினி.

இதை சாதாரண மனித வாக்காகக் கருதவில்லை பரணன். அருள் வாக்கு தெய்வ வாக்காகக் கொண்டான். அன்று முதல் பாட்டுக்களிசைத்தான். அப் பாக்களை எல்லாம்—என்னே அவற்றின் இன்பமும், இனிமையும்—திரட்டி, அவற்றை மோஹினியின் நினைவிற்கே சமர்ப்பித்து விட்டான்.

அன்னியர் ஆட்சி உங்கள் வீரத்தை எழுப்பவில்லையா? நமது பாரத தர்மம் அழிவதை நீங்கள் நோக்கவில்லையா? ஏழை ஜனங்களின் கூக்குரலும் தன் நாட்டிற்காகச் சிறையில் அவஸ்தைப் பட்டுக்கொண்டு சுதந்திரத் தவம் கிடக்கும் வீர வாலிபர்களின் தீரச் செய்கைகளும் உயரிய தலைவர்களின் சீரிய உபதேசங்களும் தீர யுவர்களாகிய உங்களைத் தேசியப் பணியாற்றத் தூண்டவில்லையா?

மறு நாளே மோஹினியின் கடிதத்திற்குப் பதிலெழுதி யனுப்பி விட்டான். 2 நாட்களாயின; 3 நாள்; 4 நாள்; 5 நாட்களுமாயின; பதிலைக் காணோம்; ஒரு வாரமு மாய்விட்டது; இன்னும் பதிலைக் காணோம். அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! உட்கார்ந்தான்; தன் எண்ணங்களை எல்லாம் ஒன்றுவிடாது வரைந்து அதை மோஹினிக்கு அனுப்பினான்; பதில் கிடைத்தது. பரணன் வானத்திற்கும் பூமிக்கும் எழுந்து நின்று குதித்துக் கூத்தாடினான். இக் கடிதத்தில் மோஹினி என்று வருவாளென்று குறிப்பிடப்படவில்லை.

5

திடீரென்று ஒரு நாள் மோஹினியும் சீதாதேவியும் வந்து விட்டனர். பரணன் இவற்றை அறியான். காலக்கிரமத்தில் மோஹினி வரவு பரணன் காதிற்கெட்டியது. சந்துஷ்டிதனாய் அவர்களைப் போய் பார்க்கச் சென்றான் பரணன். சீதாதேவி யகம் அடைந்தானோ இல்லையோ காதல் மணம் 'கம் கம்' என்று வீசுவதை நுகர்ந்தான். காதல் மணம் எப்படி வீசினும் என்ன பயன்? ஓர் காட்சி. மோஹினி முன்போலில்லை. அவள் மாறுபட்டிருந்தாள். இதைக் கண்டான் பரணன். தலையிலிடி விழுந்ததுபோலானான். வருந்தினான்; மெய்வியர்ந்தான்; வெய்துயிர்த்தான். என்செய்வான்; காதலின் ஏமாற்றமன்றோ இது.

என்றும் காமம் கண்ணற்றது. காமப் பேய் பிடரியைப் பிடித்து உலுப்பும் பொழுது என்செய்வான் பாவம் பரணன்! தான் ஏமாற ஏமாற அவனிடம் தைரிய லக்ஷ்மி குடிகொண்டு விடுவாள். இது காதலின் தனியான சக்தி. எதையும் கூசாது செய்வான். இது காமிய ரியல்பு.

பரணன் கண்டான்; இவற்றை உடனே சீதாதேவியிடம் சொன்னான். தான் மோஹினியைக் காதலிப்பதாகவும், அவளைத் தனக்கு மணம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கூசாது மொழிந்தான்.

சீதாதேவிக்கு வியப்பு ஒரு புறம்; நகைப்பு ஒரு புறம். என் செய்வாள்? வாய்விட்டு சிரித்தாள். "என்ன நுமைக் குழந்தாய்! அது முடியாத காரியம்; ஒரு பணக்கார வாலிபருக்குப் பேச்சு முடிந்துவிட்டது" என்றாள்.

இடியோசை கேட்ட சர்ப்பம்போ லொடுங்கி நடுங்கிக் கண்ணீர் காலவிட்டு வருந்துகிறான்; பலவாறு பகன்றான்; பிதற்றினான்.

வாலிபச் சிங்கங்களே, தன்னையும், தர்மத்தையும், ஏழை மக்களையும் காக்க அறைகூவி அழைக்கும் அன்னையின் ஹீனக் குரல் உங்கள் செவிக்கு எட்டவில்லையா? அவளது அபய த்வனி உங்கள் செவிகளில் விழவில்லையா? நமது கண்ணம்மாக தறுவது உங்கள் மனதைக் கரைக்கவில்லையா?

எல்லாவற்றிற்கும் சீதாதேவி 'முடியாது' என்று வன்மையாகக் கூறிவிட்டாள். அப்படியே வீட்டிற்குச் சென்றான்; படுக்கையில் படுத்துக்கொண்டான்; வாய்விட்டழுதான். கோபமெழுந்து கொண்டே வந்தது. தலையணையைக் கடித்தான்; சீதாதேவியை வெறுத்தான்; மோஹினியை நிந்தித்தான்; படுக்கையைவிட்டெழுந்தான்; கடுமையாக சீதாதேவிக் கோர் கடிதம் வரைந்தான்:

அம்மணீ,

நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள்; அதற்கு நான் பெரிதும் வருந்துகிறேன். நானுங்களிரு........வரையும் என் உயிருக் குயிராய், கண்ணுக்குக் கண்ணாய் வைத்துக்கொண்டிருந்தேன். உங்களை கோதாட்டினேன்; உங்களுக்குச் சங்கீதமும் சொல்லி வைத்தேன். உங்களடிமையா யிருந்...........இல்லை நான் யாருக்கு மடிமையல்லேன்.

நீங்கள் தங்கள் மோஹினியை நான் காதலிக்கக் கூடாதென்றீர்கள். என் மனது யாரைக் காதலிக்கின்றதோ அவரிடத்தில்தான் லயித்திருக்கும். இதைத் தடுக்க எவராலு முடியாது. உங்களைப்போலெனக்குப் பணமில்லாது போனாலும் நானுங்களைப் போல் சம அந்தஸ்து பெறத் தக்கவனென்பதை உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். மனதுதான் ஒருவனை மேன்மைப் படுத்துகின்றதே யொழிய வேறில்லை. நானுங்களைப்போலொரு பண்ணையாரா யில்லாது போனாலும் பண்ணையாருக் கெவ்வளவு கண்ணியமும், செல்வாக்கு முண்டோ அவ்வளவு எனக்குமுண்டு. வீண் வார்த்தை; வெட்டிப் பேச்சு!

நீங்களென்னை தப்பபிப்பிராயம் பண்ணிக் கொண்டு விட்டீர்கள்; என்னை ஏமாற்றினீர்கள். உங்களை நான் முற்றிலும் வெறுக்கின்றேன்.

நான் சாகும்வரை என்ன இடையூறுகள் ஏற்படினும் பின்னடையாது மோஹினியைத்தான் காதலிப்பேன்—காதலிக்கின்றேன். இதிலென்னை எவரும் தடைப்படுத்த முடியாது. உங்கள் நன்றிக்கோர் பெரிய வந்தனம்!

இப்படிக்கு
உங்களை முற்றும் வெறுக்கும்
பரணன்.

உடனே இதைத் தபாலாபீஸில் போட்டுவிட்டான். போட்டபின் சிறிது நேரம் கழித்து தன் முட்டாள்தனத்தை உன்னி வருந்தி

னான். இதன் முடிவு எனக்கும் மோஹினிக்கும் சாஸ்வதமான பிரிவினை என்பதை நன்குணர்ந்திருந்தான் பரணன். பின்னும் தன்னதிர்ஷ்டம் 'குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்துவிடாதா' என்ற எண்ணமொன்று! ஐந்து நாட்கள் காத்திருந்தான். சீதாதேவி எழுதிய பதிலொன்று கிடைக்கப்பெற்றான் பரணன். என்ன? முன் பரணன் நினைத்தபடி பிரிவினை ஊர்ஜிதப்பட்டுவிட்டது. என்ன செய்வான் பாவம்! மன்னிப்புக் கேட்டுக்கொள்ளலா மென்றா லவன் சுயமரியாதைக்குக் குறைவு.

6

அநேகமாய் இந்த எண்ணங்கள் அவன் மனதை சிறிது சிறிதாக அறுத்துத் தின்றுகொண்டிருந்தன. வாழ்க்கையை வெறுத்தான். தற்கொலைகூட செய்யலாமென் றெண்ணினான். நல்ல வேளை! அதிலவன் நோட்டம் அதிகமாகச் செல்லவில்லை. என்னே காதலின் கொடுமை! புயல் நடுவே பட்டு சுழலும் வைக்கோல் துரும்பு போன்று காதலால் அலமறுகின்றான் பரணன்!

இந்தச் சமயத்தில் வேறொரு விஷயம். தன் வீட்டிற்கு வெளியே ஓர் பெரிய இரைச்சல்; கூப்பாடு. ஒரு பெரிய கூட்டம். தன் தந்தை தான் குடி வெறியில் உள்ளே தூக்கிக்கொண்டு வரப்பட்டிருக்கிறாரென் றெண்ணினான் பரணன். விஷயத்தை கவனிக்க தன்னறையை விட்டு வெளி வந்தானவன். என்ன விஷயம்? அழும் குரல்; தன் தாய் அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய் தரையில் நீட்டி நிமிர்ந்து கிடந்த பிணத்தின் சமீபத்திலிருந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டான் பரணன். பிணமா? யாரிறந்து போனார்? பரணனின் தந்தை. கண்களைப் பாருங்கள்! என்ன சோதி! ஒளி! பரணன் மனமுடைந்தான். வருத்தமெனும் கரும் திரை அவனுளத்தை மூடியது. கண்களில் கண்ணீர் 'மட மட' வென்று மடை திறந்த வெள்ளம் போல் வழிந்தோடுகின்றது. தந்தையின் மாசற்ற வாழ்க்கையையும், தயாள குணத்தையும் அவைகள் வெளியிடுகின்றன. எதை யோசித்துக் கொண்டிருக்கிறான் பரணன். என்ன? சாவின் மாண்பு; **வாழ்க்கையின் மாயம்.** அன்பும் அறமும் வாழ்க்கை வண்டியினிரு சக்கரங்களென்று கண்டுகொண்டான் பரணன். அன்பே சிவம்; சிவமே அன்பு என்பதை நன்கு உணர்ந்தான். இப்பொழுது பரணன் கடவுளின் கட்டளையைக் காதில் கேட்கின்றான். என்ன?

"போ, போ, சோம்பித் திரியேல், இளைப்பாறேல்"

பைந்தமிழ்ச் சோலை.

எங்கள் தந்தையர் நாடு.

திரு. ஸ்ரீவை. R. வெங்கடாசலம் அவர்கள்.

செந்தமிழ் நாடெனும் போதி னிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சி னிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. —பாரதி.

இக் கவிதை 20 வருஷங்களுக்கு முன்பு பாரதியாரது நெஞ்சில் புதையலைப் போன்று மறைந்து கிடந்தது. எது நிகழினும் ஒரு காரணம் இல்லாமலிராது. மேலே சொன்ன கவிதையும் அதைத் தொடர்ந்த பல பாடல்களும் தோன்றியதற்கு ஒரு கதை யுண்டு. அக் கதையைப் படிப்பதற்கு உற்சாகம் கொடுக்குமானாலும், அதன் முடிவை நோக்கும் பொழுது கண்களில் நீர் ததும்புகின்றது.

தமிழ் காதல் கொண்டவர்களுக்கும், தமிழ் நாட்டின் மீது பக்தி கொண்டவர்களுக்கும், முதலிரண்டடிகள் வெறும் புகழ்ச்சியாகத் தோன்றாது. இனிமைக்கு ஓர் வரம்பாகக் கருதப்படும். தேன் சுவையை, செந்தமிழ் நாடு என்று பிறர் சொல்லக் கேட்குமளவில்

"நானெங்கு செல்வேன் நாயகமே, நானெதைச் செய்தாலும்' எங்கு சென்றாலும் முடிவைக் காணேனே! எல்லாப் பொருள்களின் முடிவு மெங்குளது?"

"மானுடா! நீ சாவிற் கிரையாவது திண்ணம். இயமதர்மனிடம் செல். கஷ்டப்படுவதற்கென்றே பிறந்தவனே! போய் துன்பப்படு. நீ வாழ்வது இன்ப மனுபவிக்க வல்ல. என் ஆணையை பூர்த்தி செய்வதற்கே. கஷ்டப்படு! சாவு! ஆனா லிவற்றிற் கெல்லாம் நீ சிறிதுமஞ்சாது, நிலை குலையாது, நீ எவ்வாறு இருக்க வேண்டுமோ, அவ்விதமிருப்பாய்—ஓர் மனிதன் போல்.

வாய் வீரம் வேண்டாம்; கர்மயோகியாய் இரு.

கவிஞன் அநுபவிக்கின்றான். ஜனனீ ஜன்ம பூமியின் மீது அவன் கொண்ட அன்பைக் காட்டுகிறது இப் பாடல்!

நாம் பிறந்த நாட்டைத் தந்தையர் நாடென் றழைப்பானேன்? எழுதுகையில் பிழை யேற்படக் கூடாதென்பதற்காக 'தந்தையர்' என்ற பதத்தைக் கவிஞன் அமைத்திருக்கலா மென்பதற்குச் சந்தேக மில்லை யெனினும், பொருளை நோக்கினாலும் அனுபவபூர்வமாக அதன் உண்மையைக் கவனித்தாலும் நாம் பரவசமடைவோம்.

எப்பொழுதுமே இந்தியராகிய நாம் பிதுராஜ்ஜிதமான பொருளின் மீதே உரிமை பாராட்டுகின்றோம். தந்தையின் முன்னோர்களின் இழந்த நிலத்தின் மீது ஏழு தலைமுறையானாலும் வாதாடிப் பெறுவதற்குச் சட்டபூர்வமான பாத்தியதை யுண்டு. தாயின் முன்னோர்களின் நிலமென்றால் நமக்கு உரிமையில்லை. இது நந் தந்தைக்குப் பாத்தியமான தென்றால், அதை நாம் எதிர்காலத்தில் அனுபவிக்கப் போகிறோம் என்று எண்ணும் பொழுது நமது நெஞ்சம் கர்வத்தால் பூரிக்கின்றது; அதன் மீது ஒரு சிரத்தை உண்டாகின்றது. அதை யிழந்திருந்தால் எப்படியும் அடைந்துவிட வேண்டுமென்று போராடத் தொடங்குகின்றோம். அப்பொழுது நமக்கு வீரமுண்டாகின்றது. வீரத்தின் பயனாக ஒரு சக்தி நாம் விடும் மூச்சுக் காற்றில் தோன்றுகிறது. நமது மூதாதையர்கள் ஆண்டு வந்த நாட்டின் உரிமை நமக்கில்லை. அதை யெப்படியும் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்ற தீவிர உணர்ச்சி—ஒரு வீர உணர்ச்சி—தேசீய கவிஞனுக்கு உண்டாகுமானால் ஏன் அவனது மூச்சுக் காற்றில் ஓர் சக்தி தோன்றுவதை அறிந்துகொள்ள மாட்டான்?

‘கையினில் தனுவுமுண்டு; காண்டீவம் அதன் பேர்" என்று முழங்கி யெழுந்த அர்ஜுனனின் மூச்சுக் காற்றிலும் அண்டத்தைக் குலுக்க வல்ல ஓர் சக்தி யடங்கி நின்றது என்றால் வெறும் புகழ்ச்சி யில்லை. அவனும்—நமது கவிஞனைப் போன்று—நம்மைப் போன்று—நாடிழந்து நின்ற தருணத்தில் காட்டிய ஓர் பேருணர்ச்சி. சாதாரண மனிதனொருவன் தன் வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை, ஒரு கவிஞன் தன்னுடைய ஆற்றலினால் வெகு யெளிதில் மானசீகமாக அனுபவித்து மிக வெளிய மொழியில் சாமர்த்தியமாக வெளியிட்டு விடுகின்றான். நெஞ்சிலுரமும், நேர்மைத் திறமும் வாய்க்கப் பெற்ற தேச பக்தனுக்குத்தான் "எங்கள் தந்தையர் நாடு" என்று சொல்லும் பொழுது அவன் விடும் மூச்சுக் காற்றில் ஒரு சக்தி பிறக்கும். காலஞ் சென்ற நமது சுப்ரமண்ய பாரதியாரும் அத்தகைய மனிதர்.

உங்கள் பிற்கால வாழ்வையும், தற்கால நிலையையும் எண்ணிப் பாருங்கள்.

197896

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமிழ் உத்தமபாளையம் ஆனந்தா பிரசில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 9,00,000 பங்குகளின்பேரில்
27,00,000 ரூ மூலதனம்

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, காராச்சி, டில்லி, கான் பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவ தோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும் நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும், இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையு மடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்),
கோம்பை, மதுரை ஜில்லா.

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்

நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.
"தமிழ் நாடு" ஆசிரியர்

டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

கோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.
விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. **1—4—0.**

தபாற் செலவு வேறு

ராட்டூர்-வீரன்- துர்க்கா தாஸ்

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அவரது நாடகங்க ளெத்தனையிலும்

<u>இத் துர்க்கா தாஸே முதன்மையானது.</u>

ஆரம்ப முதல் இறுதி வரை

அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் $\frac{1}{8}$ சைஸ்

380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. **1—4—0.**
தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.